42

TAMIL MANI KOVAI

BOOK I

FORM IV

1245

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JAN 1938

BY

VIDWAN C. KUPPUSWAMY ALWAR,
TAMIL PANDIT,
ST. JOSEPH'S HIGH SCHOOL, TRICHY.

1235

E. M. GOPALAKRISHNA KONE
MADURA :: :: MADRAS

Copyright] 1937 [Price As. 12

தமிழ் மணிக் கோவை

முதற்கோவை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JAN 1938
MADRAS

தொகுப்பாசிரியர்:

வித்துவான் சி. குப்புசாமி ஆழ்வார்,

தமிழாசிரியர்,

செயிண்டு ஜோஸப்புக் கலாசாலை, திருச்சிராப்பள்ளி

1235

*

பதிப்பாளர்:

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை :: சென்னை

[பதிப்புரிமை] 1937 [விலை அணா 12

முதற் பதிப்பு
:: 1937 ::

முகவுரை

தமிழ் நாட்டிலுள்ள ஆங்கிலக் கலாசாலைகளில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கென்று தமிழ்ப்பாட புத்தகங்கள் புதியன புதியனவாக வெளி வந்துகொண்டிருக்கின்றன. புதுமை மணங் கமழ மேலும் பல புதிய புத்தகங்கள் வெளிவருவதைத் தமிழ் வளர்ச்சி கருதும் அறிஞர்கள் ஆதரிப்பார்களென்பது ஒருதலை.

'தமிழ் மணிக் கோவை' என்னும் இப்புத்தகம் சென்னை அரசியலார் பாடத் திட்டத்தின்படியும், எஸ். எஸ். எல். ஸி. தமிழ்ப்பாட புத்தக அமைப்பையொட்டியும், தேசீயம், இலக்கியம், வரலாறு முதலிய பல துறைப் பொருள்களைப்பற்றி ஆராய்ச்சி மிகுந்த அறிஞர்கள் வரைந்துள்ள அருங்கட்டுரைகளைக் கொண்டும் வெளிவருகிறதால், இதனை அனைவரும் ஆதரிப்பரென்று நம்புகிறேன்.

இப்புத்தகத்தில் வெளி வந்துள்ள அரிய கட்டுரைகளைப் பாடங்களாகச் சேர்த்துக்கொள்ள அன்புடன் அனுமதியளித்த அறிஞர்களுக்கும், அன்பர்களுக்கும், எனது மனமுவந்த நன்றி அறிதலை மிக்க தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

'சுற்றுப் பிரயாணம்' என்னும் அரிய கட்டுரைக்கு அதன் ஆசிரியரிடமிருந்து அனுமதி வாங்கியளித்த என் நண்பர் வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார் அவர்களுக்கும், இப்புத்தகத்தை அன்புடன் ஏற்று வெளியிட முன் வந்த திரு. இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனார் அவர்களுக்கும் எனது உள்ளார்ந்த நன்றி உரியதாகும்.

திருச்சிராப்பள்ளி,
20—11—'37

சி. குப்புசாமி ஆழ்வார்

குறிப்பு

இப்புத்தகத்தில் வெளிவந்துள்ள மாணவர் வாழ்க்கையின் குறிக்கோள், வெண்ணெய் அண்ணல், விசயராகவ நாயக்கர் ஆகிய மூன்று கட்டுரைகளும் 'செந்தமிழ்ச் செல்வி'ப் பத்திரிகையில் வெளி வந்துள்ளனவாகும். இவை, இவற்றின் ஆசிரியர் அனுமதி பெற்று இங்குப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன.

'நட்பு' என்னுங் கட்டுரை, 'தமிழ்ப் பொழில்' பத்திரிகையில் வெளி வந்துள்ளது. இது, பொழிற்றெண்டராகிய செந்தமிழ்ப் புரவலர் இராவ் சாகிப் தா. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் அன்பார்ந்த அனுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பெற்றது.

சி. கு.

பொருளடக்கம்

செய்யுட்பகுதி

பொருள் — பக்கம்

I. வாழ்த்து :

1. கடவுள் வாழ்த்து 1
2. கலை மகள் வாழ்த்து 2
3. தமிழ்த்தாய் வாழ்த்து 2

II. அறவுரை :

1. திருக்குறள் 4
2. நீதி நெறி விளக்கம் 5
3. சோமேசர் முதுமொழி வெண்பா 6
4. சிறு பஞ்ச மூலம் 7
5. அறநெறிச் சாரம் 8
6. பழமொழி 9
7. நாலடியார் 10

III. தொடர் நிலைச் செய்யுள் :

1. நளவெண்பா—சுயம்வர காண்டம் ... 12
2. கம்ப ராமாயணம்—மந்தரை சூழ்ச்சிப் படலம் 17
3. குசேலோபாக்கியானம்
—குசேலர் மேற்கடலடைந்த அத்தியாயம் 24
4. பாரதம்—வாசுதேவனைப் படைத்துணை
அழைத்த சருக்கம் 30
5. பெரிய புராணம்
—மெய்ப்பொருள் நாயனர் புராணம் 36

IV. சிறு நூல்கள் : 44

V. பல்வகைப் பொருள் :

1. வேளாளர் சிறப்பு 46
2. உடற்பயிற்சி 47
3. தமிழ் மொழியின் சிறப்பு 49

பொருள் பக்கம்

4. சோலைக் காட்சி 50
5. பாரதியார் பாடல் 51

VI. தனிப்பாடல்கள் : 52

VII. பொன் மொழிகள் : 54

உரை நடைப் பகுதி

1. மாணவர் வாழ்க்கையின் குறிக்கோள் 55
[திரு. மா. வே. நெல்லையப்பபிள்ளை அவர்கள், பி. ஏ.]

2. பூண்டி அரங்கநாத முதலியார்.... 63
[திரு. எஸ். அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள், எம். ஏ., எல். டி.,]

3. தமிழ் வளர்த்த தந்தையார் 75
[வித்துவான் எஸ். குருஸ் அந்தோனி அவர்கள்]

4. சுற்றுப் பிரயாணம் 81
[திரு. அ. சிதம்பரநாதஞ்செட்டியார் அவர்கள், எம். ஏ.]

5. வெண்ணெய் அண்ணல் 85
[வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள், பி. ஓ எல்.]

6. கிராமக் கைத்தொழில்கள் 91
[திரு. ஜே. எஸ். பொன்னையா அவர்கள், எம். ஏ.]

7. நட்பு 96
[வித்துவான் R. நரசிம்மலு நாயுடு அவர்கள்]

8. முகம்மது நபி 104
[திரு. பா. தாவூத்ஷா அவர்கள், பி. ஏ.,]

9. உடற்பயிற்சியும் வலிமையும் 109
[சாண்டோ லெ. சோமசுந்தரஞ்செட்டியார் அவர்கள்]

10. விசயராகவ நாயக்கர் 116
[வித்துவான் கி. சாமிக்கண்ணு முதலியார் அவர்கள்]

செய்யுட்பாடக் குறிப்புரை 121

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 - JAN 1938
MADRAS

தமிழ் மணிக் கோவை

முதற் கோவை

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

திருவாசகம்

1. வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!

—மாணிக்க வாசகர்

தேவாரம்

2. பருதி யானைப் பல்வேறு சமயங்கள்
கருதி யானைக் கண்டார்மன மேவிய
பிரிதி யானைப் பிறரறி யாததோர்
சுருதி யானைக் கண்டீர்தொழற் பாலதே.—திருநாவுக்கரசர்

திருவாய்மொழி

3. உயர்வற வுயர்நலம் உடையவன் எவனவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
துயரறு சுடரடி தொழுதெழல் மனனே! —நம்மாழ்வார்

திருவருட்பா

4. கண்ணுள் மணிபோல் கருதுகின்ற நல்லோரை
எண்ணும் கணமும்விடுத் தேகாத விண்ணமுதே!
உண்ணும் உணவுக்கும் உடைக்குமுயன் றோடுகின்ற
மண்ணுலகத் தென்றன் மயக்கறுத்தல் ஆகாதோ?

—இராமலிங்க அடிகள்

---

2. கலைமகள் வாழ்த்து

சரசுவதியந்தாதி

5. ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர். —கம்பர்

திருவிளையாடற் புராணம்

6. ஆடகன்நா நின்றுறையும் அன்னமே! நின்னுடைய
பாடகமும் சீறடியும் பற்றினேன்—தேடரிய
அற்புதமே! அம்மே! அணங்கே! மணநாறும்
கற்பகமே! நாயேனைக் கா. —பெரும்பற்றப் புலியூர் நம்பி

---

3. தமிழ்த்தாய் வாழ்த்து

7. பொழுது புலர்ந்தது யாஞ்செய்த தவத்தால்;
புன்மை இருட்கணம் போயின முன்பே;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் குன்றன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்துநிற் கின்றோம்;
முழுவதும் எமையுடை யாய்!உயர் நடையாய்!
முகமலர்ந் தருள்மொழி புகல்வது மறந்தே
விழிதுயில் கின்றதோ? இன்றமிழ்த் தாயே!
வியப்பிது காண்பள்ளி யெழுந்தரு ளாயே!

—பண்டித அ. கந்தசாமி பிள்ளை

8\. வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே!
தேனார்ந்த தீஞ்சுனைசால் திருமாலின் குன்றம்
தென்குமரி ஆயிடைநற் செங்கோல்கொள் செல்வீ!
கானார்ந்த தேனே!கற் கண்டே!நற் கனியே!
கண்ணே!கண் மணியே!அக் கட்புலஞ்சேர் தேவீ!
ஆனாத நூற்கடலை அளித்தருளும அமிழ்தே!
அம்மே!நின் சீர்ப்பெருமை அறைதலியார்க் கெளிதே!

—ரா. வேங்கடாசலம் பிள்ளை

II. அறவுரை

1. திருக்குறள்

கற்றலும் அதன் வழி நிற்றலும்

1. கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கற்றூர் உயர்வும் கல்லார் தாழ்வும்

2. கண்ணுடையர் என்பவர் கற்ரூேர் ; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

அறிவின் சிறப்பு

3. அறிவுடையார் எல்லாம் உடையார் ; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

இனத்தால் அறிவு திரிதல்

4. நிலத்தியல்பால் நீர்திரிந் தற்ருகும் ; மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு.

ஆராய்ந்து செய்தல்

5. எண்ணித் துணிக கருமம் ; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு.

முயற்சியின் பெருமை

6. முயற்சி திருவினை ஆக்கும் ; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

பிறப்பினல் சிறப்பில்லை.

7. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் ; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

உழுதொழிற் சிறப்பு

8. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

நீண்ட வாழ்க்கையின் வழி

9. அற்றால் அளவறிந் துண்க ; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு. —திருவள்ளுவர்

---

2. நீதி நெறி விளக்கம்

கற்றவற்றைப் போற்றுதல்

1. வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்(கு)
எய்த்துப் பொருள்செய் திடல்.

பெரியோர் பணிவு

2. ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப :—தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலியதன்றே தாழும் துலைக்கு?

தன்னைப் புகழ்தல் தகாது.

3. தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்;—தன்னை
வியவாமை அன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை அன்றே நலம்?

பெருமை பெறுதற்குரிய வழி

4. பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு:—பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல்.

உட்பகையை ஒழிக்கும் உபாயம்

5. புறம்நட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேருதல் வேண்டும் ;—கழிபெருங்
கண்ணேட்டம் செய்யேல் ; கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து. —குமர குருபர சுவாமிகள்

---

3. சோமேசர் முதுமொழி வெண்பா

அன்புடைமை

1. தோன்ரு வகைகரந்தும் தோன்றலேக்கண் டுள்நெகிழ்ந்து
தோன்றநின்ருன் முன்புநளன் சோமேசா!--தோன்றுகின்ற
அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

ஒழுக்கம் உடைமை

2. தீயனவே சொல்லும் சிசுபாலன் முன்புகண்ணன்
தூயதலாச் சொல்லுரையான் சோமேசா!—ஆயின்,
ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

புகழ்

3. போசன் கவிஞருக்கே போதப் பரிந்தளித்துத்
தூசிலாக் கீர்த்திகொண்டான் சோமேசா!--ஆசையுடன்
ஈதல் இசைபட வாழ்தல் ; அதுவல்ல(து)
ஊதியம் இல்லே உயிர்க்கு.

வெகுளாமை

4. பல்லவர்கோன் வந்து பணியக் கருணேசெய்தார்
தொல்லேநெறி வாகீசர் சோமேசா!—கொல்ல
இணரெரி தோய்வன்ன இன்ன செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

கொல்லாமை

5. வேந்துமகன் தேர்க்கால் விடலஞ்சி மந்திரிதான்
சோர்ந்துதன தாவிவிட்டான் சோமேசா!-ஆய்ந்துணர்ந்தோர்
தன்னுயிர் நீப்பினும் செய்யற்க, தான்பிறி(து)
இன்னுயிர் நீக்கும் வினை. —சிவஞான முனிவர்

---

4. சிறு பஞ்ச மூலம்

இயமன் போல இன்னல் விளைப்பன

1. சிலம்பிக்குத் தன்சினை கூற்றம் ; நீள்கோடு
விலங்கிற்குக் கூற்றம் ; மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்றமாம் ; ஞெண்டிற்குத் தன்பார்ப்பு ;
நாவிற்கு நன்றல் வசை.

பெருமை சிறுமை முதலியன

2. பிழைத்தல் பொறுத்தல் பெருமை ; சிறுமை
இழைத்ததீங் கெண்ணி இருத்தல் ;—இழைத்த
பகைகெட வாழ்வதும், பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று.

கற்றவர் கல்லாதார் முதலியோர்

3. தேவரே கற்றவர் ; கல்லாதார் தேருங்கால்
பூதரே ; முன்பொருள் செய்யாதார் - ஆதரே ;
‘ துன்பமி லேம்பண்டு யாமே வனப்புடையேம்,’
என்பார் இருகால் எருது.

உறுதி மொழிகள்

4. பெருங்குணத்தார்ச் சேர்மின் ; பிறன்பொருள்வௌ [வன்மின் ;
கருங்குணத்தார் கேண்மை கழிமின் ;—ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின் ; வருங்காலன் திண்ணிதே ;
வாய்ச்சொல்லே அன்று ; வழக்கு.

மனிதர் இயற்கை

5. ஒருவன் அறிவானும் எல்லாம்யா தொன்றும்
ஒருவன் அறியா தவனும் ;—ஒருவன்
குணனடங்கக் குற்றமில் லானும், ஒருவன்
கணனடங்கக் கற்றானும் இல். —காரியாசான்

---

5. அறநெறிச் சாரம்

நடு நிலைமை

1. காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே ; - காய்வதன்கண்
உற்ற குணந்தோன்றா தாகும் ; உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்.

தற்புகழ்தல் தகாது.

2. 'பலகற்றோம் யாம்!' என்று தற்புகழ வேண்டா ;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும் ;
சிலகற்றார் கண்ணும் உளவாம், பலகற்றார்க்(கு)
அச்சாணி அன்னதோர் சொல்.

புறம் பழித்தல் இழிவு.

3. முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப் - பின்னின்(று)
இழித்துரைக்குஞ் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை.

இளமையில் அறஞ்செய்தல்

4. இன்சொல் விளைநிலனா, ஈதலே வித்தாக,
வன்சொல் களைகட்டு, வாய்மை எருவட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

உண்மைச் சுற்றத்தார்

5. நல்லறம் எந்தை ; நிறைஎம்மை ; நன்குணரும்
கல்வியென் தோழன் ; துணிவெம்பி ;—அல்லாத
பொய்ச்சுற்றத் தாரும் பொருளோ, பொருளாக
இச்சுற்றத் தாரில் எனக்கு ? —முனைப்பாடியார்

---

6. பழமொழி

கல்வியின் சிறப்பு

1. ஆற்றவும் கற்ருர் அறிவுடையார் ; அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை ;—அந்நாடு
வேற்றுநா டாகா ; தமவேயாம் ; ஆயினல்,
ஆற்றுணு வேண்டுவ தில்.

கேள்வியின் சிறப்பு

2. 'உணற்கினிய இன்னீர் பிறிதுழி இல்,' என்னும்
கிணற்றகத்துத் தேரைபோல் ஆகார்—கணக்கினை
முற்றப் பகலும் முனியா தினிதோதிக்
கற்றலின் கேட்டலே நன்று.

குல வித்தை கல்லாமல் வருதல்

3. 'உரைமுடிவு காணுன் இளமையோன்,' என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் : குலவிச்சை
கல்லாமல் பாகம் படும்.

இன்னு செயினும் வெகுளாமை

4. இறப்பச் சிறியவர் இன்ன செயினும்
பிறப்பினல் மாண்டார் வெகுளார் :—திறத்துள்ளி
நல்ல விறகின் அடினும் நனிவெந்நீர்
இல்லம் சுடுகலா வாறு.

மறைவிலும் தீவினை செய்யாமை

5. எனக்குத் தகவன்ருல் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானுய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும்: காணர்
எனச்செய்யார் மாணு வினை. —மூன்றுறையரையர்

---

7. நாலடியார்

அடக்கம், கோடை, பொறுமை

1. இளையான் அடக்கம் அடக்கம் ; கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன் ;—எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

இயல்வது கூறல் இகழ்ச்சி அன்று.

2. இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று ; வையத் தியற்கை ;—நசையழுங்க
நின்ரேடிப் பொய்த்தல் நிரைதொடீஇ ! செய்ந்நன்றி
கொன்ருரில் குற்றம் உடைத்து.

தக்கார் தகவிலார் தன்மை

3. தக்காரும் தக்கவர் அல்லாரும் தந்நீர்மை
எக்காலும் குன்றல் இலராவர் :—அக்காரம்
யாவரே தின்னினும் கையாதாம் ; கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு.

பெரியார் நட்பும் சிறியார் நட்பும்

4. பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் ;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

கல்வியின் சிறப்பு

5. இம்மை பயக்குமால் ; ஈயக் குறைவின்றால் ;
தம்மை விளக்குமால் ; தாமுளராக் கேடின்றால் ;
எம்மை உலகத்தும் யாங்காணேம், கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

கற்றார் உயர்வு

6. களர்நிலத் துப்பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர் :
கடைநிலத்தோர் ஆயினும், கற்றறிந் தோரைத்
தலைநிலத்து வைக்கப் படும்.

கற்றாரைச் சேர்ந்தொழுகலின் நன்மை

7. கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்
நல்லறிவு நாளும் தலைப்படுவர் :—தொல்சிறப்பின்
ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

பெரியோர் சேர்க்கை பெருமை அளிக்கும்.

8. பாலோ டளாயநீர் பாலாகும் அல்லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம் :—தேரின்,
சிறியார் சிறுமையும் தோன்றாதாம், நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

தீயோர் சேர்க்கை தீமை அளிக்கும்.

9. மனத்தான் மறுவில ரேனும்,தாம் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர் :—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனம் தீப்பட்டக் கால்.

பிறந்த குலத்தால் பெருமை இல்லை.

10. நல்ல குலமென்றும் தீய குலமென்றும்
சொல்லள வல்லால் பொருளில்லை ;—தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ, தவம்கல்வி ஆள்வினை
என்றிவற்றான் ஆகும் குலம்.

—சமண முனிவர்

III. தொடர் நிலைச் செய்யுள்

1. நளவெண்பா

[சுயம்வர காண்டம்]

நிடத நாட்டுச் சிறப்பு

1. காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் தளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலும் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.

மாவிந்த நகர்ச் சிறப்பு

2. மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகும் தடந்தோளான்—காமருபூந்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி.

நளன் பூஞ்சோலையைச் சேரல்

3. வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனாடி வண்டு சிறகுலர்த்தும் நீர்நாடன்
பூநாடிச் சோலை புக.

நளன்முன் அன்னம் தோன்றல்

4. நீணிறத்தால் சோலை நிறம்பெயர, நீடியதன்
தாணிறத்தால் பொய்கைத் தலஞ்சிவப்ப-மாணிறத்தான்
முன்னப்புள் தோன்றும் முளரித் தலைவைகும்
அன்னப்புள் தோன்றிற்றே ஆங்கு.

அன்னத்தைப் பிடித்துத் தரும்படி நளன் கூறுதல்

5\. 'பேதை! மடவன்னந் தன்னைப் பிழையாமல்'
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழும் கங்கைநீர் நாடன்
'பிடித்துத்தா,' என்றான் பெயர்ந்து.

அன்னத்தின் கலக்கம்

6\. அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்னம்
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடி;
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

நளன் அன்னத்தைத் தேற்றுதல்

7\. 'அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும்
வஞ்சி அனையார் மடநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண்,' என்றான், களிவண்டு
மாணப் பிடித்ததார் மன்.

அன்னம் தமயந்தியின் குணத்தையும் அழகையும் தெரிவித்தல்

8\. 'நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா
ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை அரசு.'

அன்னம் தமயந்தியிடம் சேர்தல்

9\. மன்னன் விடுத்த வடிவில் திகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி அருகணைய,—நன்னுதலும்
தன்னுடல் விட்டுத் தனியிடம்சேர்ந் தாங்கதனை
'என்னுடல் சொல்'என்றாள் 'ஈங்கு.'

அன்னம் நளனது சிறப்பைத் தமயந்தியிடம் எடுத்துரைத்தல்

10\. 'செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான்,
[மங்கையர்கள்
தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்,—மெய்ம்மை

நளனென்பான், மேனிலத்தும் நானிலத்தும் மிக்கான்
உளனென்பான் வேந்தன் உனக்கு.'

தமயந்தியின் மகிழ்ச்சி

11. 'வாவி உறையும் மடவனமே! என்னுடைய
ஆவி உவந்தளித்தாய் ஆதியால்—காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி,' என்
பார்வேந்தன் பாவை பதைத்து. [றுரைத்தாள்,

வீமன் தமயந்தியின் சுயம்வரத்தை அரசர்க்கு அறிவிக்கச்செய்தல்

12. 'மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம்
எங்கும் அறைவெ'கன் றியம்பினன்—பைங்கமுகின்
கூந்தல்மேல் கங்கைக் கொழுந்தோடும் நன்னுடன்
வேந்தர்மேல் தூதோட விட்டு.

இந்திரன் நளனை ஏவலுக்கு இசைவித்தல்

13. காவல் குடைவேந்தைக் கண்ணுற்று விண்ணவர்கோன்
'ஏவல் தொழிலுக்கிசை,'என்றான் ;—ஏவற்கு
மன்னவனும நேர்ந்தான், மனத்தினல் மற்றதனை
இன்னதென ஓரா திசைந்து.

இந்திரன் நளனைத் தமயந்தியிடம் தூதனுப்பல்

14. 'செங்கண் மதயானைத் தேர்வேந்தே! தேமாலை
எங்களிலே சூட்ட இயல்வீமன்—மங்கைபால்
தூதாக,' என்றான்;அத் தோகையைத்தன் ஆகத்தால்
கோதாக வென்றான் அக் கோ.

நளனை உருக்கரந்து செல்லுமாறு இந்திரன் ஏவுதல்

15. வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தால் மால்வரையைப்
போர்வெஞ் சிறகறுத்த பொற்றோளான்-'யாருமுனைக்
காணர் ;போய் மற்றவளைக் காண்' என்றான், கார்வண்
பாணுறும் தாரானைப் பார்த்து. [டின்

தமயந்தி நளனை 'நீ யார்?' என்று வினவுதல்

16. 'காவல் கடந்தெங்கள் கன்னிமா டம்புகுந்தாய்;
யாவனோ? விஞ்சைக் கிறைவனோ?—தேவனோ?
உள்ளவா சொல்,' என்றாள், ஊசல் குழைமீது
வெள்ளவாள் நீர்சோர விட்டு.

இந்திரனுக்கு மாலையிடுமாறு நளன் தமயந்தியிடம் கூறல்

17. 'என்னுரையை யாதென் றிகழா திமையவர்வாழ்
பொன்னுலகம் காக்கும் புரவலனை—மென்மாலை
சூட்டுவாய்,' என்றான், தொடையில்தேன் தும்பிக்கே
ஊட்டுவான் எல்லாம் உரைத்து.

தமயந்தியின் மறு மொழி

18. போதரிக்கண் மாதராள், 'பொன்மாலை சூட்டத்தான்
ஆதரித்தார் தம்மோ டவையகத்தே—சோதிச்
செழுந்தரள வெண்குடையாய்! தேவர்களும் நீயும்
எழுந்தருள்க,' என்றாள் எடுத்து.

நளன் இந்திரனிடம் தமயந்தியின் மொழிகளைத் தெரிவித்தல்

19. விண்ணவர்தம் ஏவலுடன் வீமன் திருமகள்பால்
நண்ணு புகழ்நளனும் நன்குரைத்த—பெண்ணணங்கின்
வன்மொழியும் தேவர் மனமகிழத் தான்மொழிந்த
மென்மொழியும் சென்றுரைத்தான் மீண்டு.

தேவர்கள் நளனுக்கு வரமளித்தல்

20. 'அங்கி அமுதம்நீர் அம்பூ அணியாடை
எங்குநீ வேண்டினமற் றவ்விடத்தே—சங்கையறப்
பெற்றாய்!' எனவருணன் ஆகண் டலன்தருமன்
மற்றோரும் ஈந்தார் வரம்.

மாலைக்கால வருணனை

21. மல்லிகையே வெண்சங்கா வண்டூத, வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப,—முல்லையெனும்

மென்மாலை தோளசைய, மெல்ல நடந்ததே,
புன்மாலை அந்திப் பொழுது.

தமயந்தியின் சுயம்வரத்திற்கு மன்னர்கள் வருதல்

22. முரைசெறிந்த நாளேழும் முற்றியபின் கொற்றம்
வரைசெறிந்த தோள்மன்னர் வந்தார்—விரைசெறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையும்
காலை முரசும் கலந்து.

தமயந்தி சுயம்வர மண்டபம் புகுதல்

23. மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னம் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று.

தோழி தமயந்திக்கு அரசர்களை அறிவித்தல்

24. மன்னர் குலமும் பெயரும் வளநாடும்
இன்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்,
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து.

குரு நாட்டு மன்னன் சிறப்பு

25. 'தெரியில் இவன்கண்டாய் செங்கழுநீர் மொட்டை
அரவின் பசுந்தலையென் றஞ்சி—இரவெல்லாம்
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புள் தாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன்.'

கோசல நாட்டரசன் பெருமை

26. 'அன்னம் துயிலெழுப்ப அந்தா மரைவயலில்
செந்நெல் அரிவார், சினையாமை—வன்முதுகில்
கூனிரும்பு தீட்டும் குலக்கோ சலநாடன்
தேனிருந்த சொல்லாய்! இச் சேய்.'

காந்தார நாட்டு வேந்தன் மாண்பு

27. 'மாநீர் நெடுங்கயத்து வள்ளைக் கொடிமீது
தானேறும் அன்னம் தனிக்கயிற்றில்—போம்நீள்
கழைக்கோ தையரேய்க்கும் காந்தார நாடன்,
மழைக்கோதை மானே! இம் மன்.'

தமயந்தி நளனுருவாயிருந்த தேவர்களைக் கண்டு மயங்கல்

28. காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார் ; பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணுநின்(று)
ஊசலா டுற்றாள் உளம்.

தமயந்தி நளனை அறிதல்

29. கண்ணிமைத்த லால், அடிகள் காசினியில் தோய்தலால்,
வண்ண மலர்மாலை வாடுதலால்,—எண்ணி,
நறுந்தா மரைவிரும்பும் நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை ஆங்கு.

தமயந்தி நளனுக்கு மாலை சூட்டல்

30. விண்ணரசர் எல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலம் களிகூர,—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட, வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். —புகழேந்திப் புலவர்

---

2. கம்ப ராமாயணம்

[மந்தரை சூழ்ச்சிப் படலம்]

கூனி வஞ்சமும் கைகேயி நெஞ்சமும்

கூனியின் தோற்றம்

1. அந்நகர் அணிவுறும் அமலை வானவர்
பொன்னகர் இயல்பெனப் பொலியும் எல்லையில்
இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்.

கூனியின் கோபம்

2. தோன்றிய கூனியும் துடிக்கும் நெஞ்சினள் ;
ஊன்றிய வெகுளியாள் ; உலைக்கும் உள்ளத்தாள் ;
கான்றெரி நயனத்தாள் ; கதிக்கும் சொல்லினள் ;
மூன்றுல கினுக்குமோர் இடுக்கண் மூட்டுவாள் ;

கூனி கைகேயியின் அரண்மனை அடைதல்

3. தொண்டைவாய்க் கேகயன் தோகை கோயில்மேல்
மண்டினள் ; வெகுளியின் மடித்த வாயினள் ;
பண்டைநாள் இராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்தன் உள்ளத் துள்ளுவாள்.

கூனி மஞ்சத்திற் கிடந்த கைகேயியைக் காணுதல்

4. நாற்கடல் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடல் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாள்தனை விரைவின் எய்தினள்.

கூனி கைகேயியின் கால்களைத் தீண்டுதல்

5. எய்தியக் கேகயன் மடந்தை ஏடவிழ்
நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினல்
செய்தபேர் உவமைசால் செம்பொன் சீறடி
கய்களில் தீண்டினள், காலக் கோளனள்.

கைகேயி சிறிது கண் விழிக்க, கூனி பேசத் தொடங்கல்

6. தீண்டலும் உணர்ந்தவத் தெய்வக் கற்பினள்
நீண்டகண் அனந்தரும் நீங்கு கிற்றிலள் ;
மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லல் மேயினள் :

'துன்பத்தை அறியாது தூங்குகின்றாய்,' எனல்

7. 'அணங்குவாள் விடவரா அணுகும் எல்லையும்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் திங்கள்போல்

பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவாய் அல்லைநீ உறங்கு வாய்,'என்றாள்.

கைகேயி 'எனக்கு எவ்விடர் வந்தது?' என்று வினுதல்

8. வெவ்விடம் அனையவள் விளம்ப, வேற்கணாள்,
'தெவ்வடு சிலைக்கையென் சிறுவர் செவ்வியர் ;
அவ்வவர் துறைதொறும் அறந்தி றம்பலர் ;
எவ்விடர் எனக்குவந் தடுப்ப தீண்டெ'ன்றாள்.

கைகேயி, 'எனக்கு இடர் வாராது,' என்று கூறுதல்

9. 'பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால் ;
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தஎற் கிடருண் டோ?'என்றாள்.

கூனி, 'நின் பெருமையெல்லாம் போயிற்று,' எனல்

10. ஆழ்ந்தபே ரன்பினாள் அனைய கூறலும்,
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள் :
'வீழ்ந்தது நின்னலம் ; திருவும் வீய்ந்தது ;
வாழ்ந்தனள் கோசலை மதியி னால்,'என்றாள்.

கோசலை பெருமையைக் கைகேயி பாராட்டுதல்

11. அன்னவள் அவ்வுரை உரைப்ப ஆயிழை,
'மன்னவர் மன்னனேல் கணவன் ; மைந்தனேல்
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் ; பார்தனில்
என்னிதன் மேலவட் கெய்தும் வாழ்வெ'ன்றாள்.

கூனி, 'இராமன் நாளை முடி சூடுவோன்,' எனல்

12. 'ஆடவர் நகையுற ஆண்மை மாசுறத்
தாடகை எனும்பெயர்த் தைய லாள்படக்
கோடிய வரிசிலை இராமன் கோமுடி
சூடுவன் நாளை;வாழ் வி'தனச் சொல்லினாள்.

கைகேயியின் மகிழ்ச்சி

13. மாற்றமஃ துரைசெய, மங்கை உள்ளமும்
ஆற்றல்சால் கோசலை அறிவும் ஒத்தவால் ;
வேற்றுமை உற்றிலள் வீரன் தாதைபுக்(கு)
ஏற்றவள் இருதயத் திருக்க வேகொலாம்.

கைகேயி கூனிக்குப் பரிசளித்தல்

14. ஆயபே ரன்பெனும் அளக்கர் ஆர்த்தெழத்
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவள் உவகைபோய் மிகச்சு டர்க்கெலாம்
நாயகம் அனையதோர் மாலை நல்கினள்.

கூனியின் சினம்

15. தெழித்தனள் ; உரப்பினள் ; சிறுக்கண் தீயுக
விழித்தனள் ; வைதனள் ; வெய்து யிர்த்தனள் ;
அழித்தனள் ; அழுதனள் ; அம்பொன் மாலையால்
குழித்தனள் நிலத்தையக் கொடிய கூனியே.

‘நீ துயரப்படச் சம்மதிக்கினும், நான் கோசலையின் தாதியர்க்கு அடிமைசெய்ய உடன்படேன்,’ என்று கூனி கூறுதல்

16. வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியப்
பேதையை, ‘பித்தி!நின் பிறந்த சேயொடும்
நீதுயர் படுக;நான் நெடிதுன் மாற்றவள்
தாதியர்க் காட்செயத் தரிக்கி லேன்!’என்றாள்.

‘இராமனும் சீதையும் சிங்காதனத்தில் இருக்க, பரதன் நிலத்தில் இருக்க நேரும்,’ எனல்

17. ‘சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும்
நிவந்தஆ தனத்தினி திருப்ப, நின்மகன்
அவந்தனய் வெறுநிலத் திருக்கல் ஆனபோ(து)
உவந்தவா றென்?இதற் குறுதி யாதெ’ன்றாள்.

'பரதனைக் கேகய நாட்டிற்கு அனுப்பியதன் காரணம் இப்போழுது விளங்கிற்று,' எனல்

18. 'பாக்கியம் புரிந்திலாப் பரதன் தன்னைப்பண்(டு)
ஆக்கிய பொலன்கழல் அரசன் ஆணையால்
தேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப்
போக்கிய பொருளெனக் கின்று போந்ததால்.'

கூனி கைகேயியை இடித்துரைத்தல்

19. 'அரைசரில் பிறந்துபின் அரச ரில்வளர்ந்(து)
அரைசரில் புகுந்துபேர் அரசி யானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய் ;
உரைசெயக் கேட்கிலை ; உணர்தி யோ?'என்றாள்.

கைகேயியின் கோபம்

20. வாய்க யப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய்க னல்தலை நெய்சொரிந் தெனக்கதம் கனற்ற,
கேக யர்க்கிறை திருமகள் கிளரிள வரிகள்
தோய்கயற்கண்கள் சிவப்புற நோக்கினள் சொல்லும் :

கைகேயி கூனியைக் கடிந்து பேசுதல்

21. 'எனக்கு நல்லையும் அல்லை;நீ என்மகன் பரதன்
தனக்கு நல்லையும் அல்லை;அத் தன்மமே நோக்கில்,
உனக்கு நல்லையும் அல்லை;வந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்!'

'குலவோழுக்கம் தவறுதல் கூடாது,' என்று கைகேயி தேரிவித்தல்

22. 'பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழேல்
நிறந்தி றம்பினும், நியாயமே திறம்பினும், நெறியின்
திறந்தி றம்பினும், செய்தவம் திறம்பினும், செயிர்தீர்
மறந்தி றம்பினும், வரன்முறை திறம்புதல் வழக்கோ?'

கைகேயி மீண்டும் கூனியைக் கடிந்துரைத்தல்

23. 'போதி! என்னெதிர் நின்று;நின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனன் ; புறஞ்சிலர் அறியின்
நீதி அல்லவும், நெறிமுறை அல்லவும் நினைந்தாய்
ஆதி ; ஆதலின் அறிவிலி அடங்குதி !' என்றாள்.

கூனி கைகேயியை வணங்கிக் கூறுதல்

24. அஞ்சி மந்தரை அகன்றிலள் அம்மொழி கேட்டும் ;
நஞ்சு தீர்க்கினும் தீர்கிலா தநுநலிந் தென்னத்
'தஞ்ச மேயுனக் குறுபொருள் உணர்த்துகை தவிரேன் ;
வஞ்சி போலி!'என் றடிமிசை வீழ்ந்துரை வழங்கும்:

'பரதன் முடி சூடுவதற்கு உரியவனே,' என்று கூனி தெரிவித்தல்

25. 'மூத்த வற்குரித் தரசெனும் முறைமையின் உலகம்
காத்த மன்னனின் இளையனன் றோகடல் வண்ணன் ?
ஏத்து நீள்முடி புனைவதற் கிசைந்தனன் என்றால்,
மீத்த ரும்செல்வம் பரதனை விலக்குமா றெவனோ?'

மாந்தர் 'செல்வம் பெற்றபின் சிந்தனை வேறாகி இன்னல் செய்வர்,' எனல்

26. 'அறனி ரம்பிய அருளுடை அருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம் ;
மறநி னைந்துமை வலிகில ராயினும், மனத்தால்
இறலு றும்படி இயற்றுவர் இடையறா இன்னல்.'

'செல்வமிழந்து சீரழிவாய்,' என்று கூனி கூறுதல்

27. 'தூண்டும் இன்னலும் வறுமையும் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்துனை இரந்தவர்க் கிருநிதி அவளை
வேண்டி ஈதியோ? வெள்குதி யோ?விம்மல் நோயால்
மாண்டு போதியோ? மறுத்தியோ? எங்ஙனம் வாழ்தி?'

'பரதனுக்கு அரசுரிமை இல்லாது போய்விடும்,' எனல்

28. 'கெடுத்தொ ழிந்தனை உனக்கரும் புதவனை; கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒருமகற் கெனவே
கொடுத்த பேரர சவன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம்;பிறர்க் காகுமோ?' என்றாள்.

கைகேயியின் மனம் திரிதல்

29. தீய மந்தரை இவ்வுரை செப்பலும், தேவி
தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின் இமையோர்
மாயை யும்,அவர் பெற்றநல் வரவுண்மை யாலும்
ஆய.அந்தணர் இயற்றிய அருந்தவத் தாலும்.

கைகேயி கூனியிடம் உபாயம் கேட்டல்

30. அனைய தன்மையள் ஆகிய கைகயன் அன்னம்
வினைநி ரம்பிய கூனியை விரும்பினள் நோக்கி,
'எனையு வந்தனை;இனியைஎன் மகனுக்கும்; அனையான்
புனையும் நீள்முடி பெறும்படி புகலுதி !' என்றாள்.

கூனி உபாயம் உரைத்தல்

31. 'நாடி ஒன்றுனக் குரைசெய்வன் நளிர்மணி நகையாய்!
தோடி வர்ந்ததார்ச் சம்பரன் தொலைவுற்ற வேலை
ஆடல் வென்றியான் அருளிய வரமவை இரண்டும்
கோடி!' என்றனள், உள்ளமும் கோடிய கொடியாள்.

'பரதன் நாடாளவும் இராமன் காடாளவும் கேள்,' எனல்

32. 'இருவ ரத்தினில் ஒன்றினல் அரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை ஏழிரு பருவங்கள் பெயர்ந்து
திரித ரச்செய்தி; ஒன்றினல் செழுநிலம் எல்லாம்
ஒருவ ழிப்படும் உன்மகற் குபாயமி'தென்றாள்.

கைகேயி களிப்படைதல்

33. உரைத்த கூனியை உவந்தனள் உயிருறத் தழுவி
நிரைத்த மாமணி ஆரமும் நிதியமும் நீட்டி,

'இரைத்த வேலைசூழ் உலகமென் ஒருமகற் கீந்தாய்;
தரைக்கு நாயகன் தாயினி நீ,' எனத் தணியா

கைகேயி கூனிக்கு விடை கொடுத்து அனுப்புதல்

34. 'நன்று சொல்லினை! நம்பியை நளிர்முடி சூட்டல்
துன்று கானத்தில் இராமனைத் துரத்தல்இவ் விரண்டும்
அன்ற தாமெனில் அரசன்முன் ஆருயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவென்யான்; போதிநீ,' என்றாள்.

—கம்பர்

---

3. குசேலோபாக்கியானம்

[குசேலர் மேற்கடலடைந்த அத்தியாயம்]

குசேலர் திருமணம்

1. திறலியை தவத்திவ் வாறு
திகழ்ந்திடும் குசேலன் என்பான்
உறலியை யத்த வத்திற்(கு)
உதவிசெய் பாக்கு நாளும்
அறலியை கதுப்பி னாளோர்
அணங்கினை வதுவை செய்தான்
மறலிய மன்னர் சென்னி
மணிமுடி இடறும் தாளோய்!

சுசீலையின் மாண்பு

2. மாசிலாக் குலத்து வந்தாள்;
வருவிருந் துவப்ப ஊட்டும்
நேசமிக் குடையாள்; கொண்கன்
நினைப்பறிந் தொழுகு நீராள்;
தேசுறு வாய்மை உள்ளாள்;
சினந்திடல் என்றும் இல்லாள்;
பேசுதிண் கற்பு வாய்ந்தாள்;
பெற்றதே கொண்டு வப்பாள்.

மக்கட்பேறு

3. மலையிட்ட செல்வத் தார்கள்
மகிழவோர் மகவும் தாரான்
அலையிட்ட முள்தாள் செய்ய
அம்புயத் துறைவோன் ; ஓரேழ்
தலையிட்ட இருபான் மைந்தர்த்
தந்தனன் ; பெருமை அன்றோ ?
சிலையிட்ட தழும்பு வாய்ந்த
தெரியல்அம் தடந்தோள் வேந்தே !

குசேலர் வாழ்க்கை

4. இருநிலத் தியாவர் கண்ணும்
ஏற்பதை இகழ்ச்சி என்ன
ஒருவிய உளத்தான், காட்டில்
உதிர்ந்துகொள் வாரு மின்றி
அருகிய நீவா ரப்புல்
தானியம் ஆராய்ந் தாராய்ந்(து)
உருவவொண் ணகத்தாற் கிள்ளி
எடுத்துடன் சேரக்கொண்டு

5. வந்துதன் மனைக்கைந் நீட்ட
வாங்கிமற் றவத்றைக் குற்றி
அந்தமெல் லியல்பா கஞ்செய்(து)
அதிதிக்கோர் பாகம் வைத்துத்
தந்ததன் பங்க யின்று
தவலரும் உவகை பூத்து
மந்திர மறைகட் கெட்டா
மலரடி நினைந்தி ருப்பான்.

சுசீலை குழந்தைகளுக்குக் கஞ்சி வார்த்தலும், அவர்கள் சண்டையிடுதலும்

6. ஒருமகவுக் களித்திடும்போ தொருமகவு
கைநீட்டும் ; முந்தி மேல்வீழ்ந்(து)

இருமகவும் கைநீட்டும் ; மும்மகவும்
கைநீட்டும் ; என்செய் வாளால் !
பொருமிஒரு மகவழும்;கண் பிசைந்தழும்;மற்
றொருமகவு ; புரண்டு வீழாப்
பெருநிலத்திற் கிடந்தழுமற் றொருமக(வு);எங்
ஙனம்சகிப்பாள்? பெரிதும் பாவம் !

கஞ்சி கிடைக்கவில்லை என்று குழந்தைகள் வருந்தல்

7. 'அந்தோ!என் வயிற்றெழுந்த பசியடங்கிற்
றில்லை!'என அழுமால் ஓர்சேய் ;
'சிந்தாத கஞ்சிவார்க் கிலையெனக்கன்
னய் !'எனப்பொய் செப்பும் ஓர்சேய் ;
முந்தார்வத் தொருசேய்மி சையப்புகும்போ(து)
இனியொருசேய் முடுகி ஈர்ப்ப,
நந்தாமற் றச்சேயும் எதிரீர்ப்பச்
சிந்துதற்கு நயக்கும் ஓர்சேய்.

சுசீலை குழந்தைகளைத் தேற்றுதல்

8. இவ்வண்ணம் கலாம்விளைக்கும் மைந்தர்களை
நனிநோக்கி இரங்கி ஏங்கிச்
செவ்வண்ணக் கரதலத்தால் அணைத்துமடித்
தலத்திருத்திச் சிறப்புச் செய்தும்
மைவண்ணக் கண்ணீரைத் துடைத்தும்,முகம்
வெரிந்புறந்தை வந்தும், ஆம்பல்
அவ்வண்ண வாய்முத்தம் கொண்டும்நயந்(து)
ஓர்விதத்தில் ஆற்றல் செய்வாள்.

குழந்தைகள் வினவும் சுசீலை விடையும்

9. 'அடுத்தமனைச் சிறுனொருவன், "இன்றுநம(து)
அகங்கறிஎன் அட்டார்?" என்று
தொடுத்துவினை யினனல்அச் சொற்பொருள்யா(து)
அதுதான்எச் சுவைத்தன் னய்!நீ

எடுத்துரை,'என் றிடுமகவுக் குரைக்கிலது
செய்யெனிலென் செய்வாம் என்று,
'மடுத்தவஃ தறிந்திலேன்,' எனமற்றொன்
றுரைத்ததனை மறக்கச் செய்வாள்.

சுசீலை துயரம்

10. வேறுமனைச் சிறுனயின்ற பக்கணங்கண்(டு)
ஓடிவந்து விழிநீர் வாரச்
சீறுதலி லாதஅனை முகம்பார்த்(து)'இன்
னுன் இன்ன தின்றான் ; என்வாய்
ஊறுதலால் இப்பொழுதே செய்தளித்தி,'
எனவுடுத்த உடைதொட் டீர்க்கும்
தேறுதலில் சிறுமகவை எடுத்துமார்
பிடையணைத்துச் சிந்தை நோவாள்.

குழந்தைகள் அணிகலன் வேண்டுமெனல்

11. 'குண்டலம்மோ திரம்கடகம் சுட்டிஅயல்
மனையார்தம் குழவிக் கிட்டார் ;
புண்டரிகக் கண்அன்னாய்! எனக்குநீ
இடாதிருக்கும் பொறுமை என்னே ?
கண்டெடுத்திப் போதி'டனக் கரைமதலைக்(கு)
இல்லாதான் கடன்தந் தானுக்(கு)
எண்டபச்சொல் வார்த்தையென, 'நாளைக்கு
நாளைக்'கென் றியம்பிச் சோர்வாள்.

வறுமை நிலை

12. சிறியசித மணிப்பூணே அன்றிவே(று)
ஒருபூண்அச் சேய்கட் கில்லை ;
வறியமர நாருரியே உடையன்றி
மற்றுடைகள் மருவல் இல்லை ;

வெறியபொழில் தழைத்தஇலை உண்கலமல்
லாதுகலம் வேறொன் றில்லை ;
குறியமனை வயின்புகுமோர் எறும்பினுக்கும்
ஆங்குணவு கொடுத்தற் கில்லை.

சுசீலையின் பொறுமை

13. இவ்வாறு மிடியென்னும் பெருங்கடலுள்
அழுந்தியுந்தற் கினிமை சான்ற
செவ்வாய்மை அந்தணனை வெறுத்துரையாள் ;
அலர்மொழிகள் சிறிதுஞ் செப்பாள் ;
துவ்வாமை மைந்தர்கள்பால் மறந்துமியற்
றாள்;அவள்தன் சுகுணம் என்னே !
'எவ்வாறித் துயர்க்கடல்நீந் துவம்!'எனுமோர்
எண்ணமுளத் தென்றும் உண்டால்.

கண்ணனிடம் சென்று பொருள் பெற்று வருமாறு சுசீலை வேண்டுதல்

14. 'யாதவர் குலத்தில் தோன்றிய அரசர்
யாவர்க்கும் அதிபனும் இணையில்
மாதவ னுடன்நீ பல்கலைக் கடலை
வாய்மடுத் தனையென வகுப்பார் ;
ஆதலின், அப்பீ தாம்பரன் மருங்கில்
அணைந்தவன் பாற்பெருஞ் செல்வம்
தீதறக் கொண்டு கொடுத்துநம் சிறுவர்
செல்லல்நோய் தவிர்க்குதல் வேண்டும்.'

குசேலர் 'கண்ணனுக்குக் கையுறை கொண்டு செல்ல வேண்டும்,' எனல்

15. 'எழுக டற்கொரு புன்னுனிப் பனித்துளி
என்னுவ கையைச்செய்யும்
கொழும லைத்துணைத் தேவுக்கம் மலைத்துணை
கொண்டுபோற் றிடலுண்டோ ?

செழும திக்குச்சின் னூலிழை பறித்திட்டுச்
சிந்தித்த துறல்போல
முழுமு தற்குமே தாவது கையுறை
கொண்டுமுன் னுறல்வேண்டும்.'

சுசீலை அவல் சேர்த்தல்

16. என்றுரைத்த கொழுநனுரை கேட்டுமகிழ்ந்(து)
'இதற்கென்னே செயல்!'என் றெண்ணி,
அன்றுமுதல் உபவாசம் தானிருந்து,
மாமுனிவன் அரிதில் தேடி
நன்றளிக்கும் நெல்லினில்தன் ஒருபாகம்
வேறெடுத்து நலக்கச் சேர்த்து,
துன்றியஅந் நெல்லையொரு தினத்தறலில்
நனைத்துவறுத் தெடுத்துத் தூய்தா

குசேலரின் புறப்பாடு

17. கறையிட்டு நனிகாண உலக்கைகொடு
மிக்கிடித்துக் கரிசு போக்கி,
நிறையிட்ட அவலாக்கிக் குசேலமுனி
கந்தையினில் நேடி ஓர்பால்
மறையிட்ட ஒழுங்குடையாள் முடிந்துகொடுத்(து)
' இனிதுபோய் வருக !' என்றாள் ;
சிறையிட்ட பவம்நீங்கும் வழிகண்டோன்
வழிதேடிச் செல்லல் உற்றான்.

—வல்லூர்த் தேவராசப் பிள்ளை

4. பாரதம்

[வாசுதேவனைப் படைத்துணை அழைத்த சருக்கம்]

துரியோதனன் ஆலோசனை

1. புரோகிதன் தூது வந்து
 போனபின் புயங்க கேது
 விரோசனன் சுதனைக் கங்கா
 சுதனொடும் வெகுளி மாற்றித்
 துரோணனை முதலா மிக்க
 தொன்மதி அமைச்ச ரோடும்
 சரோருக சதனம் என்னத்
 தனித்திருந் தெண்ணி னானே.

துரியோதனன் துவாரகை அடைதல்

2. தேயமெங் கெங்கும் செங்கோல்
 செலுத்துமத் திகிரி வேந்தர்
 ஆயவர் தம்மைக் கூட்ட
 அடைவினில் தூது போக்கிக்
 காயமும் உயிரும் ஆகிப்
 பொருள்தொறும் கலந்து நின்ற
 மாயவன் தன்னைக் கூட்ட
 வளர்மதில் துவரை சேர்ந்தான்.

கொடி வருணனை

3. 'ஈண்டுநீ வரினும், எங்கள்
 எழிலுடை எழிலி வண்ணன்
 பாண்டவர் தங்கட் கல்லால்
 படைத்துணை ஆக மாட்டான்;

மீண்டுபோ ’கென்றென் றந்த
வியன்மதில் குடுமி தோறும்
காண்டகு பதாகை ஆடை
கைகளால் தடுப்ப போன்ற.

துரியோதனன் துவரை நகர் வீதி புகுதல்

4. அருள்குடி இருக்கும் கண்ணன்
அவதரித் தனன்என் றெண்ணித்
தரணியின் மீது வந்து
தன்னுடைச் சோதி வைகும்
பரமமா ஞான போகப்
பதிகுடி இருந்த தன்ன
திருநகர் வீதி புக்கான்
சித்தசித் துணர்வி லாதான்.

கண்ணன் அறிதுயில் கோண்டிருத்தல்

5. வந்தமை அறிந்து, கொற்ற
வாயிலோர் தம்மை நோக்கி,
‘அந்தன்மா மதலை வந்தால்
அறிவியா தழைமின்,’ என்று
சந்திரன் ஒடுங்கி நிற்பத்
தபனனே சரிக்கு மாறு
பந்தனை இலாதான் யோகத்
துயில்வரப் பள்ளி கொண்டான்.

துரியோதனன் வந்து கண்ணன் திருமுடிப் பக்கம் அமர்ந்திருத்தல்

6. பொற்புடைப் புனிதன் கோயில்
புறத்தினில் அனிகம் நிற்பச்
சற்பவெம் பதாகை வேந்தன்
தடையறத் தனிசென் றெய்தி

உற்பல வண்ணன் பள்ளி
உணர்தரு காறும் இட்ட
சிற்பவண் தவிசின் ஏறித்
திருமுடிப் பக்கம் சேர்ந்தான்.

அருச்சுனன் வந்து கண்ணன் திருவடிப்புறம் நிற்க, கண்ணன் விழித்து அவனை நோக்குதல்

7. 'வந்திலன் விசயன்,' என்று
வான்துயில் புரிந்த அண்ணல்
சிந்தனை செய்யும் வேலைச்
சிந்தையில் கடிய தேரோன்
பந்தனை அறுக்கும் பாத
பங்கயம் பணிந்து நிற்ப,
முந்துற விழித்து நோக்கி,
முகமலர்ந் தருள்செய் தானே.

துரியோதனன் வரவை அறிந்த கண்ணன் அவனைத் தழுவி முகமனுரைத்தல்

8. நின்றவன் இருந்த வேந்தன்
வரவினை நிகழ்த்த, நேமிப்
பொன்திகழ் படையோன் அந்தப்
பொய்த்துயில் பாயல் நீங்கி,
'மன்றலங் தொடையல் மார்பா!
வரவெமக் குரைசெ யாதென்?'
என்றுரம் நெருங்கப் புல்லி
இன்சொலால் உவகை செய்தான்.

இருவரும் கண்ணனைத் தத்தமக்குப் படைத்துணையாமாறு வேண்டுதல்

9. 'இருவிரும் வந்த வாறென்?
இயம்புதிர்!' என்று, வாச
மருவிரி துளப மாலை
மரகத வண்ணன் கேட்பச்

'செருவில்நீ எமக்கு வெம்போர்
செய்துணை ஆக வேண்டும்
பொருவிலோய்!' என்று கொண்டவ்
விருவரும் புகன்ற காலை

கண்ணன் பாண்டவர்க்கே
உதவ நேர்ந்தமையைத் தெரிவித்தல்

10. 'உற்றமர் உதவி செய்வான்
உதிட்டிரன் தனக்கு முன்னே
சொற்றனம் ஆங்கண்; இங்கும்
துயிலுணர் பொழுதத் தின்று
விற்றிறல் விசயன் முந்த
விழிக்கிலக் காணன்,' என்று
பற்றறத் துணிந்து சொன்னன்,
பாண்டவர் சகாய னனன்.

'போரில் படையெடேல்,' என்று
துரியோதனன் வேண்ட, கண்ணன் உடன்படல்

11. முடைகமழ் முல்லை மாலை
முடியவன் தன்னைப் 'போரில்
படையெடா தொழிதி,' என்று
பன்னகத் துவசன் வேண்ட,
நெடியமா முகிலும் நேர்ந்து,
'நினக்கினி விசய! போரில்
அடுபடை இன்றிச் செய்யும்
ஆண்மையென்? அறைதி,' என்றான்.

'நீ எனது தேரை ஓட்டினால் போதும்,' என்று
அருச்சுனன் கண்ணனிடம் கூறுதல்

12. 'செருமலி ஆழி அங்கைச்
செழுஞ்சுடர்! நின்றெறன் தேரில்
பொருபரி தூண்டின், இந்தப்
பூதலத் தரசர் ஒன்றோ!

வெருவரும் இயக்கர் விண்ணோர்
விஞ்சையர் எனினும், என்கை
வரிசிலை குழைய வாங்கி
மணித்தலை துமிப்பன்!' என்றான்.

'போரிற் படையெடேன்,' என்று
துரியோதனனுக்குக் கண்ணன் உறுதி கூறல்

13. அடர்சிலை விசயன் இவ்வா(று)
இசைத்தலும் அமலன் வஞ்சப்
படவர வுயர்த்த வென்றிப்
பார்த்திவன் தன்னை நோக்கி,
'நடையுடைப் புரவித் திண்டேர்
நானிவற் கூர்வ தன்றி
மிடைபடை ஏவி நும்மோ(டு)
அமர்செயேன் வேந்த!' என்றான்.

'பலராமர் முதலியோரைப்
படைத்துணையாகக் கொள்க,' எனல்

14. 'எம்மையே ஒழிய உள்ள
யாதவ குலத்து ளோர்கள்
தம்மையும் எம்மு னோன
தாலகே துவையும் சேரச்
செம்மையோ டுதவி யாகக்
கொண்டுநீ செல்க,' என்று
மும்மையும் உணர்ந்த நாதன்
முன்னுறப் பின்னும் சொன்னான்:

துரியோதனன் பலராமனைக் காணுதல்

15. 'கிருதவன் மாவக் ரோணி
கிளர்படை யோடு நின்பால்
வருவன்,'என் றுரைத்து, வேண்டும்
மதுரவாய் மைகளும் கூறி,

மருதுபோழ்ந் திட்ட செங்கண்
மாயவன் விடுப்ப, ஏகிக்
கருதலான் வினயம் ஒன்றும்
கண்ணன்முன் னேனைக் கண்டான்.

‘நீ சேனையோடு படைத்துணை வருக,’ என்று துரியோதனன் பலராமனை வேண்டி அத்தினபுரி சேர்தல்

16. கண்ணனங் கருளிச் செய்த
கட்டுரைப் படியே சங்க
வண்ணனுக் கிளவல் சொன்ன
மாற்றமும் அரசன் சாற்றி,
‘எண்ணருந் தொகைகொள் சேனை
யாதவ குமர ரோடே
அண்ணலே ! வருடு’கன் றேதி
அத்தின புரிபுக் கானே.

கண்ணனும் அருச்சுனனும் தருமனை அடைதல்

17. கூறிய வேக நாகக்
கொடியவன் அகன்ற பின்னர்த்
தேறிய விசையி னேடும்
செழும்புனல் துவரை நீங்கி,
ஆறிரு நாமத் தோனும்
ஐயிரு நாமத் தோனும்
ஊறிய கருணை நெஞ்சின்
உதிட்டிரன் இருக்கை புக்கார்.

—வில்லிபுத்தூராழ்வார்

—

5. பெரிய புராணம்

[மெய்ப்பொருள் நாயனர் புராணம்]

மெய்ப்பொருள் நாயனரின் பெருமை

1. சேதிநன் னட்டு நீடு
திருக்கோவ லூரில் மன்னி
மாதொரு பாகர் அன்பின்
வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை
விளங்கிட மேன்மை பூண்டு,
காதலால் ஈசர்க் கன்பர்
கருத்தறிந் தேவல் செய்வார்.

நாயனரின் அரசியல் மாண்பு

2. அரசியல் நெறியின் வந்த
அறநெறி வழாமல் காத்து,
வரைநெடுந் தோளால் வென்று
மாற்றலர் முனைகள் மாற்றி,
உரைதிறம் பாத நீதி
ஓங்குநீர் மையினில் மிக்கார்;
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர்
வேடமே சிந்தை செய்வார்.

நாயனரின் சிவ பக்தி

3. மங்கையைப் பாக மாக
உடையவர் மன்னும் கோயில்
எங்கணும் பூசை நீடி
ஏழிசைப் பாடல் ஆடல்

பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்;
தங்கள்நா யகருக் கன்பர்
தாளலால் சார்பொன் றில்லார்.

அடியார்களிடத்து அன்பு செய்தல்

4. 'தேடிய மாடும் நீடு
செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்(கு)
ஆவன ஆகும்,' என்று
நாடிய மனத்தி னோடு
நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவறக் கொடுத்து வந்தார்.

பகையரசனது தோல்வி

5. இன்னவா றொழுகும் நாளில்
இகல்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும்
ஆசையால் அமர்மேற் கொண்டு,
பொன்னணி ஓடை யானை
பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து, தோற்றுப்
பரிபவப் பட்டுப் போனான்.

முத்தநாதன் நாயனாரை வெல்லக் கருதி வருதல்

6. இப்படி இழந்த மாற்றான்
இகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தர் சீலம்
அறிந்துவெண் நீறு சாத்தும்

அப்பெரு வேடம் கொண்டே
அற்றத்தில் வெல்வா னுகச்
செப்பரு நிலைமை எண்ணித்
திருக்கோவ லூரில் சேர்வான்.

முத்தநாதன் சிவவேடந் தாங்கி நகரில் புகுதல்

7. மெய்யெலாம் நீறு பூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படைக ரந்த
புத்தகக் கவளி ஏந்தி,
மைபொதி விளக்கே என்ன
மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு
புகுந்தனன் முத்த நாதன்.

முத்தநாதன் அரண்மனை அடைதல்

8. மாதவ வேடம் கொண்ட
வன்கணன் மாடந் தோறும்
கோதைசூழ் அளக பாரக்
குழைக்கொடி ஆட மீது
சோதிவெண் கொடிகள் ஆடும்
சுடர்நெடு மறுகில் போகிச்
சேதியர் பெருமான் கோயில்
திருமணி வாயில் வந்தான்.

முத்தநாதனைத் தத்தன் தடை செய்தல்

9. கடையுடைக் காவ லாளர்
கைதொழு தேற நின்றே,
'உடையவர் தாமே வந்தார்
உள்ளெழுந் தருளும்!' என்னத்

தடைபல புக்க பின்பு
தனித்தடை நின்ற தத்தன்,
'இடைதெரிந் தருள வேண்டும்;
துயில்கொளும் இறைவன்,' என்றான்.

முத்தநாதன் நாயனார் துயிலும் அந்தப்புரம் சேர்தல்

10. என்றவன் கூறக் கேட்டே,
'யானவற் குறுதி கூற
நின்றிடு நீயும்,' என்றே
அவனையும் நீக்கிப் புக்குப்
பொன்திகழ் பள்ளிக் கட்டில்
புரவலன் துயில, மாடே
மன்றலங் குழல்மென் சாயல்
மாதேவி இருப்பக் கண்டான்.

நாயனார் துயில் நீத்துச் சிவவேடந் தாங்கிய முத்தநாதனை வணங்குதல்

11. கண்டுசென் றணையும் போது
கதுமென எழுந்து தேவி
வண்டலர் மாலை யாரை
எழுப்பிட, உணர்ந்து மன்னர்
அண்டர்நா யகனார் தொண்டர்
ஆமெனக் குவித்த செங்கை
கொண்டெழுந் ததிரே சென்று,
கொள்கையின் வணங்கி நின்று

நாயனார் முகமன் மொழியும் முத்தநாதன் வஞ்சக மொழியும்

12. 'மங்கலம் பெருக மற்றென்
வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற(து)
என்கொலோ?' என்று கூற,

'உங்கள்நா யகனார் முன்னம்
உரைத்தஆ கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று
கொடுவந்தேன் இயம்ப,' என்றான்.

முத்தநாதன்
'தனிமையில் உபதேசிக்க வேண்டும்,' எனல்

13. 'பேறெனக் கிதன்மேல் உண்டோ?
பிரான்அருள் செய்த இந்த
மாறிலா கமத்தை வாசித்(து)
அருள்செய வேண்டும்,' என்ன,
'நாறுபூங் கோதை மாது
தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும்,'
என்றவன் விளம்ப, வேந்தர்

நாயனார் தேவியை அந்தப்புரம் போகச் செய்து ஆகம நூல் கேட்க விரும்புதல்

14. திருமகள் என்ன நின்ற
தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அந்தப்
புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத்
தவிசின்மேல் இருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி,
'இனியருள் செய்யும்,' என்றார்.

முத்தநாதன் நாயனாரைக் கத்தியாற் குத்துதல்

15. கைத்தலத் திருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்தவர் வணங்கும் போழ்தில்

பத்திரம் வாங்கித் தான்முன்
நினைந்தஅப் பரிசே செய்ய,
'மெய்த்தவ வேட மேமெய்ப்
பொருள்,'எனத் தொழுது வென்றார்.

தத்தன் முத்தநாதனைக் கொல்ல நினைத்தலும் நாயனார் தடுத்தலும்

16. மறைத்தவன் புகுந்த போதே
மனமங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கண் கூடி
வாளினால் எறிய லுற்றான்;
நிறைத்தசெங் குருதி சோர
வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில், 'தத்தா!
நமர்!'எனத் தடுத்து வீழ்ந்தார்.

'அடியவரை இடையூறின்றிக் கொண்டுபோய் விடுக,' என்று நாயனார் கூறுதல்

17. வேதனை எய்தி வீழ்ந்த
வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனும் தத்தன் தானும்
தலையினால் வணங்கித் தாங்கி,
'யாதுநான் செய்கேன்!' என்ன,
'எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம்
கொண்டுபோய் விடுநீ!' என்றார்.

முத்தநாதனுக்குண்டான இடையூறுகளைத் தத்தன் தடுத்தல்

18. அத்திறம் அறிந்தார் எல்லாம்,
'அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்!'
எனப்புடை சூழ்ந்த போது

தத்தனும் அவரை எல்லாம்
தடுத்துடன் கொண்டு போவான்,
‘இத்தவன் போகப் பெற்ற(து)
இறைவன தாணை,’ என்றான்.

முத்த நாதனை இடையூறில்லா இடத்தில் விட்டுத் தத்தன் திரும்புதல்

19. அவ்வழி அவர்கள் எல்லாம்
அஞ்சியே அகல நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன்
திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவாள் ஏந்தி
ஆளுருக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் தன்னை
விட்டபின் மீண்டு போந்தான்.

தத்தன் ஆவிசோர்ந்திருக்கும் நாயனாரை அடைதல்

20. மற்றவன் கொண்டு போன
வஞ்சனை வேடத் தான்மேல்
செற்றவர் தம்மை நீக்கித்
தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச்
சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவர் முன்பு சென்றான்
கோமகன் குறிப்பில் நின்றான்.

‘முத்தநாதனை இடையூறின்றி அனுப்பினேன்,’ என்று தத்தன் கூற, நாயனார் மகிழ்தல்

21. சென்றடி வணங்கி நின்று,
‘செய்தவ வேடம் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி
விட்டனன்,’ என்று கூற,

'இன்றெனக் கையன் செய்த(து)
யார்செய்ய வல்லார்!' என்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறைபெருங் கருணை கூர்ந்தார்.

நாயனார் போதனை

22. அரசியல் ஆயத் தார்க்கும்
அழிவுறும் காத லார்க்கும்
விரவிய செய்கை எல்லாம்
விளம்புவார்: 'விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு
பாதுகாத் துய்ப்பீர்,' என்று
புரவலர் மன்றுள் ஆடும்
பூங்கழல் சிந்தை செய்தார்.

நாயனார் சிவனடி சேர்தல்

23. தொண்டனார்க் கிமயப் பாவை
துணைவனார் அவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று
காட்சிதந் தருளி, மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா
அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவர் இடைய றாமல்
கும்பிடும் கொள்கை ஈந்தார்.

—சேக்கிழார்

IV. சிறு நூல்கள்

கலைசைச் சிலேடை வெண்பா

1. ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலைசையே—மேவும்
அரிவையம்பா கத்தான் அரனொருமுன் றெய்தோன்
அரிவையம்பா கத்தான் அகம். —சுப்பிரமணிய முனிவர்

திருவேங்கட மாலை

2. காந்தள் இரவலர்போல் கையேற்பக் கொன்றைகொடை
வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே-பூந்துளவின்
கான்மடங்கா மார்வத்தார் காண விரும்பினர்மேல்
நான்மடங்கா மார்வத்தார் நாடு.

—பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

திருவருணைக் கலம்பகம்

3. நாரா யணனறியா நாதரரு ணேசருக்கு
வாரார் சிலைகலைமெய் மாதங்கம் அம்மானை;
வாரார் சிலைகலைமெய் மாதங்கம் ஆமாயின்,
ஆராயுங் காலெடுப்ப தையமன்றோ அம்மானை?
அன்னமறி யாரெடுப்ப தையமோ அம்மானை ?

4. கண்ணருக்கும்போதருக்கும் காண்பரிதாய்க் கண்பறித்த
திண்ணருக்கும் நன்றாய்த் தெரிந்ததே—விண்ணருக்காப்
போற்றுவார் அண்ணா் புரமெரித்தார் என்பிறவி
மாற்றுவார் அண்ணா மலை. —சைவ எல்லப்ப நாவலர்

மீனாட்சியம்மை குறம்

5. திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குமுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் ணம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே.

—குமர குருபர சுவாமிகள்

திருவேங்கடத்தந்தாதி

6. மாலை மதிக்குஞ்சி ஈசனும்
போதனும் வாசவனும்
நூலை மதிக்கும் முனிவரும்
தேவரும் நோக்கியந்தி
காலை மதிக்குள்வைத் தேத்துந்
திருமலை கைம்மலையால்
வேலை மதிக்கும் பெருமான்
உறைதிரு வேங்கடமே.

—பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

7. சீர்கொண்ட கஞ்சக் கிழத்திதன் காந்தனைச்
சிறைசெய்த வாறறிந்தால்
செயிர்த்துநம் திருமனைவி மகன்மருகி தமையெலாம்
சிறைசெய்யும் என்றறிந்தும்
ஏர்கொண்ட மைத்துனக்கேண்மையால் அர்ச்சுனற்(கு)
இறுதிநாள் பயவாமையே
எண்ணிமுன் பரிதியைப் பரிதியால் தடைசெய்த
ஏந்தல் பிரான்புரக்க,
பேர்கொண்ட மேனிலச் சோபான மிசையேறு
பேதைமார் முகநோக்கிநம்
பேரரசு கொள்ளவரு மதிபோலும் இதுவெனப்
பெரிதுமேக் குற்றவர்கள்தம்
கார்கொண்ட பின்னற் கரும்பாந்தள் கண்டுளம்
கவலாது களிகூர்ந்துதண்
கலைமதியம் வைகுபொழில் சூழ்குளத்தூர்வரும்
கடவுள் பிராட்டிதனையே.

—சிவஞான சுவாமிகள்

V. பல்வகைப் பொருள்

1. வேளாளர் சிறப்பு

உழுங்குலத்தார் உயர்வு

1. தொழுங்குலத்தில் பிறந்தாலென்?
சுடர்முடிமன் னவராகி
எழுங்குலத்தில் பிறந்தாலென் ?
இவர்க்குப்பின் வணிகரெனும்
செழுங்குலத்தில் பிறந்தாலென் ?
சிறப்புடையர் ஆனாலென் ?
உழுங்குலத்தில் பிறந்தாரே
உலகுய்யப் பிறந்தாரே.

கருணைப் பெருக்காளர்

2. அழுங்குழவிக் கன்புடைய
தாயேபோல் அனைத்துயிர்க்கும்
எழுங்கருணைப் பெருக்காளர்
எளியரோ யாம்புகழ !
உழுங்கொழுவிற் கருவீறி
உலகமுதற் கருவாகச்
செழுங்கமலத் தயனிவரைச்
செய்துலகஞ் செய்வானேல்.

தாயனைய காராளர்

3. வேதியர்தம் உயர்குலமும்
விறல்வேந்தர் பெருங்குலமும்
நீதிவளம் படைத்துடைய
நிதிவணிகர் தங்குலமும்

சாதிவளம் படைத்துடைய
தாயனைய காராளர்
கோதில்குலந் தனக்குநிகர்
உண்டாகிற் கூறீரே!

ஏர் விழா இன்றேல், போர் விழா இல்லை.

4. நீர்விழாக் கொளவளர்ந்த நிலமெல்லாந் தம்முடைய
சீர்விழாக் கொளவிளக்கும் திருவிழாப் பெருக்காளர்
ஏர்விழாக் கொளினன்றி எறுழ்க்கரிதேர் மாப்படையால்
போர்விழாக் கொளமாட்டார் போர்வேந்தர் ஆனேரே.

ஓதுவார் எல்லாம் உழுவார் தலைக்கடையில்

5. வேதநூல் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவா ரெல்லாரும் உழுவார்தந் தலைக்கடைக்கே;
கோதைவேல் மன்னவர்தம் குடைவளமுங் கொழுவளமே;
ஆதலால் இவர்பெருமை யாருரைக்க வல்லாரே!

—கம்பர்

---

2. உடற்பயிற்சி

குழந்தைகளின் உடற்பயற்சி

1. அறந்தழைக்கு நிலவுலகில்
ஆயசிறு குழவிகளும்
பிறந்தநாள் முதலாகப்
பிரியமுடன் கைகாலை
உரம்பெறவே ஆட்டுகின்ற
உண்மைதனை நோக்குவமேல்
சிறந்தபயன் உடற்பயிற்சி
செய்யுமென அறிவோமே.

இளங்கன்று இயற்றும் பயிற்சி

2. இளங்கன்று பிறந்தவுடன்
எழுந்தோடி விளையாடி

உளம்பெற்ற மகிழ்ச்சியுடன்
உடற்பயிற்சி செய்வதினல்
வளம்பெற்று நாடோறும்
வளருவதைக் காண்போமேல்
விளங்குமுடற் பயிற்சிநிதம்
வேண்டுமென உணர்வோமே.

உடற்பயிற்சியின் பயன்

3. கடற்கரைசூழ் நிலவுலகில்
காணுமுயிர்க் கூட்டமெலாம்
உடற்பயிற்சி செய்வதினல்
உறுப்புரனே அடைவதலால்
குடற்குரனும் உண்டாகிக்
கொண்டவுண விரத்தமதாம்;
இடர்ப்பாடொன் றிலதாகும்;
எழிலுமிக உளதாமே.

உடற்பயிற்சியின்மையால் உளதாகும் தீமை

4. செப்பரிய உடற்பயிற்சி
செய்யாதார் மெய்த்தொகுதி
உப்பிருந்த பாண்டமென
உளுத்துவிடும்; அல்லாமல்
வெப்பகன்ற நார்த்தசைகள்
வெறும்பஞ்சை ஒப்பாகி
இப்புவியில் நடைப்பிணமாய்
இன்பமென்ப தறியாரே.

பெற்ருேர்க்கு நல்லுரை

5. பெற்ருேரே! இளமையில்நும்
பிள்ளைகளைப் பலகலைகள்
கற்ருேத வைப்பதுபோல்
காலையுடற் பயிற்சியையும்

சொற்றேத வைப்பீரேல்
சுகமாக வாழ்வுறுவர் ;
எற்றேமற் றக்கல்வி
இளைத்தபிணி யாளருக்கே!

—கா. சி. சிவசங்கர முதலியார்

---

3. தமிழ் மொழியின் சிறப்பு

1. ஓங்கல் இடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேர் இலாத தமிழ்.

—தண்டியாசிரியர்

2. உதியன் வரையில் ஒழுகுசுவைத் தேனே!
பொதியில் இளங்காலின் பொற்போ !—மதுகரங்கள்
நண்ணு மலர்நாடு நல்கு திருமணமோ !
என்னே தமிழின் எழில் !

3. சீர்மலிந் தோங்குதே வாரத்தீம் பாலே
செப்பு புகழ்த்திரு வாசகத் தேனே
மாமலி யுந்திரு வாய்மொழிக் கண்டே
மற்றிவை போல்வநின் மாமுடி மணியே ;
ஏர்மலிந் தோங்குதொல் காப்பிய நாலே
என்றுமி ளிர்ந்திடு மங்கல நாணே ;
சேர்திரு வள்ளுவன் செப்புநல் லமிழ்தே
செம்முகச் சுட்டியாம் செந்தமிழ்த் தாயே !

4. காவியம் ஐந்தும்நின் மார்பில்நற் கலனே ;
கம்பன்மொ ழியுநூல் கையிற்கங் கணமே ;
தாவிய சீர்திகழ் சங்கநூல் வெள்ளம்
தங்குக ழூத்தினில் பொங்குபல் லாரம் ;

மேவுமற் றைத்தெய்வப் பாவலர் பணியே
விண்ணுறு மீனினும் மண்ணினும் பலவே;
தேவிக ரந்தையஞ் சங்கத்தின் தொண்டு
சேவடி மோதிரம் செந்தமிழ்த் தாயே!

—ரா. வேங்கடாசலம் பிள்ளை

---

4. சோலைக் காட்சி

கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டினம் நல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட மாமயில் ஆடும்
விரைப்பூம் பந்தர் கண்டுளஞ் சிறந்தும்,
புணர்துணை நீங்கிய பொய்கை அன்னமொடு
மடமயிற் பேடையும் தோகையும் கூடி
இருசிறை விரித்தாங்(கு) எழுந்துடன் கொட்பன
ஒருசிறைக் கண்டாங்(கு) உள்மகிழ் வெய்தி
மாமணி வண்ணனும் தம்முனும் பிஞ்ஞையும்
ஆடிய குரவையிஃ(து) ஆமென நோக்கியும்,
கோங்கலர் சேர்ந்த மாங்கனி தன்னைப்
பாங்குற இருந்த பல்பொறி மஞ்ஞையைச்
செம்பொன் தட்டில் தீம்பால் ஏந்திப்
பைங்கிளி யூட்டுமோர் பாவையாம் என்றும்,
அணிமலர்ப் பூம்பொழில் அகவயின் இருந்த
பிணவுக்குரங் கேற்றிப் பெருமதர் மழைக்கண்
மடவோர்க் கியற்றிய மாமணி ஊசல்
கடுவன் ஊக்குவது கண்டுநகை எய்தியும்
(நெடுமுடிக் கிள்ளி மகிழ்வுடன் சென்றான்.)

—சீத்தலைச் சாத்தனார்

5. பாரதியார் பாடல்

தமிழின் சிறப்பு

1. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணேம் ;
பாமரராய், விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ ? சொல்லீர் !
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்.

தமிழ்ப்புலவர் சிறப்பு

2. யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ;
உண்மை;வெறும் புகழ்ச்சி இல்லை ;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ; ஒருசொற் கேளீர் :
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.

அருந்தமிழ்க்குரிய ஆக்க வேலைகள்

3. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் ;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் ;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை ;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கம் செய்தல் வேண்டும்.

—தேசியக் கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியார்

VI. தனிப்பாடல்கள்

தமிழ் நாட்டின் சிறப்பு

1. வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து.

—ஔவையார்

பாம்புக்கும் எள்ளுக்கும் சிலேடை

2. ஆடிக் குடத்தடையும்; ஆடும்போ தேயிரையும்;
மூடித் திறக்கில் முகங்காட்டும்;—ஓடிமண்டை
பற்றில் பரபரெனும்; பாரில்பிண் ணாக்குமுண்டாம்;
உற்றிடுபாம் பெள்ளெனவே ஓது.

பாம்புக்கும் எலுமிச்சம்பழத்திற்கும் சிலேடை

3. பெரியவிட மேசேரும்; பித்தர்முடி ஏறும்;
அரியுண்ணும்; உப்புமேல் ஆடும்;—எரிகுணமாம்;
தேம்பொழியும் சோலைத் திருமலரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம்.

—காளமேகப் புலவர்

ஆடையின் சிறப்பு

4. மேலாடை இன்றிச் சவைபுகுந் தாலிந்த மேதினியோர்
நாலா யிரம்படித் தாலுமெண் ணார்;நுவல் பாற்கடலோ
மாலா னவரணி பொன்னாடை கண்டு மகளைத்தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன் தனக்கே.

—நையாண்டிப் புலவர்

பெய்யாத மேதத்தினிடம் பேசியது

5. செல்லென்றுன் நாமத்தைச் செப்பினதே அல்லாமல்
செல்லென் றுனைநாங்கள் செப்பினமா?-அல்லென்று

மெய்யா உவமிக்க விண்மீது தோன்றியநீ
பெய்யாமற் போனதென்ன ? பேசு.

—வேதநாயகம் பிள்ளை

சீதக்காதிப் பிரபு இறந்த போது பாடியது

6. பூமா திருந்தென்ன ? புவிமா
திருந்தென்ன ? பூதலத்தில்
நாமா திருந்தென்ன ? நாமிருந்
தென்ன ?நன் னுவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக்
காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே
புலமையும் செத்ததுவே. —படிக்காசுப் புலவர்

எல்லோருக்கும் விசனம் உண்டு.

7. பாலுக்குச் சர்க்கரை இல்லையென்
பார்க்கும், பருக்கையற்ற
கூழுக்குப் போடஉப் பில்லைஎன்
பாருக்கும், குற்றிதைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென்
பார்க்கும், கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லையென்
பார்க்கும் விசனமொன்றே. —கம்பர்

கவித்திறமை

8. வெங்காயம் சுக்கானல் வெந்தயத்தால் ஆவதென்ன?
இங்கார் சுமந்திருப்பார் இச்சரக்கை?—மங்காத
சீரகத்தைத் தந்தீரேல் தேடேன் பெருங்காயம்
ஏரகத்துச் செட்டியா ரே! —சொக்கநாதப் புலவர்

VII. பொன் மொழிகள்

நிலத்தின் நன்மை

1. நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே ! —ஔவையார்

இனம் இனத்தோடு சேரும்.

2. பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும், தொடைபுணர்ந்(து)
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப ;
சாலார் சாலார் பாலரா குபவே. —கண்ணகனார்

கல்வியின் சிறப்பு

3. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே ;
பிறப்போர் அன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும் ;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
'மூத்தோன் வருக!' என்னா தவருள்
அறிவுடை யோனா றரசும் செல்லும் ;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

—ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன்

1. மாணவர் வாழ்க்கையின் குறிக்கோள்

(திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், பி. ஏ.,)

குறியாகக் கொள்ளப்படுவது எதுவோ, அதுவே குறிக்கோளாகும். குறிக்கோள் என்பது ஓர் உதாரணத்தினால் நன்கு விளங்கும். சிறு பிள்ளைகள் கிராமங்களில் ஒரு சாண் நீளமுள்ள ஒரு கல்லைப் பூமி மேலே நிறுத்தி வைத்து, அது சாய்ந்து கீழே விழும்படி அதன்மேல் ஒரு பந்தைப் போட்டு விளையாடுகிறது உண்டு. பூமி மேலே நிற்கிற அந்தக்கல் கீழே சாய்ந்து விழ வேண்டுமானால், அதன் மேல் பாகத்தின் மத்தியில் உச்சிக்குக்கிட்ட யாராவது ஒரு பையன், பந்தை விசையுடன் பலமாய் எறிதல் வேண்டும். கல்லின் மேற்பாகத்தின் மத்தியில் உச்சிக்குக் கிட்டப் பந்து விழவில்லையானால், கல் கீழே சாய்ந்து விழாது. பந்து மெதுவாய் எறியப்பட்டாலும், அது சாய்ந்து விழாது. கல், கீழே சாய்ந்து விழும்படியாக அதன்மேல் பந்து எறியப்பட்ட இடந்தான் குறி என்று சொல்லப்படும். அந்தக் குறியை மனத்தில் வைத்துக் கொண்டுதான் விளையாடும் பிள்ளைகள் அதன் மேலே பந்தை எறிவார்கள். அது போல, உலகில் யாதாவது ஒரு வேலையைச் செய்கிறவர்கள், அந்த வேலையினால் அடையப் போகும் பயனைத் தங்கள் மனத்தில் குறியாக வைத்துக்கொண்டு, அதற்குத் தக்கபடி வேலை செய்வார்கள். அது போல நீங்களும் பள்ளிக்கூட வாழ்க்கையினால் உண்டாகும் பயனை உங்கள் மனத்தில் குறியாக நினைத்துக்கொண்டு, கல்வி கற்க வேண்டும்.

நீங்கள் பள்ளிக்கூடப் படிப்பினால் அடையும் பயன் யாது? நீங்கள் தகுந்த வயது அடைந்து உலக வாழ்க்கையில் செல்லும்போது அந்த உலக வாழ்க்கையில் நன்றாக வாழச் செய்யும் திறமையை அடைதலையே நீங்கள் பள்ளிக்கூட வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளல் வேண்

டும். அப்படியானல், நீங்கள் பள்ளிக்கூட வாழ்க்கையில் செய்யும் செயல்களுக்கெல்லாம் இந்தக் குறிக்கோள் உங்கள் நினைப்பில் முன்னிற்றல் வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு நீங்கள் இந்தக் குறிக்கோளை நினைப்பில் வைத்துக்கொண்டு இதற்குத் தகுந்தபடி உங்கள் பள்ளிக் கூடத்தில் கல்வி கற்பீர்களோ, அவ்வளவுக்கவ்வளவு உங்கள் கல்வி பயனுடையது ஆகும்.

பள்ளிக்கூட வாழ்க்கையின் செயல்களை நான்கு பாகங்களாகப் பிரிக்கலாம்: அவை (1) உடற் பயிற்சி, (2) மனப் பயிற்சி, (3) ஒழுக்கப் பயிற்சி, (4) சமயப் பயிற்சி என்பன ஆகும். இப்பாகங்கள் ஒவ்வொன்றிலும் நான் உங்களுக்கு நீங்கள் அறிய வேண்டிய சில பொருள்களைச் சொல்லுகிறேன்:

உடற்பயிற்சி: நீங்கள் பிற்காலத்தில் வருகிற உலக வாழ்க்கையில் உடல் நலத்துடன் வாழ வேண்டுமானல், இளமையில் உடற்பயிற்சி இன்றியமையாதது. உடல் நலமடையவும், வளரவும் நீங்கள் ஓடி விளையாடுதல், பந் தடித்தல் முதலிய விளையாட்டுக்களையும் உங்கள் பள்ளிக் கூடத்தில் அமைத்திருக்கிற பழக்கங்களையும் நாள் தோறும் ஒழுங்காகக் குறிப்பிட்ட நேரங்களில் செய்து வரல் வேண்டும். ஆனல், விளையாட்டு நேரங்களைத் தவிர மற்றப் படிப்பு நேரங்களில் உங்களுக்கு விளையாட்டு நினைப்பு இருத்தல் கூடாது. படிப்பு நேரத்தில் படிப்பு நினைப்பும், விளையாட்டு நேரத்தில் விளையாட்டு நினைப்புமே இருத்தல் வேண்டும். உடல் நலமே உலக வாழ்க்கையில் நீங்கள் அடையப் போகிற எல்லா நலன் களுக்கும் அடிப்படையாயிருப்பதனல், உடற்பயிற்சியை நீங்கள் சிறிதேனும் அசட்டை செய்தல் கூடாது. உடலையும் சுத்தமாய் வைத்துக்கொள்ளல் வேண்டும்.

மனப்பயிற்சி: மனப் பயிற்சியினலே உங்கள் அறிவு பெருகி வளர வேண்டும். அறிவு உடைமையே மக்களுக்கு அணிகலமாவது. அறிவினலேயே உங்கள்

உலக வாழ்க்கை சிறப்படைதல் வேண்டும். அறிவு இல்லாதவர் மிருகங்களுக்கு ஒப்பாவர். இந்த அறிவுப் பெருக்கத்துக்கு நீங்கள் உங்கள் நினைப்பில் சில உண்மைகளை வைத்துக்கொண்டு நடக்க வேண்டும். நீங்கள் விளையாடினாலும், உங்கள் பாடங்களைப் படித்தாலும், உபாத்தியாயர் பாடஞ் சொல்வதைக் கேட்டாலும், வேறே எந்த வேலையைச் செய்தாலும், அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலையில் மாத்திரமே உங்கள் மனம் முழுவதும் செல்லல் வேண்டும். இப்படியல்லாமல், உங்கள் மனம் பிற நினைப்புக்களில் செல்லுதல் கூடாது. எந்த வேலையும் செவ்வையாய்ச் செய்வதற்கு இதுவே நல்ல உபாயமாகும். இதற்கு மன ஒருமை (Concentration of mind) என்பது பெயர். இந்த மன ஒருமையை நீங்கள் இளமையிலே பழகுவீர்களாயின், இஃது உங்களிடத்தில் நிலையான பழக்கமாகி, உங்கள் உயர்தரக் கல்விக்கும் உலக வாழ்க்கையில் எந்த வேலையையும் திறமையுடன் செய்வதற்கும் மிக்க பயனைத் தருவதாகும்.

நீங்கள் வெளியே நடந்து போகும்பொழுது இயற்கை நிகழ்ச்சிகளை (Happenings in nature) நன்றாகக் கவனித்துப் பார்த்தல் வேண்டும். கோழி எப்படி இரைதேடித் தன்னைச் சுற்றிவரும் குஞ்சுகளுக்குக் கொடுக்கிறது? காகம் எப்படித் தான் இரையுண்ணப் போகும் பொழுது பிற காகங்களையும் கூப்பிடுகிறது? நாய் எப்படித் தன்னை வளர்த்தவர்களிடத்தில் வாலை ஆட்டிக்கொண்டு தன்னுடைய மலர்ந்த முகத்தைக் காட்டுகிறது? இவைகளைப் போலுள்ள நிகழ்ச்சிகளை நீங்கள் கவனித்து உங்கள் மனத்தில் அவைகளைப் பற்றி நினைப்பீர்களானால், உங்கள் அறிவு பெருகி விரியும். நினைத்துப் பார்க்கும் பொழுது உங்களுக்கு ஏதாவது நன்றாய் விளங்காவிட்டால், உங்கள் உபாத்தியாயரிடத்திலாவது, பெற்றோர்களிடத்திலாவது, பிற மாணாக்கர்களிடத்திலாவது கேட்டுத் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

உங்கள் பள்ளிக்கூடப் பாடங்களை முறைப்படிப் படிப்பதனாலும், உங்கள் உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் சொல்லுகிறவைகளைக் கேட்பதனாலும், பிற மாணாக்கர்களிடம் கேட்பதனாலும், அவர்களுக்குத் தெரியாதவைகளைச் சொல்லுவதனாலும், படித்த பாடங்களையும் கேட்ட பாடங்களையும் உங்கள் மனத்தில் சிந்திப்பதனாலும் உங்கள் அறிவு விரிவடையும்.

பள்ளிக்கூடப் பாடங்கள் சம்பந்தமாக நீங்கள் ஒவ்வொரு நாளும் பின் சொல்லும் நல்ல பழக்கத்தைக் கொண்டு நடத்தல் வேண்டும்: ஒவ்வொரு நாளும் இரவில் முதலாவது, அன்று பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்த பாடங்களைப் படித்து, அவைகளை மனத்தில் சிந்தித்தல் வேண்டும். அப்படிச் சிந்தித்துப் பார்த்ததில் ஏதாவது சந்தேகமிருந்தால், அதனைப்பற்றி அடுத்த பள்ளிக்கூட நாளில் உபாத்தியாயரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளல் வேண்டும். இப்படி அன்று நடந்த பாடத்தைப் படித்த பின்பே, மறு நாள் பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்கத் துவக்க வேண்டும். இரவில் நேரம் போதாதிருந்தால், மறு நாள் அதிகாலையில் சுமார் ஐந்து மணிக்கு எழுந்திருந்து, படித்தல் வேண்டும். இனி நடக்கும் பாடங்களைப் படிக்கும் பொழுது உங்களால் உபாத்தியாயருடைய உதவியில்லாமல் எவ்வளவு தெரிந்து கொள்ளக் கூடுமோ, அவ்வளவும் தெரிந்துகொள்ள முயலல் வேண்டும். அகராதியைத் தாராளமாய் உபயோகித்தல் வேண்டும். உபாத்தியாயர்கள் பள்ளிக்கூடத்தில் சொல்லுவார்கள் என்று நினைத்துக்கொண்டு இருத்தல் கூடாது. இந்த முறையில் படித்தால், உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கிற பாடங்கள் நன்ருய் விளங்கும். வாரத்திற்கு ஒரு தரம் பழைய பாடங்களைத் திரும்பப் படித்தல் வேண்டும். நாள்தோறும் பாடங்களைப் படிப்பதிலும், நித்திரைக்குப் போதலிலும், நித்திரையை விட்டு எழுந்திருப்பதிலும் நேர ஒழுங்குப் (Punctu-

ality) படி நீங்கள் நடத்தல் வேண்டும். இரவு ஒன்பது மணிக்கு நித்திரைக்குப் போய், காலை நாலரை அல்லது ஐந்து மணிக்கு நித்திரை விட்டெழுந்திருத்தல் நலமாயிருக்கும். பரீக்ஷை நாளென்று சில நாட்களில் அதிக நேரம் விழித்திருந்து படித்தல் கூடாது. நாள்தோறும் மேலே சொல்லிய முறைப்படி பாடங்களைப் படித்துக்கொண்டு வந்தால், பரீக்ஷை நாள் வந்தாலும், அதிக நேரம் படிக்க வேண்டிய அவசியம் நேரிடாது.

ஒழுக்கப் பயிற்சி: மேலே சொல்லிய மனப் பயிற்சியினல் உண்டாகும் அறிவின் பயன் ஒழுக்கம் ஆகும். ஒருவருக்கு அறிவு இருந்து ஒழுக்கம் இல்லையானல், அந்த அறிவினல் அவருக்கு யாதொரு பயனும் உண்டாகாது. ஒருவர் கல்வி கற்றல் அவர் ஒழுக்கமுடையவராய் இருத்தற்காகத்தான். ஆகையால், உங்களுடைய உலக வாழ்க்கையில் இன்றியமையாத ஒழுக்கத்தை நீங்கள் உங்கள் இளமையிலேயே பள்ளிக்கூட வாழ்க்கையில் அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

இந்த ஒழுக்கத்தை நீங்கள் அமைத்துக்கொள்ள நான் எனக்குத் தெரிந்த சில வழிகளைச் சொல்லுகிறேன்: ஒழுக்கம் என்பது ஒரு நாளில், ஒரு வாரத்தில், ஒரு மாதத்தில் அல்லது ஓர் ஆண்டில் வேண்டும் என்று நினைத்த பொழுது உண்டுபண்ணி வைத்துக்கொள்ளுகிற ஒரு பொருளன்று; இந்தப் பள்ளிக்கூடக் காலம் முடிவாகிற வரை நீங்கள் நாள்தோறும் முயன்று முயன்று வருந்தி அமைத்துக்கொள்ளுகிற பொருளாகும். நீங்கள் ஒவ்வொரு நாளிலும்—அப்படியல்ல—ஒவ்வொரு நிமிஷத்திலும் உங்கள் மனத்தில் எண்ணுகிற எண்ணங்களும், இச்சைகளும், உங்கள் வாக்கினல் சொல்லுகிற சொற்களும், உங்கள் உடலினற் செய்கிற செயல்களும், அந்த ஒழுக்கமென்னும் கட்டடத்தைக் கட்டுகிற சாமான்களாய் இருக்கின்றன. ஒரு கட்டடத்தின் பலம் அதைக் கட்டுகிற சாமான்களைப் பொறுத்திருக்கிறது போல, உங்கள் உலக

வாழ்க்கைக்கு உதவும்படியான ஒழுக்கத்தின் தன்மையும் நீங்கள் பள்ளிக்கூட வாழ்க்கையில் உண்டுபண்ணுகிற எண்ணங்களேயும், இச்சைகளேயும், சொற்களேயும், செய்கைகளேயும் பொறுத்திருக்கின்றது. எவ்வளவுக்கெவ்வளவு உங்கள் எண்ணங்கள் முதலியவை நல்லனவாய் இருக்குமோ, அவ்வளவுக்கவ்வளவு உங்கள் ஒழுக்கமும் நல்லனவாய் அமையும். நீங்கள் இந்த இயல்பு முறையைக் கவனித்து, உங்கள் சம்பந்தமாயும் பிறர் சம்பந்தமாயும் உங்கள் வீடுகளிலும் பள்ளிக்கூடத்திலும் நல்ல எண்ணங்களேயே எண்ணல் வேண்டும்; நல்ல இச்சைகளேயே இச்சித்தல் வேண்டும்; கெட்ட எண்ணங்களும், கெட்ட இச்சைகளும் உங்கள் மனத்தில் வருமானல், அவைகளுக்கு எதிரிடையான நல்ல எண்ணங்களேயும் நல்ல இச்சைகளேயும் நினேத்து, அவற்றை விலக்கல் வேண்டும்.

உங்கள் வீட்டிலுள்ள பெற்ருேர் முதலியவர்களிடத்திலும், பள்ளிக்கூடத்திலுள்ள உபாத்தியாயர்களிடத்திலும், பிள்ளேகளிடத்திலும், இனிய சொற்களேயும், பயனுடைய சொற்களேயும் சொல்லல் வேண்டும்; கடுஞ்சொற்களேச் சொல்லக் கூடாது. இதே பிரகாரம் உங்களுக்கும் பிறருக்கும் நன்மை தரும் செய்கைகளேயே செய்தல் வேண்டும். உங்கள் வீடுகளிலும், பள்ளிக்கூடத்திலும், வெளியிலும் சமயம் வந்த பொழுதெல்லாம் பரோபகாரச் செயல்களேச் செய்து வரல் வேண்டும். எந்த உயிருக்கும் அற்பமாயினும், கேடு நினேத்தல் கூடாது; செய்தலும், கூடாது. நீங்கள் உங்கள் பெற்ருேர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் அடங்கி, அவர்கள் உங்களுக்கு நல்லன யாவை, தீயன யாவை என்று சொல்லுகிற சொற்களேக் கேட்டு நடத்தல் வேண்டும். நீங்கள் எப்பொழுதும் தீமையை விலக்கியும், நன்மையை நாடியும், பெரியோர்கள் சொற்களேக் கேட்டும், நல்வழியில் வருந்தி முயன்று நடந்து வருவீர்களானல், உங்கள் ஒழுக்கமும் நல்ல ஒழுக்கமாய் அமையும். நீங்கள் உங்கள் உலக வாழ்க்கையில்

அதிக பணமுடையவர்களாய் இருக்கலாம்; கொஞ்சம் பணமுடையவர்களாய் இருக்கலாம்; ஏழைகளாய் இருக்கலாம்; பெரிய வேலையில் அமர்ந்திருக்கலாம்; சிறிய வேலையில் அமர்ந்திருக்கலாம். எந்த நிலை உங்களுக்குக் கிடைத்தாலும், அந்த நிலையில் உங்கள் வாழ்க்கையைச் செவ்வையாய் நடத்த நல்லொழுக்கம் அவசியமாய் வேண்டுவது. ஆகையால், நீங்கள் உங்கள் பள்ளிக்கூட வாழ்க்கையில் ஒழுக்கம் அமைத்தலையே (Building of Character) குறியாக வைத்து ஒழுகல் வேண்டும்.

சமயப் பயிற்சி: சமயப் பயிற்சி சம்பந்தமாக நீங்கள் சமய உண்மைகளை அறிந்துகொள்ள இப்பொழுது உங்களுக்குத் தகுந்த வயது வரவில்லை. ஆயினும், சில உண்மைகள் பொதுவாய் உங்களுக்குத் தெரிய வேண்டும். அவைகளைச் சொல்கிறேன்:

எங்கும் நிறைந்திருப்பவராயும், எல்லாம் செய்ய வல்லவராயும், எல்லாம் அறிபவராயும் உள்ள கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் உலகிலுள்ள உயிர்களையெல்லாம் தம்மிடத்தினின்றும் பிரிக்க முடியாத அருள் என்னும் சக்தியினால் காக்கின்றார். மக்களாகிய நாம் எல்லாம் அவர் அருளினுடைய உதவியின்றி ஒரு கணமும் இருக்க முடியாது. அவர் அருளை நினைந்துகொண்டே நாம் எல்லாக் காரியங்களையும் செய்தல் வேண்டும். பிள்ளைகளாகிய நீங்களும் உங்கள் பள்ளிக்கூட வாழ்க்கையில் படிக்கும் பாடங்கள், விளையாடும் விளையாட்டுக்கள், இன்னும் நீங்கள் செய்யும் வேறு செயல்கள் ஆகிய இவை எல்லாம் கடவுளினுடைய அருளை நினைந்துகொண்டே செய்தல் வேண்டும். கடவுளினினுடைய அருளை நினைந்துகொண்டு செய்கிறதனால், நீங்கள் செய்கிற எந்தச் செயலும் அவர் அருளுக்கு ஒத்து இணங்கியிருத்தல் வேண்டும்; எதிரிடையாய் இருத்தல் கூடாது. கடவுளுடைய அருளுக்கு ஒத்து இணங்கி உள்ள உங்கள் எண்ணங்கள், இச்சைகள், செயல்கள் ஆகிய இவைகளெல்லாம் அறம் அல்லது புண்ணியம் என்று

சொல்லப்படும் ; அவர் அருளுக்கு எதிரிடையான உங்கள் எண்ணங்கள், இச்சைகள், செயல்கள் ஆகிய இவைகள் எல்லாம் மறம் அல்லது பாவம் என்று சொல்லப்படும். இதனுல், மேலே சொன்ன நல்லொழுக்கம் உங்களுடைய வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமானது என்பதை அறியலாம். ஆகையால், நீங்கள் ‘அறஞ் செய விரும்பு,’ என்று ஔவைப் பிராட்டியார் சொல்லிய வண்ணம் எப்பொழுதும் கடவுளின் அருளினையே நினைந்து, மறத்தை விலக்கி, அறத்தையே செய்து வரல் வேண்டும். அப்படிச் செய்து வருவீர்களானுல், உங்களுக்குச் சகல நன்மைகளும் உண்டாகும்.

நீங்கள் இப்பொழுது இளவயதுடைய வாலிபர்களாய் இருக்கிறீர்கள். உங்கள் மனம் இப்பொழுதுதான் பளிங்கு போலச் சுத்தமாய் இருக்கின்றது. அழுக்குப் படியாத துணியில் நன்ருகச் சாயம் பிடிப்பது போல, உங்கள் மனத்தில் எந்த நல்ல பழக்கங்களும் பதியும். இந்தப் பள்ளிக்கூடத்திலிருக்கும் பொழுது நீங்கள் பழகுகிற பழக்கங்களே உங்களுக்குப் பின் வாழ்க்கையில் உண்டாகும் மேலான அறிவுக்கும், திருந்திய ஒழுக்கத்திற்கும் அடிப்படையாயிருக்கும். இனிக் கல்லூரிகளிலும் பின் வாழ்க்கையிலும் உண்டாகும் பழக்கங்களெல்லாம் மேற்படைகள் ஆகும். அடிப்படை நன்ருகப் போடாவிட்டால், மேற்படை நிலையாக நில்லாது. அடிப்படை நன்ருய்க் கட்டப்படாத கட்டடம் எப்படிப் பலக்குறைவுடையதாய்விடுமோ, அப்படியே இந்தப் பள்ளிக்கூட வாழ்க்கையில் உங்களுடைய ஒழுக்கமும் அறிவும் செம்மையாயிராவிட்டால், பிற்கால வாழ்க்கை செம்மையாயிருக்கமாட்டாது. ஆகையால், இந்த உண்மையைக் கவனித்து, நீங்கள் வேறு வகைப் பயிற்சியின் தலைப்பிற் சொன்ன விஷயங்களையும் மனத்தில் வைத்துக்கொண்டு நடக்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்வீர்களானுல், உங்கள்

பின் வாழ்க்கை நல்வாழ்க்கையாகும். நீங்கள் இந்தியத் தாய்க்கு அவள் மேலான நிலையடையத் தொண்டு செய்யும் சிறப்புடைய மக்களாவீர்கள்; நமது இந்திய நாடு பிற நாட்டார்களால் மதிக்கும்படியான சீர்மையும் சிறப்பும் அடையும். எல்லாம் வல்ல இறைவன் அருளால் உங்களுக்குச் சகல நன்மைகளும் உண்டாவனவாக!

---

2. பூண்டி அரங்கநாத முதலியார்
(1847-1893)

[திரு. அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள் எம். ஏ., எல். டி.]

பூண்டி அரங்கநாத முதலியார், சென்ன பட்டினத்திலே, சிறந்த முதலியார் பரம்பரையிற் பிறந்தார். அவர் பிதா பூண்டி சுப்பராய முதலியார், இங்கிலிஷ் கற்றவர்; ஆதலால் இங்கிலிஷ் கல்வியின் அருமையறிந்தவர். அரங்கநாத முதலியார் சிறுவராயிருக்கும்போதே அசாதாரண புத்தி தீக்ஷணமுடையவராகக் காணப்பட்டபடியால், அவர் பிதா அவர்க்கு வீட்டிலேயே அதிக அக்கறையோடு கல்வி கற்பித்தார். சென்னையில் இருந்த அவர் தந்தையார் அவருக்குக் குழத்தைப் பருவம் நீங்கும் முன்னமே, அவிநாசிக்கு மதராஸ் ரயில்வேயில் உத்தியோகமாய் மாற்றிப் போக நேர்ந்தது. ஆயினும், அவர் அங்கே நெடுநாள் தங்கவில்லை. ஓர் இரவில் சுப்பராய முதலியார் இருந்த சிறு வீட்டில் கொள்ளைக்காரர்கள் புகுந்து கொள்ளையடித்தார்கள். அப்பொழுது அவர் தம் பிள்ளைக்கு நேரும் ஆபத்துக்குப் பயந்து, சிறுவராயிருந்த அவரை ஓர் இடத்து மறைத்து வைத்திருந்தனர். கொள்ளைக்காரர் எல்லாவற்றையுங் கொள்ளையாடிய பின்னும், 'இன்னும் மறைத்து வைத்திருக்கிறாய்; காட்டு; இல்லாவிட்டால், உயிரை எடுத்துவிடுவோம்!' என்று சொல்லிய

படியால், தந்தையார் மைந்தரைக் காட்ட, மைந்தர் தம் பங்குக்கு உயிர்ப்பிக்ஷை கேட்க வேண்டியிருந்தது. மறு நாளே சுப்பராய முதலியார் அவிநாசியை விட்டுச் சென்னைக்கு வந்தனர்.

வீட்டில் தம் தந்தையாரின் ஜாக்கிரதையால் அரங்கநாத முதலியார் நன்ருகப் படித்து வந்தார். இங்கிலிஷ் படிப்பு அவ்வளவு மேலானதாய் இருந்திராதென்பது நிச்சயம்; எனினும், தமிழ் நூல்களிடத்து அவர்க்கிருந்த ஆர்வமெல்லாம் இக்காலத்துத் தம் தந்தையார் முயற்சியால் தாம் கற்ற கல்வியினுலேதான் உண்டாயிருக்க வேண்டும். 1860ல் தம் பதின்மூன்ரும் வயதில் அவர் பச்சையப்பன் பாடசாலைக்குப் போய், தற்காலத்து நான்காம் பாரமென்று சொல்லப்படும் வகுப்போடொத்த மூன்ரும் வகுப்பில் சேர்ந்தார். அக்காலத்து அந்தப் பாடசாலைக்குத் தலைவர், கல்வி விஷயங்களில் பிரசித்தி பெற்றிருந்த பேசில் லவரி என்பவர். அவர் தம் பாடசாலை மாணுக்கருள் ஒவ்வொருவரையும் கவனித்து வந்தது போலவே, அரங்கநாத முதலியாரையுங்கவனித்து, அவருடைய புத்தி விசேஷங்களைக் கண்டு மகிழ்ந்தார். மூன்ரும் வகுப்பில், அரங்கநாத முதலியாருக்கு வருஷத்திற்கு 60 ரூபாய் வருமானமுள்ள 'ஸ்காலர்ஷிப்' ஒன்றிருந்தது; அவர் வருஷாந்திர பரீக்ஷையில் மேலாகத் தேறியபடியால், அடுத்த வருஷத்திலேயே முதல் வகுப்பாகிய மெட்ரிக்யுலேஷனிற் சேர்க்கப்பட்டார்.

இந்த வகுப்பில் லவரி துரையே நேராக அவர்க்கு உபாத்தியாயராயிருந்தபடியால், அவர் முன்னிலும் அதிகமாக அக்கறையெடுத்துப் படித்தார். அநேக பரிசுகள் அவர்க்குக் கிடைத்தன. விசேஷமாகச் சொல்லத்தக்கது, இங்கிலிஷிலும் கணிதத்திலும் தேர்ச்சியடைந்ததற்காகக் கொடுக்கும்பொருட்டு ராஜா ஸர். மாதவராயர் ஏற்படுத்திய பரிசு. அரங்கநாத முதலியார் மாணுக்கராயிருந்த காலத்து நடந்த விஷயமொன்று கவனிக்கத் தக்கது:

அதனல், அவர்க்குத் தம் சொந்த புத்தி சாமர்த்தியத்திலே எவ்வளவு நம்பிக்கை இருந்ததென்றும், அவரிடத்துக் கடைசிவரை காணப்பட்ட தைரியமும் சுயேச்சையும் அக் காலத்தேயே அவர்பாற்காணப்பட்டனவென்றும் அறியலாம். ஒரு சமயம் அவர் விசேஷப் பரிசு ஒன்று பெறும் நோக்கத்தோடு 'பெண் கல்வி' என்னும் விஷயத்தைப் பற்றி ஒரு வியாசம் எழுதினர். வியாசங்களையெல்லாம் பார்த்த பரீக்ஷகர்கள் அவர் வியாசத்தையும், குப்புராம சாஸ்திரியார் வியாசத்தையும் பொறுக்கி எடுத்தார்கள். அப்புறம் அவை ஜே. பி. நார்ட்டன் துரைக்கும், ஜே. டி. மெய்ன் துரைக்குங் காட்டப்பட்டன. மெய்ன் துரை அரங்கநாத முதலியார் வியாசம் சிறந்ததென்ருர்; நார்ட்டன் துரை குப்புராம சாஸ்திரியார் வியாசத்தை மெச்சினர். இவ்வாறு அபிப்பிராய பேதம் ஏற்படவே, அவை நீதிபதி ஹாலோவே பார்வைக்கு அனுப்பப்பட்டன. அவர் அரங்கநாத முதலியார்க்கே பரிசளிக்கவேண்டும் என்ருர். எந்தக் காரணத்தாலோ, பரிசு குப்புராம சாஸ்திரியார்க்கு அளிக்கப்பட்டது. இஃது அவர் மனத்தில் உறுத்திக்கொண்டே இருந்தது. பாடசாலை வருஷாந்தர உற்சவத்தன்று கவர்னர் சபாநாயகராய் வீற்றிருக்கப் பெருஞ்சபையொன்று கூடியிருந்த பொழுது, அரங்கநாத முதலியார் வியாசமுங் கையுமாய்த் தம் குறையை எடுத்துச் சொல்ல விரைந்தார். அது கண்ட உபாத்தியாயர்கள், அவ்விஷயத்தைத் தாங்களே கவனிப்பதாக வாக்களித்து, அவரைச் சமாதானப் படுத்தினர்கள்.

1862ல் அரங்கநாத முதலியார் ராஜதானி முழுதிலும் முதல்வராக மெற்றிக்யுலேஷன் பரீக்ஷையில் தேறினர். அதே வருஷத்தில், பச்சையப்பன் கலாசாலைத் தருமகர்த்தர்கள் கொடுத்த 'ஸ்காலர்ஷிப்'போடு பிரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்தார். அவர் கலாசாலைப் படிப்பு, பாடசாலைப் படிப்பினும் பன்மடங்கு சிறந்தது. அவர் பிரஸிடென்ஸி காலேஜில் சேர்ந்த சமயம் நல்ல சமயம்; எட்

மண்ட் தாம்ஸன் என்பவர் கலாசாலைத் தலைவராயும் இங்கிலிஷ் ஸாஹித்ய போதகாசிரியராயும் அமர்ந்து, கலாசாலை மாணுக்கர்க்கு மிகச் சிறந்த கல்வியளிக்கத் தொடங்கிய சமயம். ஸ்நேல், நேவின்ஸ் முதலியவர்கள் கல்வியிற் சிங்கங்கள்தாம்; ஆயினும், அரங்கநாத முதலியார் அவர்களை எல்லாம் மறக்கச் செய்யும் சரபமாக வேண்டுமென்று எண்ணி, அவ்வாறேயாகி விளங்கினர். கணிதத்திலும், இங்கிலிஷ் ஸாஹித்யத்திலும், தத்துவ சாஸ்திரத்திலும், தமிழிலும் அரங்கநாத முதலியாரின் மேம்பட்டார் அவர் காலத்தில் ஒருவரும் இல்லை. தாம்ஸன் துரையும் அவருடன் இருந்த போதகாசிரியர்களும் அரங்கநாத முதலியார் வித்தியாபிவிருத்தி அடைவதைக் கண் இமையாது களிப்போடு கவனித்து வந்தார்கள். கலாசாலைக்கு வெளியேயும் அரங்கநாத முதலியார் பெயர் தெரிந்திருந்தது. கல்வி விசாரணைக் கர்த்தராயிருந்த பவேல் துரையும் நீதிபதி ஹாலொவே முதலியவர்களும் இந்த அரிய மாணுக்கர் விஷயத்திற் சிரத்தை எடுக்கத் தொடங்கினர்கள். அரங்கநாத முதலியார் கணித சாஸ்திரத்திற் பாண்டித்தியம் அடைதலையே தம் கருத்தாகக் கொண்டாராயினும், அவர் இங்கிலிஷ் பாஷையில் அடைந்த புலமை சாமானியமேயன்று! எந்த இங்கிலிஷ் ஆசிரியரும், 'எனக்கு அவ்வளவு ஞானம் இருந்தாற் போதுமே!' என்று சொல்லும் தரத்தது. அரங்கநாத முதலியார் இங்கிலிஷ் பாஷையின் அதி நுட்பங்களையெல்லாம் ஆராய்ந்தறிந்து, உயர்தரக் கல்வி கற்ற ஆங்கில துரைமகன் போல அவ்வளவு அநாயாசமாகவும் நாகரிகமாகவும் அப்பாஷையைப் பேசி வந்தார்.

1862ல் திருவாங்கூர் மஹாராஜா ஸ்ரீராமவர்மா என்பவர் சென்னைச் சர்வ கலாசாலையாரிடத்து ஒரு பெருந்தொகையைக் கொடுத்து, பி. ஏ. பரீக்ஷையில் முதல் வகுப்பில் முதல்வனுகத் தேறும் மாணுக்கனுக்கு 300 ரூபா பெறும் பொற்பதக்கமொன்று பரிசாக அளிக்க வேண்டு

மென்று கேட்டுக்கொண்டார். 1863லும், 1864லும் முதல் வகுப்பில் ஒருவரும் தேருமையால், அப்பரிசு அளிக்கப்படவேயில்லே. 1865ல் அரங்கநாத முதலியார் அதனைப் பெற்ருர். ஜான் ப்ரூஸ் நார்ட்டன் துரை பச்சையப்பன் கலாசாலேயில் அவ்வருஷ மஹோற்சவத்தில் பேசுங் காலத்து அரங்கநாத முதலியார் அடைந்த பெருமைகளைப் பற்றி விரிவாக எடுத்துச் சொன்னர். அரங்கநாத முதலியார் தாம் படித்த கலாசாலேயிற் பெற்ற பரிசுகளும் பதக்கங்களும் பல. தாம்ஸன் துரைக்கு அவரிடத்தில் அத்தியந்த பிரியம் உண்டு. அவர் பி. ஏ. பரீக்ஷையில் தேறிய உடனே அவரை அக்கலாசாலேயிலேயே ஓர் உதவி உபாத்தியாயராக நியமிக்கும்படி தாம்ஸன் துரை ஏற்பாடு செய்தார்.

அரங்கநாத முதலியார் உபாத்தியாயராய் அமர்ந்ததற்குக் காரணம், அவருடைய யூரோப்பிய சிநேகிதரே என்பதில் தடையில்லே. அவர்களெல்லாம் கல்வி விஷயத்தில் ஊக்கத்தோடு உழைத்த பெருமக்கள். ஆயினும், தாம் இந்த உத்தியோகத்தில் அமர்தலால் ஜனங்களுக்கு எவ்வளவு நன்மை செய்யக்கூடுமென்று அவர் அறியாதிருந்தவரல்லர். அதனுலேதான், பல முறை அவரை வெளியில், ‘பெரிய உத்தியோகங்கள் தருகிறேரும்,’ என்று பலர் வேண்டியும், அவர் தம் வாழ் நாள் முழுதும் உபாத்தியாயராகவே இருந்துவிட்டார். ஆயினும், ஒரு குறையுண்டு: பிரஸிடென்ஸி காலேஜில் கணித சாஸ்திர போதகாசிரியராக உத்தியோகம் ஸ்திரமாகுமுன் அவர் பதினறு வருஷ காலம் அங்கும் இங்குமாகத் தடுமாறிக்கொண்டிருந்தார். இடையில் நடந்த சங்கதிகளும் கவனிக்கத் தக்கனவே. தாம் உபாத்தியாயராய் நியமிக்கப்பட்ட ஐந்து வருஷத்திற்கெல்லாம் 1870ல் அவர் எம். ஏ. பரீக்ஷையில் தேறினர். சில காலம் கும்பகோணம் காலேஜ் போதகாசிரியராய் இருந்தார். அதன் பின் சில காலம் பல்லாரியில் ப்ரோவிங்ஷல் ஸ்கூல் தலேவராய் இருக்க

வேண்டி இருந்தது. கடைசியில் முன் சொல்லியபடி பிரஸிடென்ஸி காலேஜில் ஸ்திர போதகாசிரியராக நியமிக்கப்பட்டார்.

1872ல் அரங்கநாத முதலியார் சென்னைச் சர்வகலா சாலையில் ஒரு 'பெல்லோ' (Fellow) ஆனார். 1875-ஆம் வருஷமுதல் தம் அந்திய காலம் வரை ஒவ்வொரு வருஷமும் அவர் 'ஸிண்டிகேட்' என்னும் நிருவாக சபையில் 'மெம்ப'ராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். சர்வ கலா சாலைச் சங்கத்தார் கூடுங் கூட்டங்களிலெல்லாம் அவர் மிக்க சிரத்தையோடு முன் நின்று உழைத்தார். சர்வ கலாசாலை சம்பந்தமான விஷயங்களில் அரங்கநாத முதலியாருடைய அபிப்பிராயங்கள் கவுரவிக்கப்பட்டது போல, வேறு எந்த இந்தியருடைய அபிப்பிராயமும் கவுரவிக்கப்படவில்லை. ஸிண்டிகேட்டிலும் அவர்க்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. ஆயினும், அவர் அதனைச் சிலர் போல ஒரு கக்ஷியாருடைய நன்மைக்கோ, ஒரு குறிப்பிட்ட மனிதனுடைய நன்மைக்கோ, ஒரு நாளும் உபயோகித்தவரல்லர். ஜாதி பேதம் மத பேதம் பாராட்டாமல், எல்லா வகுப்பினருடைய நன்மையையும் நாடியே அவர் ஊக்கத்தோடு பாடு பட்டார். கல்வி விஷயமாக கவர்ன்மென்றார் என்னென்ன பெருஞ்சங்கங்கள் ஏற்படுத்தினலும், அவற்றிலெல்லாம் அவரும் இருப்பர். அவருடைய அபிப்பிராயங்களுக்கு அவ்வளவு மதிப்பு உண்டாயிருந்தது. 1890ல் அரங்கநாத முதலியார் மதராஸ் கவர்ன்மென்றாருக்குத் தமிழ் 'ட்ரான்ஸ்லேற்றர்' என்னும் மொழி பெயர்ப்பவரானார். 1892ல் ஸர் ஹென்ரி ஸ்டோக்ஸ் துரையினுடைய பிரயத்தினத்தினல், சென்னபட்டினம் 'ஷெரிப்'பாக நியமிக்கப்பட்டார். அவருடைய குணாதிசயங்களைப் பல வழியினும் அறிந்த கவர்ன்மென்றார் அவர்க்கு 'ராய் பஹதூர்' பட்டமளித்தனர்.

அரங்கநாத முதலியார் போதகாசிரியராக யாவர்க்கும் உபயோகமானது போலவே, நகர வாசிகளில் ஒருவரா

யும் தம் தேசத்தார்க்கு மிகவும் பயன் பட்டார். இந்திய ஜனங்களுடைய கருத்துக்களைத் தெளிவாக அறிய வேண்டிய அவசியம் நேரிட்டபோதெல்லாம், அந்நியர்க்கும் ராஜாங்க உத்தியோகஸ்தர்க்கும் அரங்கநாத முதலியார் செய்த உதவி அதிகம். சென்னை 'முன்ஸிப்பாலிட்டி'யின் ஒரு மெம்பராயிருந்து, முனிஸிப்பல் கூட்டங்களுக்கெல்லாம் சிரத்தையோடு சென்று, விஷயங்களை நன்ருக விவகரித்தார். அவருள்ள மட்டும் 'காஸ்மாபாலிற்றன் க்ளப்' என்னும் சென்னை உயர்தர இந்தியர் சபைக்கு உயிராயிருந்தார். அவர் முகத்தைப் பார்த்து அநேகர் அந்தச் சபையை ஆதரித்தனர். 1890ல் அரங்கநாத முதலியார் மதராஸ் சர்வகலாசாலைப் பட்டதாரிகளுக்கு உபந்நியசிக்கும் பெருமை பெற்ருர். அவர் சொல்லியதில் நூதன விஷயங்கள் விசேஷமாயில்லையாயினும், விவேகம் செறிந்து பாஷை நடை உயர்ந்திருந்தது. யூரோப்பியரும் இந்தியரும் ஒருங்கே அவ்வுபந்நியாசத்தினைப் புகழ்ந்தனர். 'பூதன இந்தியா' ஆசிரியராகிய காட்டன் துரை அதனைப் படிக்க நேர்ந்து படித்தபின் அரங்கநாத முதலியாருக்கு ஒரு கடிதம் எழுதினர்: "நான் தங்களுக்கு முற்றிலும் அந்நியனுகலின், இக்கடிதம் எழுதத் துணிந்ததற்காகத் தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் தங்களுடைய 'சர்வ கலாசாலை உபந்நியாச'த்தைப் படிக்கும் பாக்கியம் பெற்றேன்; அஃது ஆதி முதல் அந்தம் வரை எவ்வளவு நன்ருக இருக்கிறதென்று சொல்லாமலிருக்க எனக்குக் கூடவில்லை. நான் செய்வது அக்கிரமமென்று தோன்ருதாயின், தங்களை மனப்பூர்வமாக வாழ்த்தும் நோக்கமுடையேன். சென்னையில் மட்டுமேயன்றி, இந்தியா முழுதிலும், இங்கிலாந்திலுங்கூட உள்ளவர்கள் அதை வாசிக்க வேண்டுமென்பதே எனது கோரிக்கை."

இந்திய ஜன சங்கத்திற்கு ஓர் அரிய ஆபரணம் போன்றிருந்த அரங்கநாத முதலியார், 1893ல் காலஞ் சென்ருர். நாடு முழுதும் துயர்க்கடலுள் ஆழ்ந்தது.

அவர்க்கு அந்திய காலத்தில் நேர்ந்த பிணி, மரணத்திற்குக் காரணமாகும் என்று ஒருவரும் நினைக்கவில்லை. பிணி இருந்ததெல்லாம் சில நாள்தான்; வேலை மிகுதியால் ஜ்வரங் கண்டது. தாம் சாவதற்கு நான்கு நாளுக்கு முன் வரை காலேஜுக்குப்போய் வந்துகொண்டிருந்தாராதலால், கடைசிவரை உழைப்பைக் கைவிட்டவரல்லர். யூரோப்பியர் இந்தியர் என்னும் இரு திறத்தாருள்ளும் அவர் இறந்ததற்காக வருந்தாதவர் ஒருவரும் இலர்.

அரங்கநாத முதலியார் திடீரென்று அகால மரணமடைந்ததனால், தங்களுக்கு நேர்ந்த பெருநஷ்டத்தை உணர்ந்த பிரஸிடென்ஸி காலேஜ் கவுன்ஸிலர், "அவர் கணித சாஸ்திர போதகாசிரியராக மட்டுமோ புகழ் படைத்தார், தர்க்க நீதி சாஸ்திரங்களும் சரித்திர பாடங்களும் அறிவுறுத்திச் சிறந்தாரன்றே!" எனவும், "அவரை இழந்ததனால், காலேஜிற்குப் பல விதத்திலும் சொல்லரிய நன்மை செய்த ஒரு மகா புருஷனை இழந்தேமாயினேம்," எனவுஞ் செப்பினர். சென்னைக் கல்வி விசாரணைத் தலைவராயிருந்த டாக்டர் டங்கன் துரை, பிரஸிடென்ஸி காலேஜில் தாமும் ஒரு காலத்துப் போதகாசிரியராயிருந்து அரங்கநாத முதலியாருக்கு ஆப்த நண்பராயிருந்தவராதலின், மனம் உளைந்து அவர் மூத்த மகனுக்குக் கடிதம் எழுதித் தாம் அவரை அவரது அந்திய காலம் வரை மிகவும் கவுரவித்து வந்த வரலாற்றைக் குறித்தனர். அக்கடிதத்தில், "ஆயினும், சென்னையில் தற்காலத்திருக்கும் யூரோப்பியரில் ஒருவருக்கும் உமது தகப்பனரோடு எனக்கிருந்த சிநேகம் இருந்திராது. அவருடைய சிறந்த புத்தி சாமர்த்தியங்களையும் உயர்ந்த குணங்களையும் யான் அறிந்த அளவு அறிவதற்கும், அவர்களுள் ஒருவருக்கும் சந்தர்ப்பம் வாய்த்திராது. பண்டிதர்க்கு ஓர் ஆபரணம்; நீதியின் வழுவாத புருஷர்; அபூர்வ புத்தியும் விவேகமும் உடையவர்; யாவரையும் மகிழ்விக்கும் நடையினர்; தம்மை அறியும் பாக்கியம் பெற்றார்

அனைவர்க்கும் பிரிய நண்பராயிருந்தவர். அவர் ஞாபகார்த்தமாக ஏதோ செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன என்று கேள்விப்பட்டேன்; அப்படி நடந்தால், அஃது எனக்கு மிக்க சந்தோஷமே தரும். ஆயினும், அவரை ஞாபகத்தில் நிறுத்துதற்குச் சிறந்த வழி ஒன்றே; அவ்வழி அவர் தம் தேசத்தவர்க்கும் நம்மெல்லாருக்குமே சிறந்த நிதரிசனமாவராகலின், அவர் மாதிரிகளைப் பின்பற்றுதலேயாகும்,'' என அரங்கநாத முதலியாரது குணாதிசயங்களைத் தெளிவாக எடுத்துரைத்தனர்.

டாக்டர் மில்லர் துரையும், கல்வி விசாரணைச் சங்கத்தில் ஓர் அவயவியாக அரங்கநாத முதலியார் செய்த அரிய வேலைகளைப் பற்றி மிகவும் வியந்து பேசினர்: "முக்கியமான விஷயங்களை ஆராயுங்கால் கக்ஷிகள் தாமாகவே ஏற்பட்டுவிடும்; கக்ஷிகளில் ஒன்றைப்பற்றிக் கொண்டு வாதித்தலே சாமானியர்க்கு இயல்பு. அரங்கநாத முதலியாரோ, கடைசிவரை ஒரு கக்ஷியையும் சேராமல், நீதிபதிபோல உபய கக்ஷிகளையும் சீர் தூக்கிப் பார்த்துத் தம் சிறந்த அபிப்பிராயத்தை எல்லாரும் மெச்சும்படி வெளியிடும் அரிய குணம் அமைந்தவர். மஹா ஜனங்களுக்கு வழிகாட்டுவதற்காக அவதரிக்கும் தீரர்களிடத்து அந்தக் குணம் அமைந்திருத்தல் இயற்கைதானே! இன்னும் அச்சங்கத்திலே புலவர் சிகாமணிகள் எத்தனையோ பேர் இருந்தாலும், ஆடம்பரம் சிறிதுமின்றி அதிக உபயோகமான வேலை செய்தவர் அவரைவிட ஒருவரும் இல்லை.''

அரங்கநாத முதலியார் போதகாசிரியர்; ஆயினும், டாக்டர் மில்லர் துரை அவரை நிஷ்பக்ஷபாதமாய் மனிதரையும் விஷயங்களையும் அளக்கும் நீதிபதியென்றுரைத்தார். அவரைப் பற்றிச் சிறந்த நீதிபதி முத்துசாமி ஐயர் என்ன சொல்லினர்? "நெருங்கிய சிநேகத்தால் அரங்கநாத முதலியார் எப்படிப்பட்டவரென்று நன்கு அறிந்தேன். பொது ஜன நன்மைக்காக எவ்வளவு பாடுபட்

டார்! போதகாசிரியராயிருந்து அவர் செய்த நன்மையை இவ்வளவென்று சொல்ல நம்மால் ஆகுமா! கல்வி அபிவிருத்தியிலும், எந்த விதமான அபிவிருத்தியிலும் அவருக்கு இருந்த ஊக்கம் எவ்வளவு! தம் கடமைகளை நிறைவேற்றுவதிலும், மேன் மேலும் படிப்பதிலும் அவர்க்கு இருந்த சிரத்தை ஆச்சரியத்தையே விளைத்தது! முதல் கடமைகள்; அப்புறம் படிப்பு. அவர்க்குப் படிப்பிற் சலிப்பே இல்லை எப்பொழுதும் படித்துக்கொண்டே இருப்பார்.''

அரங்கநாத முதலியாரிடத்து அவ்வளவு விசேஷத்திற்குங் காரணம் அவர் முயற்சியன்று; அவருடைய அதிநுட்ப புத்தியே. அவருடைய பல்லாயிரம் நண்பருள், எந்த விஷயத்தில் எந்தச் சமயத்தில் நுழைந்து ஆராய்ச்சி செய்ய வெண்டுமாயினும் முன் யத்தனமின்றி நுட்பமாகச் செய்யக்கூடிய அந்தக் குசாக்கிர புத்தியை வியவாதாரும், அதற்காக அவரிடத்துப் பொறாமை கொள்ளாதாரும் யாவர்! அவரிடத்தில் அதிசாமர்த்தியமும் பரிபூரண பாண்டித்தியமும் அமைந்ததோடு நல்ல லௌகிக ஞானமும் அமைந்திருந்தது. மிக அரிய தேர்ச்சியும் மிக உயர்ந்த புத்தியும் அவரிடத்திற் சேர்ந்திருந்தன. அவருடைய அதியற்புத சம்பாஷணங்களைக் கேட்கக் கேட்க ஆநந்தமாயிருக்குமாம். அவர் பாஷை நடையில் இனிமை, வலியுடைமை, மரபு வழுவாமை என்னும் இவை விசேஷ குணங்களாயிருந்தன. பெருங்கவிகளைப் பற்றியும் பெருங்கிரந்த கர்த்தர்களைப் பற்றியும் உபந்நியசிப்பதே அவர் தம் சிநேகிதரோடு அடிக்கடி செய்த சம்பாஷணையாகும். பிரசங்க விஷயத்தை எடுத்து நோக்கின், அவரை நாவலர்களோடு சேர்க்க முடியாது; ஆயினும், அவர் தம் கருத்துக்களைச் சிறந்த நடையில் அமைத்து அநாயாசமாகச் சிறிதும் தட்டின்றி அழகாகப் பேசியவர். இங்கிலிஷ் ஸாஹித்யத்தில் அவருக்கு அத்தியந்த பிரியம்

உண்டு : ஷேக்ஸ்பியர் அவருக்கு உகந்த மஹா கவி. வசன காவிய கர்த்தர்களுள் அரங்கநாத முதலியார் லெக்கி, லெஸ்லி ஸ்டீபன், ஜான் மார்லி, ரஸ்கின் என்றிவர்கள் எழுதிய காவியங்களைப் பிரியமாய் வாசித்தார். அவருடைய தமிழ் இலக்கிய ஞானம் அளவிடுந் தரத்ததன்று ; எவ்வளவு சிறந்த பண்டிதராலும் அவரை வெல்ல முடியாது. கம்பராமாயணம், திருவிளையாடற்புராணம் முதலிய நூல்களில் ஆயிரக்கணக்கான செய்யுட்கள் அவர்க்குப் பாடமுண்டு. சிநேகிதர்கள் சூழ இருக்கும்பொழுது செய்யுட்களை ஒப்பித்து அவற்றிற்குத் தாற்பரியம் சொல்ல ஆரம்பித்தாரானால், அவர்க்கு நேரம் போவதே தெரியாது. தற்காலத்து மாணவர்கள் சுதேச பாஷைகளைச் சிரத்தையோடு படியாதது அவர்க்குப் பெருந்துக்கமாயிருந்தது. இங்கிலிஷிலும் தமிழிலும் நிரம்பிய புலமை வாய்க்கப்பெற்ற அரங்கநாத முதலியார் பெயரைச் சொல்லக் கச்சிக் கலம்பகம் என்னும் ஒரு சிறு நூலேயுள்ளது. அந்நூலினாலே அவர் பேரறிவை நாம் அறிவதற்கும் இல்லை. வேறு வகை நூல்கள் தமிழிலோ இங்கிலிஷிலோ அவர் செய்யாது போயினமை நம் நாட்டிற்கு ஒரு பெருங் குறையே.

அரங்கநாத முதலியார் நல்ல துரை மகன். உயர் குடியிற் பிறந்து வளர்ந்தார்க்கே உரியதும், வருந்தினாலும் பெறுதற்கு அரியதும், பெற்றாலும் பெற்றவரிடத்து மட்டுமே காணப்படுவதுமாகிய திருந்திய நடை அவரிடத்துக் காணப்பட்டது. அவருடைய நெஞ்சம் மிகவும் இளகும் தன்மையது ; அவர் தம் வருமானத்திற் பெரும்பான்மையைத் தருமங்களிலும், தகுதியுள்ள ஏழை மாணாக்கர்க்கு உதவி செய்வதிலுஞ் செலவழித்தார் ; ஆயினும், அவர் வலக்கை கொடுத்தது இடக்கைக்குத் தெரியாது. அரங்கநாத முதலியார் மற்றையோரிடத்துச் சாமர்த்தியங் கண்டால் சந்தோஷமாக மெச்சுவர் ; ஸர். தி. முத்துசாமி ஐயரைப் பற்றிப் பேசும்பொழுது "தற்காலத்தில், புத்தி நுட்பத்தை மட்டும் கவனித்துப் பார்த்தால், இந்தியா

முழுதிலும் முத்துசாமி ஐயர்க்குச் சமானர் ஒருவரும் இல்லை,'' என்று சொன்னர்.

ஜன சங்க ஆசாரங்களைச் சீர் திருத்தும் விஷயத்தில், அரங்கநாத முதலியார் கொண்டிருந்த கொள்கை அனை வரும் மதிக்கத்தக்கது. ஏகதேசத்தில் ஒருவர் தாம் பெற்ற கல்வி வலியால் சீர்திருத்தங்கள் செய்யத் தொடங்கின், பெரும்பான்மையும் பிரயோஜனம் உண்டாவதில்லை; சாமானிய ஜனங்களும் உடன் வரவேண்டுமாதலால், அவர்கள் எவ்வளவு தூரம் பக்குவப்பட்டிருக்கிருர்களோ, அவ்வளவு தூரத்திற்குத்தான் சீர்திருத்தங்களும் சாத்தியமாயிருக்கும்; அவர்களைப் பற்றியே கவனியாமற் செய்யும் சீர்திருத்தம் சிறந்த அறிவும் ஜனுபிமானமும் உடையார் செய்வதன்று. ஆனல், நம் அறிவு ஒன்றைச் செய்யச் சொல்ல, அதைச் செய்யாது பழைய ஆசாரங் களையே அநுஷ்டித்து மனம் வேறு செயல் வேருயிருக்க வேண்டுமென்பது இதன் தாற்பரியமாமோ எனின், ஒரு காலும் ஆகாது. தூய்மையும் மேன்மையும் அமைந்த குணங்களுக்கெல்லாம் யமனுகும் அந்த விதமான வஞ்சக ஒழுக்கம். நம் அறிவிற்கு எது சிறந்த ஒழுக்கமென்று தோன்றுகிறதோ, அதனைத்தான் சிறந்ததாக ஒப்ப வேண்டும்; அன்றியும், நம்முடைய நடையால் மக்கட் சாதியைச் சீர்குலைக்கும் மூட நம்பிக்கைகளையும், தீய வழக்கங்களையும் நாம் சிறிதும் ஒப்பவில்லையென்றும், அவற்றைத் தொலைக்கக் கங்கணங் கட்டியிருக் கின்றேமென்றும் தெளிவாகக் காட்டுவது நம்முடைய கடமை. நாம் கற்கும்போது நம்மனத்தில் நன்கு ஊறிப் போயிருக்கிற மேலைத் தேசத்து விஞ்ஞான பலத்தினல் நாம் மேலும் மேலும் அபிவிருத்தியை நாடுவது இயல்பே. ஆயினும், உலகத்தில் நன்மையும் தீமையும் நன்ருகக் கலந்துள்ளனவாதலாலும், ஒன்றை அபேக்ஷிக்கிறதினு லேயே அதனைச் செவ்வையாய் உபயோகிப்போமென் பது நிசமாகாதாதலாலும் ஒவ்வொருவரும்,

"எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு."

என்னும் திருவள்ளுவர் உரையை மனத்திற் கொண்டு, எந்தக் காரியத்தையும், செய்யத் தொடங்கு முன்னமே நன்ருக ஆராய்ச்சி செய்து, தொடங்க வேண்டும். உள்ள கஷ்டங்களைப் பொறுக்க முடியவில்லையே என்று சீர் திருத்தஞ் செய்யப் புகுந்து, அவற்றினும் பெரிய கஷ்டங் களை இழுத்துப் போட்டுக்கொள்ளுதல் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதையாக அன்றோ முடியும்!

---

3. தமிழ் வளர்த்த தந்தையார்

[வித்துவான் எஸ். குருஸ் அந்தோனி அவர்கள்]

செந்தமிழ்த் தாயின் அந்தமில் அழகைப் பண்படுத் திய பெரியோர் பலர். அவர்களில், தாய் நாடு விட்டுச் சேய் நாடாகிய தமிழ்நாடு புக்குக் கிறிஸ்துபெருமான் நற் செய்தியைப் பரப்புவதற்கு அரும்பாடு பட்டு உழைத்த கிறிஸ்தவ குருமார் நம் புகழ்ச்சிக்கு மிகவும் உரியாராவர். அருளானந்தர் என்ற தத்துவபோதக சுவாமிகள், வீரமாமுனிவர், கால்டுவேல் பாதிரியார், டாக்டர் ஜி. யூ. போப்பையர் முதலிய கிறிஸ்தவப் பெரியார்களெல்லோரும் தமிழ் வளர்த்த தந்தைகளேயாவார்கள். இவர்களில் வீரமாமுனிவர் தமிழ்ப் புலமையில் வீறு கொண்டு விளங்கியவர்; அருந் தமிழ் மொழியில் அழகிய நூல்களை இயற்றிப் புகழ்சிறந்த வர்; தமிழ்த் தாயின் தவப் புதல்வர். இவர் வரலாற்றைத் தமிழ் நாட்டு மாணவர்கள் அறிய வேண்டுவது அவசிய மாகும்.

வீரமாமுனிவர், ஐரோப்பாவில் நனி நாகரிகம் படைத்ததும், மேனடு முழுமையும் ஒரு குடைக்கீழ் அரசு செலுத்தியதுமான இத்தாலிய நாட்டினராவர். இவர் 1680-ஆம் ஆண்டு, நவம்பர்த் திங்கள் 8-ஆம் நாளில் காஸ்தி

கிலியோனே என்னும் ஊரில் பிறந்தார். இவரது பிள்ளைப் பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி (Constantine Josph Beschi) என்பதாகும். இவரது முகப் பொலிவையும் மத குருவாகும் குறியையும் நன்குணர்ந்த இவர்தம் இரு முது குரவரும், 'இம்மகன் அழியா விழுப்புகழ் எய்துவன்!' என்று எண்ணி உளம் பூரித்தனர்.

வீரமாமுனிவர், உரிய பருவத்தில் கல்வி கற்கலானர்; இளமையிலேயே கிறிஸ்து நாதர்மீது அளவிலா அன்பு பூண்டு, அப்பெருமானுக்குத் தொண்டு செய்வதே வாழ்க்கையின் பயனென ஓர்ந்து, அரும்பெருங்கலைகளை ஆய்ந்து கற்றறிந்தார். கல்வியே விளையாட்டெனக் கண்ணிய கருணை வள்ளல், மதக் கலைகளை மறவாமல் மாண்போடு மாந்த, மதச் சபையில் அடியாராகச் சேர்ந்து, தர்க்கம், தத்துவம் முதலிய கிளைக் கலைகளை ஆர்வத்தோடு பயின்று தேர்ச்சி பெற்ருர். இவரது நுண்ணிய அறிவையும், திண்ணிய ஊக்கத்தையும், பண்ணிய திறத்தையும் எண்ணியறிந்த கல்லூரித் தலைவர், இவரைக் 'கலைக்கடல் என்று கழறினரென்ருல், யாம் அடிகளின் பெருமையை அளந்துரைக்க வேண்டுவதில்லையல்லவா?

கிறிஸ்து நாதரின் திருப்பெயர் உலக முழுவதும் ஒலிப்பதற்கு முதற்காரணமானதும் தனிச் சிறப்புடையது மாய்த் திகழ்வது சேசு சபைக் கூட்டமாகும். இக்கூட்டத்தினர் கல்வி மாட்சியும் உலகியல் ஆட்சியும் பக்தி நீட்சியு மிக்க தியாகியராவர். இக்கூட்டத்தின் அக்காலத் தலைவர், அடிகளை இந்தியாவுக்கு அனுப்ப ஆவல் கொண்டார். அவர் ஆணையைத் தலைமேல் தாங்கிய தமிழ்த் தந்தையார், கப்பலேறிக் கடல் கடந்து, போர்ச்சுகீசியருக்குத் தலை நகராய் விளங்கிய கோவா வந்து சேர்ந்தார். சேர்ந்த அடிகள் இந்து மக்களைக் கண்டு வியந்து, தமக்கு முன்போந்த குருக்களின் வழியைப் பின் பற்றித் தொண்டு செய்யலானர். மதத்தைப் பரவச் செய்வதற்கு நாட்டு மொழி அறிவு கட்டாயமென்பதைக் கண்டறிந்த

அடிகள், தென்னாட்டு மொழிகளைக் கற்கத் தொடங்கினார். தென்னாட்டு மொழிகளில் சிறந்ததும், தொன்மையுடையதும், கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு ஆகிய மொழிகளுக்கு அன்னையாய் இருப்பதுமாகிய பெருமை உடையது நம் தூய தமிழ். இது, சிறிது கற்றோருக்கும் பெரிது கற்கவேண்டுமென்னும் விழைவினை உண்டாக்கித் அவர்தமைத் தன்னகப்படுத்தும் மேதகத் தன்மையுடைய மொழியாதலால், அடிகள் செந்தமிழ் மொழியில் சீரிய புலவராய்த் திகழ்ந்தார்.

அடிகள், நாட்டு மதத்தைப்பற்றிய நன்னூல்கள் பலவற்றையுங் கற்றுத் தேர்ந்தார்; நம் நாட்டு மத குருமார்களைப்போலத் தாமும் உருக்கொண்டார்; வீரமாமுனிவர் என்று தம் பெயரையும் மாற்றிக்கொண்டார்; ஊன் உணவை ஒழித்து, காய் கறிகளையே உணவாகக் கொண்டார்; மக்கள் மனத்தைக் கவரும் மாண்பு மிக்க உடைகளை உடுத்தினார்; தூய வெள்ளிய தலைப்பாகையையும், சிவந்த பட்டாலாகிய சீரிய ஆடைகளையும், துருக்கி நாட்டில் செய்து சரிகை பதித்துள்ள மிதியடியையும் அணிந்தார். ஐந்து உலோகங்களால் செய்யப்பட்ட அழகிய மோதிரம் இவர் விரலில் துலங்கிற்று. மதிப்பிட முடியாத மாணிக்கக் கற்கள் பதித்துள்ள கடுக்கன் மாதவர் காதில் தொங்கிற்று.

நம் தவச்சிரேட்டர் பல்லக்கிலே அமர்ந்து உல்லாசமாய் எங்கும் செல்வர். திருவெண்கொற்றக் குடையும் ஏனைய விருதுகளும் முன்னே செல்ல, சிவிகையின் இருபுறங்களிலும் மயில் தோகையால் செய்யப்பட்ட விசிறிகளைக் கொண்டு வேலையாட்கள் வீசிக்கொண்டு வர, அடிகள் சிவிகையில் புலித்தோலின்மீது சிறக்க வீற்றிருந்து, கருணை முகப் பொலிவோடு காணப்படுவர். இங்ஙனம் எங்குச் சென்றாலும் தம் பரிவாரத்துடனேயே செல்லுவார். பல்லக்கிலிருந்து இறங்க வேண்டுமானால், புலித்தோல் தரையில் விரிக்கப்படும். அடிகள் இறங்கி, அதன்

மேல் அமர்ந்திருப்பார். இங்ஙனம் இந்திய நாட்டுக்கேற்ற வேடத்தை மேற்கொண்டு ஆடம்பரத்துடன் வாழ்ந்த ஐயர், சிறந்த அறிவுரைகள் பகர்ந்து, மக்கள் மனத்தை மாற்றினர். ஐயரின் அறிவுரைகளைச் செவி மடுத்த பலர், தாமே கிறிஸ்தவ மதத்திற் சேர்ந்தனர்.

ஆலயங்கள் அமைப்பதும், அவற்றை அலங்கரிப்பதும் அடிகளுக்கு அளவிலா மகிழ்ச்சியைத் தருவனவாகும். இவர் சங்கர நயினர் கோயில் தாலுக்காவைச் சேர்ந்த கல்பட்டி என்னும் கிராமத்தில் ஒரு கோயில் எடுப்பித்தார். அதனல், ஆண்டுள்ளவர்கள் சினந்து, அடிகளுக்குத் துன்பம் விளைத்தார்கள். எனினும், அடிகள் .உள்ளஞ் சோராது, தாமெடுத்துக்கொண்ட தொண்டினைப் புரிவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தார்.

அக்காலத்தில் திருச்சிராப்பள்ளியை அரசாண்ட சந்தா சாகிபு என்னும் மகமதிய மன்னன், அடிகளின் அறிவாற்றலைக் கேள்விப்பட்டு, இவரோடு பேச வேண்டுமென்று விரும்பினன். அடிகள் அவ்வரசனேடு பேசுவதற்காக இந்துஸ்தானி மொழியையும் பெர்ஷிய மொழியையும் மூன்று மாதத்தில் கற்றுக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது. பின்னர் அடிகள் சந்தா சாகிபைக் கண்டு பேசினர். சந்தா சாகிபு அடிகளின் அறிவுத்திறமையை அறிந்து வியந்து, அடிகளுக்கு ஒரு சிவிகையையும், இஸ்மாத்தி சந்நியாசி என்ற சிறப்புப் பெயரையும் அளித்தான்; இன்னும், திருச்சிராப்பள்ளிச் சில்லாவைச் சேர்ந்தனவும், ஆண்டு ஒன்றுக்கு 12,000 ரூபாய் வரும்படியுள்ளனவுமான பூக்குளம், மால்வை, அரசூர், நல்லூர் ஆகிய ஊர்களையும் அடிகளுக்கு உவந்தளித்தான்; தனது அரசாட்சியில் இவரைத் திவானக அமர்த்தினன்.

அதிகாரமிக்க திவான் பதவியிலமர்ந்த ஐயர், அரசியல் காரியங்களைக் கவனிக்கப் பல ஊர்களுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. இக்காலங்களிலெல்லாம் முனிவர், நன்கு சிங்காரிக்கப்பட்ட குதிரையிலேறிச் சென்று வரு

வார். அப்பொழுது விழுப்புண்பட்ட வீரர் வெள்ளித் தடி ஏந்திக் குதிரையின் முன்னும் பின்னும் செல்வர்; மெய் காப்பாளரான முப்பது குதிரை வீரர் உடனே போவர். இவருடைய கூடாரம் முதலிய பொருள்களைச் சுமந்துகொண்டு ஒட்டகங்களும் யானைகளும் செல்லும். இத்தகைய சிறப்புக்களுடையவராயிருந்தாலும், அடிகள் தமது தொண்டினை மறந்தவரல்லர். இவருக்குக் கல்வியி லுள்ள கருத்தும் குறையவில்லை.

கி. பி. 1740ல் நாதர் சிங்கு தலைமையில் மராத்தி யர்கள் படையெடுத்து வந்து, திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டார்கள். அம்முற்றுகையில் மராத்தியர் கள் வெற்றி அடைந்தார்கள். ஆதலால், சந்தா சாகிபு கைதியாகப் பிடிக்கப்பட்டான். நம் முனிவர் பெருமான் வகித்து வந்த திவான் பதவியும் அத்துடன் முடிவடைந் தது. அல்லாமலும், இவர் மராத்தியர்களுக்கு அஞ்சி ஓடி ஒளிக்கவும் நேர்ந்தது.

அடிகள் மணப்பாரை சென்று அங்கேயே தமது கடைசிக் காலத்தைத் தமது தொண்டில் கழித்தார். அடி களின் இடையரு உழைப்பாலும், அவ்வூரின் வெப்ப தட்ப நிலை அடிகளுக்கு ஒத்துக்கொள்ளாததாலும் இவர் 1742ல் மணப்பாரையை அடுத்த ஆவூரில் இறைவன் திரு வடியை அடைந்தார்.

இவர் மணப்பாரையில் மாண்டாரோ, திருநெல்வேலி யைச் சேர்ந்த மணப்பாட்டில் மாண்டாரோ என்பது, உறுதியாகத் தெரியவில்லை. ஆயினும், மணப்பாட்டில் நமது நேர்மை மிக்க முனிவரை நினைவூட்ட யாதோர் அடையாளமும் காணப்படவில்லை. கிறிஸ்துநாதர் உயிர்த் தெழுந்த விழா, 'ஆவூர்த்திருவிழா' என்று வழங்கப்படு கிறது. ஆவூர் என்னும் தொடர் அடிகளின் ஆடையை யும் இந்து குருபோன்ற வேடத்தையும் நினைவூட்ட ஏற் பட்டதென்று சிலர் கருதுகின்றனர். ஆகையால், அடிகள்

மணப்பாரையைச் சேர்ந்த ஆவூரில் காலமானர் என்று கொள்ளுவதே சிறப்புடையதாகும்.

அடிகளின் கீர்த்தி சிறந்ததற்குக் காரணம், இவரது நிகரில்லாப் புலமையும் வழுவிலாத் தவமுமேயாம். பல மொழிகள் கற்றுத் தேர்ச்சியடைவதில் அடிகள் ஒப்புயர் வற்று விளங்கினர். இவர் தம் தாய் மொழியாகிய இத் தாலி தவிர, எபிரேயம், கிரேக்கம், இலத்தீன், போர்ச்சுகீசியம், ஸ்பானியம், பிரெஞ்சு முதலிய மேல் நாட்டு மொழிகளில் திறமை பெற்று விளங்கியதுடன், சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, இந்துஸ்தானி, பேர்ஷியன் முதலிய இந்திய மொழி களிலும் இணையிலாப் புலவராய்த் திகழ்ந்தார்.

அடிகள் தமிழ் மொழியினிடத்து அளவிலா ஆர்வம் கொண்டவர். இவர் இம்மொழியைக் கற்றுக் கரைகண்ட வர் எனக் கழறுவது மிகையன்று. தமிழில் இவரியற்றிய நூல்கள் பல. அவைகளிற் சில, தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், சதுரகராதி, திருக்காவலூர்க் கலம்பம், வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், அடைக்கல மாலை, ஞான உணர்த்தல் என் பனவாம். இவற்றில் தேம்பாவணி என்பது இயேசுநாத ரின் இனிய சரிதையைக் கூறுவதாகும்; தமிழ்ப்பெருங் காப்பிய இலக்கணத்தோடு பொருந்த முப்பது படலமும் மூன்று காண்டமுமுடைய இலக்கிய நூலாகும். இதிலுள்ள செய்யுட்கள் சுவை நயமிக்கனவாயுள்ளன. தொன்னூல் விளக்கம் என்பது, தமிழ் மொழியிலுள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணத்தையும் அழகுபடச் சுருக்கிக் கூறும் இலக்கண நூலாகும். சது ரகராதியே தமிழ் மொழியில் ஏற்பட்ட முதல் அகராதி ஆகும்.

அயல் நாட்டினராகிய ஐயர், தமிழ் மொழிக்குச் செய்த தொண்டினைத் தமிழர்கள் அறிந்து, அவரைப் போற்றக் கடமைப்பட்டவர்களாவார்கள். தமிழ் மொழி உள்ள வரையில் வீரமாமுனிவரின் பெயர் நின்று நிலவு மென்பதில் தடையுண்டோ?

4. சுற்றுப் பிரயாணம்

[திரு. அ. சிதம்பரநாதஞ்செட்டியார் அவர்கள், எம். ஏ.,]

சுற்றுப் பிரயாணம் என்னுஞ் சொற்றொடர் ஒரு நாட்டையோ, உலகத்தையோ சுற்றிச் செய்யப்படும் பிரயாணம் என்று பொருள்படும். மானிடர் யாவரும் இயைந்த அளவு ஊர்சுற்றிப் பார்க்க வேண்டுவது அவசியம். அவ்வாறு அவர் செய்யாரேல், உண்மை அறிவு அவருக்கு நிரம்பியது என்று கூறுவதற்கில்லை. இக்காரணம் பற்றித்தான் மேனாட்டுக்குப் படிக்கப்போகும் நம்மவருட்பலர், உலகத்திலுள்ள பல தேசங்களையும் சுற்றிப் பார்த்து வருகின்றனர். அவர்களைப் போலவே, மேனாட்டார் பலர் நம் நாடு வந்து பார்த்துப் போகின்றனர் என்பது பலருக்குத் தெரிந்திருக்கலாம். உலகமெங்கும் சுற்றிப் பார்க்கும் எண்ணத்துடன் சிற்சில சமயங்களில் சிறு சிறு கூட்டத்தாரும் ஆங்காங்குப் புறப்படுகின்றனர் என்பது சமாசாரப் பத்திரிகை படிக்கும் எவரும் அறிந்ததே.

ஆனால், முற்காலத்திற் செய்யப்பட்ட பிரயாணங்களுக்கும் தற்காலத்தில் செய்யப்படும் பிரயாணங்களுக்கும் வேற்றுமையுண்டு: முற்காலத்திலே இரயில் வண்டிகள் இல்லை; மோட்டார்கள் இல்லை; ஆகாயக் கப்பல்கள் முயற்கொம்பே. ஆதலால், அக்காலத்து மக்கள் பெரும்பாலும் நடந்தும், சிறுபான்மை கட்டை வண்டி, குதிரை இவற்றிலுமாகவே பிரயாணத்தை மேற்கொண்டார்கள். அங்ஙனம் நடந்து செல்லுங்கால், அவர்கள் பற்பல விநோதங்களைக் கண்டு அறிந்து ஆனந்தித்திருக்கக்கூடும்; இயற்கையன்னையின் எழிலைக் கண்டு வியந்து போற்றியிருக்கக்கூடும்; பல திறப்பட்ட மக்கள் வாழும் ஊர் வழியே சென்று, அவர்களுடைய நடை உடை பாவனைகளை அறிந்திருக்கக்கூடும். ஆனால், தற்காலத்திலோ, துரிதமாகச் செல்லும் இரயில் வண்டி

கள், உறுமிக்கொண்டு ஓடும் மோட்டார் வண்டிகள், நிம்மதியாகச் செல்லும் நீராவிக் கப்பல்கள், 'வாயுவேகம் இதுதானோ!' என்று வியந்து சொல்லும்படி பறந்து போகும் ஆகாயக் கப்பல்கள் ஆகிய எல்லாம் ஓர் ஊரிற்கும் மற்றோர் ஊரிற்குமுள்ள தூரத்தை அற்பமாக்கிவிடுகின்றன. இம்மட்டோ! வீட்டில் செய்துகொள்ளக் கூடிய சௌகரியங்களில் பலவற்றை இவ்வாகனங்களில் செய்துகொள்ள முடிவதால், 'ஒருவரையும் எதிர் பார்க்க வேண்டா. ஒருவரோடும் பேச வேண்டா,' என்று நினைப்வர்களும் கூட்டத்திடையேயும் தன்னந்தனியாகச் செல்லக் கூடியவர்களாய் இருக்கிறார்கள்.

சில ஊர்களுக்குச் செல்வோர், மாலையில் வண்டியில் ஏறிப் படுத்தால், காலையில் குறித்தவிடம் சென்று விழிக்கின்றனர். இடையே நிகழ்ந்தது என்ன? என்னென்ன ஊர்களின் வழியே இரயில் சென்றது? ஓர் ஊரிற்கும் மற்றொன்றிற்கும் காணப்பட்ட வித்தியாசமென்ன? ஓர் ஊரிலிருந்து வந்த மக்களுக்கும் மற்றோர் ஊரிலுள்ள மக்களுக்குமுள்ள வேறுபாடுகள் என்ன?' என்ற விஷயங்களைப்பற்றி அறிந்துகொள்ளக் கவலையின்றிச் செல்கின்றனர் பலர். இவ்வாறு புறக்கணித்துச் செல்வது, கால் நடையாகவோ, கட்டை வண்டியிலோ, குதிரை மீதோ, முற்காலத்திற் போலப் பிரயாணஞ் செய்யப்படுமாகில், சாத்தியப்படுமா என்பது சந்தேகமே.

'கிணற்றுத் தவளையாக இராமல் நாநாவித நாட்டு வளப்பங்களையும் மக்கள் அறிய வேண்டுமென்னும் உயரிய எண்ணத்துடன்தானே யாத்திரைகள் சாத்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றன?' என்று நினைக்க இடமுண்டு. யாத்திரை செல்லுங்கால், மனைவியையும் அழைத்துச் சென்று பல நதிகளில் நீராடித் தலங்களைத் தரிசிக்காவிட்டால் புண்ணியமில்லை என்று பல நூல்கள் நுவலுவது பெண் பாலாரும் அத்தகைய அறிவு வாய்க்கப் பெற்றவராக வேண்டும் என்னும் நேரிய கருத்தினை

லன்றே? எனவே, 'சிதம்பரத்தைச் சேவிக்க முக்தி,' என்று பலர் அங்குப் போவதற்கும், 'பள்ளி கொண்ட பரமனைப் பார்க்கலாம்!' எனச் சீரங்கத்திற்குச் சிலர் செல்வதற்கும், 'பட்டினத்தார் மணலில் புதைந்துகொண்ட திருவொற்றியூர் ஏகித் திருத்தியாகேசரைத் தரிசிக்கலாம்,' எனப் பக்தர் பலர் அவ்விடத்தை அடைவதற்கும், வடலூர் ஞானசபை, சேக்கிழார் வாழ்ந்த குன்றத்தூர், கதவு திறக்கப்பட்ட திருமறைக்காடு முதலான இடத்திற்கு ஆன்ம கோடிகள் நண்ணுவதற்கும், கங்கை கலக்கும் மகா மகக் குளத்தில் நீராடக் கருதிக் கும்பகோணம் குறுகுவதற்கும், உள்ளூற ஓர் அருங்கருத்துப் பொருந்தியிருக்கிறது என்றால், அது பிழையன்றே?

சமயப்பற்றுடன் பிரயாணம் மேற்கொள்வோர் சிலரிருக்கக் கல்வி குறித்தோ, தொழில் குறித்தோ, அதனை மேற்கொள்வோர் பலருளர். ஆனால், பிரயாணஞ் செய்யும்பொருட்டுப் பிரயாணம்—அதாவது சிறுவர் அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கும், முதியோர் அநுபவத்தை அடைவதற்குமான பிரயாணம்—செய்கிறவர்களது தொகை நம் நாட்டில் மிகச் சிறிதே என்று சொல்லிவிடலாம். இப்பொழுது பிரயாணத்திற்காகவே பிரயாணஞ் செய்கிறவர்களைவிட நம் நாட்டில் அதிகமான பேர்கள் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டும். எந்த இரயில்வே கம்பெனிக்காவது ஏஜண்டாக இருந்துகொண்டோ, எந்த மோட்டார்க்காரருடைய தூண்டுகோலின்மீதோ, இஃது இவ்வாறு எழுதப்படுகிறது என்று எவரும் எண்ண வேண்டா. நண்பர் தத்தமக்குள்ள அறிவை இன்னும் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்னும் ஒரே கருத்தினால்தான் இது வரையப்படுகிறது. இது நிற்க.

பிரயாணங்களால் ஏற்படும் நன்மைகள் எவை என்பதை நோக்குவோம்: அறியாமையால் தம்மையே பெரியராக மதித்துவருஞ் சிலருக்குப் பிரயாணத்தால் புத்தி வரும். தன்னளவு பெரிய சீமான் தன்னூரிலில்லை என்று அகங்

கரித்துத் திரியுமொருவன், வேற்றூர் சென்று பார்ப்பா னேயானல், 'இவர் செல்வத்திற்கு நம்மது எம்மாத்திரம்?' என்று அவனே சொல்லும்படி சிறந்தோங்கும் சீமானைக் கண்டு, இறுமாப்பு ஒழிவான். தன்னூரில் பட்டம் பெற்ற வன் வேறொருவனில்லையென எண்ணித் தலைகால் தெரியாது திரியும் ஒருவன், பிறிதோர் ஊர் சென்று வருவானேயானல், 'பட்டதாரிகளைக் கூடை கூடையாக வாங்கலாம் போலிருக்கிறதே!' என்று எண்ணித் தன் அகந்தை அகற்றுவான். இப்படியே கைத்திறம் மிக்க தொழிலாளியும், சக்தி மிக்க மந்திரவாதியும், முக்காலம் உரைக்கும் சோதிடனும், தீராத நோயைத் தீர்க்கும் வைத்தியனும், நன்ருக அலங்கரிக்கும் அர்ச்சகனும், சக்கர வட்டமாகப் பேசும் சொல் வல்லானும் உண்மையறிந்து செருக்கு ஒழிவர்.

பிரயாணம் செய்வதால், ஒருவனுக்குண்டான பிறரைப்பற்றிய தப்பெண்ணங்கள் நீங்கும். 'ஆனை தாண்டவபுரத்தார் அத்தனை பேரும் அயோக்கியர்; கும்பகோணத்தார்கள் அவ்வளவு பேர்களும் போக்கிரிகள்; காரைக்காலார் அனைவரும் கயவர்; மதராஸார் அனைவரும் முடிச்சவிழ்ப்போர்,' என்பன போன்ற தப்பு அபிப்பிராயங்கள் நீங்குவதற்கு அவ்வவ்வூரை நேரிற் சென்று காண்பதே தகுந்த வழியாக இராநின்றது. சமாதானமும் அமைதியும் நாட்டில் நிலவுதற்குப் பிரயாணங்கள் பயன்படுகின்றன. நம் நாட்டாரைப்பற்றிப் பிற நாட்டார் கொண்டுள்ள தப்பு அபிப்பிராயங்களை நாம் பிரயாணஞ் செய்யுங்கால் களைந்து வருவோமாயின், அவர்கள் நம்பால் நேசமும் அன்புங்காட்டிப் பழகுவார்கள். ஆதலால், ஊர் திரும்பியதும் அவர்களிடத்து வெறுப்புக் காட்டலாகாது என நம்மனேர்க்குச் சொல்லி, நம் ஊரில் அமைதியையும் சமாதானத்தையும் நிலவச் செய்யலாம்.

பிரயாணத்தால், வருவாய் விருத்தியுண்டாகும். நாம் சுற்றுப் பிரயாணஞ்செய்து வரும் சமயங்களிலே, எவ்

வெவ்வூரில் எந்தெந்தச் சாமான் மலிவாகக் கிடைக்கிற தென்பதை அறிந்துகொண்டால், ஊர் திரும்பியதும் அவ் வச்சாமானை அங்கங்கிருந்து தருவித்து, ஊதியம் பெறலாம். அதே போல எவ்வெவ்வூரில் எந்தெந்தச் சாமான் அருகி இருக்கிறது என்பதை அறிந்துகொண்டால், அங்கங்கு அந்தந்தச் சாமானைச் சேர்ப்பித்தும் ஊதியமடையலாம்.

பிரயாணத்தால், மனிதனுக்குத் தன்னம்பிக்கை பிறக்கும். பல ஊர்களில் சுற்றுங்கால் ஒரு துறையில் இல்லாவிட்டால், இன்னொரு துறையிலிறங்கி, ஒரு தொழி லில்லாவிட்டால், இன்னொரு தொழிலை மேற்கொண்டு, உயிரை உடலுடன் வைத்துக்கொள்ளக் கூடிய சக்தி தனக்கும் உண்டு என்பதில் நம்பிக்கை பிறக்கும்.

பிரயாணத்தால், எவ்வளவு குறுகிய மனமும் விரியும். 'இன்னாரோடு பேசலாகாது; இன்னாரோடு பழகலாகாது; இன்னாரைத் தொடலாகாது; இன்னாருக்குக் கொடுக்க லாகாது,' என்பவை போன்ற குறுகிய எண்ணங்கள் எல் லாம் குறுகி, 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்,' என்றது போன்ற விரிந்த நோக்கம் மக்களுட் பிறந்து வளரும்.

---

5. வெண்ணெய் அண்ணல்

[வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள், பி. ஓ. எல்.,]

பெறலருங்குணங்களில் செய்ந்நன்றி அறிதலும் ஒன்றென ஆன்றோர் கூறியுள்ளனர். செய்ந்நன்றி அறிதலில் தலை சிறந்தவர் கன்னனும் கும்பகர்ணனுமே ஆவரென்பது ஆன்றோர் கருத்தாகும். ஆனால், இராம காதையைத் தமிழிற் பாடியருளிய உம்பரும் போற்றும் கம்பர் பெருமானும் மேற்கூறப் பெற்ற கன்னன் கும்ப கர்ணன் இருவரோடு வைத்துக் கூறத்தக்கவராவர்.

சடையப்ப வள்ளல் என்பவர் வெண்ணெய் நல்லூரில் வாழ்ந்து வந்த தாளாண்மையிற் சிறந்த வேளாண் மர

பினர். அப்பெருந்தகையார் எந்நாட்டு வறிஞராயினும் தம்மை நாடிவரும் அவர்கட்கு ஈதலில் தவறார். அப் பெரியாரே நம் புலவர் பெருமானாகிய கம்பரைச் சிறுபருவ முதற்கொண்டே பேரன்புடன் பாதுகாத்தவர்; கம்ப ரைச் சோழ வேந்தனிடம் அறிமுகப்படுத்தி, அவரது அளப்பரும்புலமையைத் தமிழ் நாட்டில் நிலவச் செய்த வரும் அவரேயாவர். அவ்வள்ளலே கம்பர் இராமயணம் பாடி முடித்ததற்கும் பெருங்காரணராயிருந்தனர் எனின், அவர் கம்பர்பால் வைத்த அன்பின் திறத்தினை யாதென்று அறைவது!

அண்ணல் தமக்குச் செய்த நன்றியை மறவாது உளங் கொண்ட கம்பர், ஒருவராலும் பெறுதற்கரிய பேற்றைத் தாம் செய்யும் பிரதி நன்றியாக அண்ணலுக்களித் துள்ளார். உலகம் உள்ளளவும் கம்பர் பெயரும் அவர் பாடியருளிய இராம காதையும் நிலை நிற்பதேபோல, வள் ளல் அறச் செயலும் அருங்குணமும் இராம காதையில் ஒளிருமாறு செய்துள்ளார். அண்ணல் செய்த உதவியை விடப் பன்னூருயிர மடங்கு பெரிதெனக் கருதுமாறு கம்பர் தம் பிரதி நன்றியை அண்ணலுக்கு எவ்வாறு அளித்துளர் என்பதை ஈண்டுக் காண்போம் :

கம்பராமாயணம் வேள்விப் படலத்தில், கோசிகன் இராமருக்குப் படைக்கலம் அளித்தமை இன்னபடி இருந்ததெனக் கூறுகின்ற கம்பர், 'ஊழி பெயரினும் தாம் சொன்ன சொற்களைச் சோர விடாத பெருமை வேளாளர்க்குரியது; எம் அண்ணல் சடையப்பருக்கும் அஃதே,' என உவமை முகத்தால் விளக்குகின்றார் :

'விண்ணவர் போய பின்றை விரிந்தபூ மழையி னாலே
தண்ணெனும் கானம் நீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே அன்ன படைக்கலம் அருளி னானே.'

—வேள்விப் படலம்

'மண்ணுலகத்தாரது வறுமையென்னும் நோய்க்கு மருந்து போன்ற வெண்ணெய் அண்ணலது சொல்லுக்கு நிகரான அத்திரங்களைக் கோசிகன் சீராமனுக்கு அளித்தான்,' என்று கூறிக் கம்பர் மகிழ்கின்றார். 'சடையப்பர் வழங்கும் சொற்கள் வாய்மையுடையன; அவை சிறிதும் கெடாமல் கருதிய பயனைத் தருவன; அவை போன்றே கோசிகனளித்த படைக்கலங்கள் எய்குறி தவருது வெற்றியைத் தருவன; இத்தகைய வள்ளல் சொற்களுக்கு நிகரான அத்திரங்களை முனிவன் கோசலக் குரிசிலுக்கு நல்கினன்,' என்னும் கூற்றில் கம்பர், 'சடையப்பரது சொல் தவருதது,' என்பதை வலியுறுத்தல் காண்க.

அடுத்தபடியாக, 'அண்ணல், வறுமைப் பிணியைப் போக்கும் திறத்தால் உண்டான புகழ் உலகெங்கணும் பரவியதாம். அங்ஙனமே வெண்ணிலா உலகெலாம் பரவியது,' எனக் கம்பர், வெண்ணிலா தன் விரி கதிர்களை விரித்த மாண்பினுக்கு வள்ளல் புகழை உவமையாகக் கூறுதல் எத்துணைப் பொருத்தமுடைத்து! ஏற்ற இடங்களில் வள்ளல் பெருமையை அமைத்துப் பாடும் பேராற்றல் பெற்றவர் கம்பரல்லரோ? தம்மைக் காத்த வேந்தரைப் புகழேந்தியாரும் வில்லிபுத்தூரரும் தாம் பாடிய நூல்களிற் பாடியுள்ளாரேனும், உயர்வு நவிற்சியணி தோன்ற வைத்தே பாடியுள்ளனர். கம்பரோ, அங்ஙனமன்றி, வள்ளலது ஏற்றத்தை உள்ளவாறே உரிய இடங்களிற் பாடியுள்ளார். வள்ளலைச் சிறப்பிக்க இயலாத ஒன்றைப் புதிதாய்ப் புகுத்தக் கம்பர் விழைந்தாரில்லை; விழைய இடமுமில்லை. பூணுக்குப் பூண் ஏற்றுக்கு?

'வண்ண மாலைக் கைபரப்பி
உலகை வளைந்த இருளெல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்
துதயத் தெழுந்த நிலாக்கற்றை
விண்ணு மண்ணுந் திசையனைத்தும்
விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்

பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
புகழ்போ லெங்கும் பரந்துளதால்.'

—உண்டாட்டுப்படலம்

'விண்ணையும் மண்ணையும் எல்லாத் திசைகளையும் தன்னுள் அடக்கிக்கொண்ட விரிந்த நன்னீரையுடைய பண்ணைகள் வாய்ந்த வெண்ணெய் நல்லூரில் வாழும் சடையன்றன் புகழ்போலத் தண்மதியின் கிரணங்கள் எங்கும் பரவின,' எனக் கம்பர் கூறும் உவமையும் பொருளும் எண்ணியெண்ணிக் களிக்கத்தக்கவை அல்லவோ? இதனால், வள்ளலது புகழின் விரிவு அங்கைக் கனியெனத் தெள்ளிதின் விளங்குகின்றமை காண்க. 'நிலாத் தோன்றுவதற்கு முன்னர் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. அது போல, வள்ளலுக்கு முன்னர் வறுமை நோய் உலகெங்கணும் பரவி இருந்தது; நிலாத் தோன்றிய பின்னர் இருள் இருந்தவிடம் தெரியாவாறு மறைந்தொழிந்தது. அது போல, வள்ளல் தோன்றிய பின் வறுமைப்பிணி ஒழிந்தது. நிலா வெளிச்சம் உலகெலாம் பரவி மக்களை இன்புறுத்துவது போல வள்ளலது வள்ளற்றன்மை உலகெங்கும் பரவி மக்களை இன்புறச் செய்கின்றது,' என இத்துணை ஆழ்ந்த கருத்துக்களைக் கம்பர் ஒரு சிறு கவியில் செறிய வைத்துள்ள திறத்தினைப் புகழ்வோமோ! அன்றி, அவர் அண்ணலை அழகுறப் புகழ்தலைப் புகழ்வோமோ! யாதே யாம் செயவல்லோம்!

வானர வீரர்கள் கடலில் அணையைக் கட்டுகையில் உயர் வெற்புகளைத் தூக்கி வானரத் தச்சனாகிய நளன் என்பானிடம் வீச, அலைப்புண்டு வந்த அப்பருப்பதங்களை நளன், 'அஞ்சேல்!' எனச் சொல்லி, அவற்றைத் தாங்கி முறையாகவும் அமைதியாகவும் அடுக்கினன். அங்ஙனம் நளன் செய்தமை, 'தஞ்சமென் றடைந்தோரைத் தாங்கித் தக்கவாறு பாதுகாக்கும் அண்ணலது காருணியச் செயலை ஒத்திருந்தது,' எனக் கம்பர் கூறுவது சால அழகியதன்றோ?

‘மஞ்சினில் திகழ்தரு மலையை மாக்குரங்(கு)
எஞ்சுறக் கடிதெடுத் தெறிய வே,நளன்
விஞ்சையில் தாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்கும் தன்மைபோல்.’

—சேதுபந்தனப்படலம்

‘மேகநாதன் வானர சேனையை நாக பாசத்தாற் பிணித்துவிட்டனன். அந்நாக பாசம் கருடனைக் கண்டதும் இற்று ஒழிந்தது. அஃது, வடமொழி வறிஞரையும், தென் மொழி வறிஞரையும் பிடித்திருந்த வறுமைப்பிணி வெண்ணெய் வாழ் அண்ணலைக் கண்டதும் இற்றொழிந்ததை ஒத்திருந்தது,’ என்று கம்பர் கூறும் உவமையையும் பொருளையும் எண்ணிப் பாருங்கள்! இதனால், வள்ளலின் வள்ளற்றன்மை குன்றின் மீதிட்ட விளக்குப் போலாம்! கம்பர் வீணாகச் சடையப்பரை ஏன் இக்காதையில் இழுக்கின்றார் என்று நாம் எண்ணிச் சலிப்படையாவாறு உவமைவாயிலாகச் சடையரின் அரிய செயலையும் குணத்தையும் கூறித் தமது செய்ந்நன்றி அறிதலையும் விளக்குவது கம்பர் மாட்டமைந்த தனிப்பேராற்றலே அன்றோ!

‘வாசங்க லந்த மறைநாள நூலின்
வகையென்ப தென்னை? மழையென்(று)
ஆசங்கை கொண்ட கொடைமீளி அண்ணல்
சரராமன் வெண்ணெய் அணுகும்
தேசங்க லந்த மறைவாணர் செஞ்சொல்
அறிவாளர் என்றிம் முதலோர்
பாசங்க லந்த பசிபோ லகன்ற
பதகன் துரந்த உரகம்.’ —நாகபாசப் படலம்

இக்கவியால், அண்ணலது ஈத்துவக்கும் செவ்வியும், வடமொழி தென்மொழிப் புலவர் என்ற வேறுபாடின்றி வழங்கும் ஈகைக் குணமும், தாளாண்மையிற் சிறந்த வேளாண் மக்களின் மாண்பும் இனிது விளங்கும்.

இறுதியாகக் கம்பர் தம்மை வளர்த்து உயர் நிலைக்குக் கொணர்ந்த வள்ளலாரை உலகறிய உயர்ந்த நிலை

யில்—எவர்க்கும் எட்டாத உயர் நிலையில்—அழகுறவைத்துப் பெருமைப்படுத்தியுள்ளார். 'இராமனுக்குக் கோசலத்தின் மௌலி சூட்டிய மாண்புறு விழாவில் இராமனைத் தாங்கும் அரியணையை அநுமன் தாங்கினன்; அங்கதன் உடைவாளேந்தி நின்றான்; பரதன் கொற்றக்குடையைக் கவித்து நின்றான்; இலக்குவனும் சத்துருக்கனனும் கவரி வீசி நின்றனர்; வாசனை கமழும் கூந்தலையுடைய சானகி உவகையோடு அருகிருந்தனள். இந்நிலையில் வெண்ணெய் அண்ணலின் மரபில் வந்த வேளாண்குடிப் பெருமக்கள் கிரீடத்தை எடுத்துத் தம் அனுமதியோடு தர, அதனை வசிட்டன் வாங்கிச் சீராமனுக்குச் சூட்டினன்,' என்று கம்பர் அழகினும் அழகுபடக் கூறியுள்ளார். இவர் கூற்றில் விழுமிய வேளாளர் தத்துவம் என்னும் தரு, சீருடன் விளக்கக் காணலாம்.

'அரியணை அநுமன் தாங்க, அங்கதன் உடைவா ளேந்த,
பரதன்வெண் குடைக விக்க, இருவரும் கவரி வீச,
விரைசெறி குழலி யோங்க, வெண்ணெயூர்ச் சடையன் தங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி.'

—திருமுடி சூட்டுப்படலம்

இங்ஙனம் ஈடும் எடுப்பும் இல்லாத ஒரு வகையில் தம் வள்ளலைக் கம்பர் புகழ்வதைக் காண, அவர் வெண்ணெய் அண்ணலிடம் கொண்டிருந்த பெருமதிப்பு இற்றெண விளங்குகிறதன்றோ! 'இனி நீர் சீராமனுக்கு முடி சூட்டலாம்,' என்று வசிட்டனுக்கு அனுமதி கொடுத்தற்கேற்ற பெருமை பெற்றவர் சடையப்ப அண்ணலின் முன்னோர் என்று கூறுமுகத்தான், 'வேளாளரே அரசனுக்கு உயிர் போன்றவர்,' என்னும் உண்மையைக் கம்பர் விளக்குகின்றார். இக்கருத்தைக்கொண்டே ஔவையாரும், 'குடி உயரக் கோன் உயரும்,' என மொழிந்தார். மேழிபிடிக்குங் கையே ஆழி வேந்தரை யாக்குங்கை என்பது அரசியலின் அடிப்படையான தத்துவம் அன்றோ?

6. கிராமக் கைத்தொழில்கள்

[திரு. ஜே. எஸ். பொன்னையா அவர்கள், எம். ஏ.,]

சென்னை மாநகர வீதிகளில் நீங்கள் சென்றால் நம் முன்னோர் பார்த்திராத அநேக அரும்பெருங் காட்சிகளைக் காணலாம். வீதிகளில் இரு பக்கங்களிலும் பார்ப்போர் கண்களைக் கவரத்தக்க விதமாய் அலங்கரிக்கப்பட்டுப் பல விதமான விலையுயர்ந்த சாமான்கள் விற்கப்படும் பல பல கடைகள் விளங்கும். ஒரு பக்கத்தில் விரைந்து செல்லும் சிறிதும் பெரிதுமான மோட்டார் வண்டிகளையும், இன்னுமொரு பக்கத்தில் இருப்புப் பாதைகளின் மேல் பெருங்கூச்சலிட்டு விரைந்து செல்லும் புகை வண்டிகளையும் மின்சார வண்டிகளையும் கண்டு மகிழலாம். இவை மட்டுமா! ஆகாயத்திற் பறவைகள் பறந்து திரிந் தாற்போல மனிதர் ஏறிச் செல்லும் ஆகாய விமானங் களும், ஆயிரக்கணக்கான மைலுக்கப்பாலுள்ள நாடு களில் நடக்கும் வர்த்தமானங்களையெல்லாம் சில மணி நேரங்களில் தெரிந்துகொள்ளுவதற்காக அமைக்கப் பட்டிருக்கும் ஆகாய வசனி (Wireless) ஸ்தாபனங்களும், நீராவியின் ஆற்றலால் பெருங்கடலையும் கடந்து செல்லும் கப்பல்களும், 'அம்மம்ம! இவற்றை இயற்றியவர் மனிதரோ, பூதமோ!' என அதிசயிக்கக்கூடிய இவை போன்ற இன்னும் பல காட்சிகளும் அங்கே உண்டு. மேலும், மிகப் பெரிய நெசவுத்தொழிற் சாலைகளையும் வேறு பல தொழிற்சாலைகளையும் அங்கே காணலாம்.

இவ்விநோதங்களையெல்லாம் சென்னையின்கண் மட்டு மென்றி, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நக ரங்களிலும், மதுரை, அலகபாத்து, பெஷாவர் முதலான சிறிய நகரங்களிலும் காணலாம். ஆயினும், இத்தகைய நகரங்கள் நமது தேசத்தில் மிகச்சிலவே. 1931-ஆம் வருட ஜன சங்கியைக் கணக்கின்படி இந்தியாவிலுள்ள நகரங்

களின் மொத்த எண் 2575; இந்நகரங்களில் வசிக்கும் மக்கள் தொகை சுமார் 3 கோடியே 89 லக்ஷம். (11%)

எனவே, மேல் நாடுகளான இங்கிலாந்து ஜெர்மனி முதலான தேசங்களின் நகரங்களுடனும் நகர மாந்தர் தொகைகளுடனும் ஒப்பிட்டு நோக்குமிடத்து இந்தியாவி லுள்ள நகரங்களின் தொகையும் நகர வாசிகள் தொகை யும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள ஏற்றத்தாழ்வுடையன வாகும்.

ஆனல், நமது இந்தியா தேசத்தில் தேனடையிலுள்ள சிற்றறைகள்போலச் சுமார் ஏழு லக்ஷம் கிராமங்கள் இருக் கின்றன! அவற்றில் வசிப்போர் சுமார் 32 கோடி மாந் தர் ஆவர்; இந்திய மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கிராம வாசிகள் ஆவார்கள். இந்தியாவிலுள்ள கிராம வாசிகளின் தொகை உலக முழுதுமுள்ள மக்கட்டொகை யில் ஐந்திலொரு பங்காகும்! கிராமங்களே இந்தியாவின் உயிர் நிலை எனவும், கிராம வாசிகளே இந்திய மக்கள் எனவும் கூறுதல் மிகையாகாது. இக்கிராமங்களிற் காணக் கிடப்பன மின்சார வண்டிகளும் ஆகாய விமானங்களும் தொழிற்சாலைகளும் அல்ல; வயல்களும், தோட்டங் களும், ஆடுமாடுகளுமேயாம்.

இன்று நமது கிராம வாழ்க்கை சிதைந்து, வேளாண்மை தாழ்வுற்று, மக்களின் பொருளாதார நிலை எவ்விதத்திலும் இரங்கத்தக்கதாயிருந்து வருகின்றது. நமது கிராமப் பொருளாதாரத்துறையிலுள்ள குறைகளை நீக்கக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். 'இத்தகைய கைத்தொழில்கள் யாவை? அவற்றை எங் ஙனம் வளர்ப்பது?' என்பன பற்றி இக்கட்டுரையில் காண்போம்:

பழைய நகரக் கைத்தொழில்கள்: பண்டைக் காலத் திற் பெருஞ்சிறப்பெய்தியிருந்து இப்பொழுது அழிந்து கிடக்கும் நமது கைத்தொழில்களிற் பெரும்பாலன நகரக் கைத்தொழில்களேயாம். அவற்றுள் பஞ்சு,

பட்டு முதலியவைகளைக் கையால் நூல் நூற்று ஆடைகளை நெய்வதும், கல், மரம், வெண்கலம், வெள்ளி, பொன் முதலியவற்றால் வேலைப்பாடமைந்த பணிகளைச் செய்வதும் ஆகிய இவைகள் தலை சிறந்து நின்றன. இக்கைத் தொழில்கள் பெரும்பாலும் முக்கிய தலை நகரங்களிலும் பெருங்கோவில்கள் உள்ள இடங்களிலுமே நடைபெறலாயின. இத்தொழில்களில் ஈடுபட்டிருந்தவர்களும் பெரும்பாலும் நகர வாசிகளே ஆவார்கள்.

பண்டைக் கிராமக் கைத்தொழில்கள்: ஆயினும், கிராமங்களிலும் கையால் நூல் நூற்றல், துப்பட்டி கம்பளி முதலியன நெய்தல், விவசாயிக்குரிய சிறிய கருவிகளைச் செய்தல், மனைக்கு வேண்டும் சட்டி பானை முதலிய பாண்டங்களைச் செய்தல், சர்க்கரை எண்ணெய் போன்ற உணவுப் பொருள்களை ஆக்கல் ஆகிய பல சிறு கைத்தொழில்களும் நடைபெற்று வந்தன. தங்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களைச் செய்வதற்கே பண்டைக் கிராம மக்கள் இக்கைத்தொழில்களை மேற்கொண்டிருந்தார்களே அன்றி, இவற்றால் தங்கள் வருவாயைப் பெருக்கிப் பெருத்த ஊதியம் பெற்றார்கள் இல்லை என்ற உண்மையை நாம் இவ்விடத்து நன்கு உணர்தல் வேண்டும்.

கையால் நூல் நூற்றலும் நெய்தலும்: நம் பண்டைக் கைத்தொழில்கள் எல்லாவற்றுள்ளும் தலை சிறந்து விளங்கியவை கையால் நூற்றலும் நெய்தலுமேயாம். கைப்பணியாய்ச் செய்யப்பட்ட பஞ்சியாடைகளும் பட்டாடைகளும் மேல் நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதியாயின. ஆனால், மேனாட்டார் இப்பொழுது இயந்திரக் கருவிகளினால் செய்யப்பட்ட துணிகளை நமது தேசத்திற்குள் இறக்குமதி செய்து, அவற்றை மிகக் குறைந்த விலைக்கு விற்பதனால், இத்தொழில் சிறிது சிறிதாக அழிவுறுகிறது. இக்கைத் தொழிலாளர் பலரும் பிழைப்பற்று நிலத்தைச் சார்ந்து வயிறு வளர்க்கும் பயிர்த் தொழிலாளராக மாறுகின்றனர்.

எனினும், கைந்நெசவுத் தொழிலின் ஒரு பாகம் இன்னும் சிற்சில இடங்களில் சில பிரிவினரால் நடத்தப்பட்டு வருகிறது. நமது தேசத்திற் செலவழியும் மொத்தத் துணியில் கைந் நெசவுத் துணி மூன்றிலொரு பாகமாக விளங்குவதே இத்தொழிலின் இற்றைச் சிறப்பையும் புலப்படுத்தும்; எஞ்சிய இரண்டு பாகங்களில் ஒரு பாகம் நமது தேசத்தில் நிறுவப்பட்டுள்ள நெசவாலைகளிலும், மற்றொரு பாகம் பிற நாட்டாருடைய நெசவாலைகளிலும் உற்பத்தியாக்கப்படுவனவாம். இக்கைத்தொழில் இன்னும் நீடித்து வருவதற்குக் காரணம் பிறநாட்டுத் துணிக்கு இறக்குமதி வரி விதித்திருப்பதும், நமது தேசத்திலுள்ள ஆலைத் தொழில் திறமையுடன் நடைபெறாமையும், நமது தேச மக்களின் உடைப் பழக்கம் பெரும்பாலும் மாறாதிருப்பதும் ஆகும். இம்மூன்று காரணங்களும் ஒத்துதவி புரியும் வரை கைந் நெசவுத் தொழிலுக்குப் பழுதில்லை.

கைந் நெசவுக்குப் பின் வைத்தெண்ணப்படும் வேறொரு முக்கிய கிராமக் கைத்தொழில் கையால் நூற்றலாம். ஒழிந்த நேரங்களில் கிராம விவசாயிகள் நூல் நூற்றுச் சிறிது பொருள் பெறலாம். அகில பாரத சர்க்கா சங்கத்தின் ஆதரவின்கீழ் இப்பொழுது 5000 கிராமங்களில் நூற்போர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், கடந்த இரண்டாண்டுகளாக இந்நூல் உற்பத்தி குறைவுப்பட்டு வருகிறது. இத்தொழில் ஒன்றினால் மட்டும் நமது கிராமப் பொருள் நிலை உயர்ந்துவிடும் என எண்ணுவது கூடாது.

பழைய கிராமக் கைத்தொழில்களை உயிர்ப்பித்தல்: அங்ஙனமாகவே, நமது பண்டைக் கிராமக் கைத்தொழில்களை உயிர்ப்பித்து, நம் கிராமங்களிலுள்ள குறைகளைப் போக்கிவிடலாம் என்பதும் இயலாத வீண் ஆசையேயாம். நெற்குற்றல், வெல்லம் செய்தல், செக்காட்டல், கயிறு திரித்தல் ஆகிய இத்தகைய பழங் கைத்தொழில்கள் தனி நிலைக் கிராம வாழ்க்கைக்கே (Independent Village Economy) ஏற்

றவை. இயந்திரங்களின் போட்டி மிகுந்து வரும் இக் காலத்தில் இத்தகைய கைத்தொழில்களை உயிர்ப்பித்தாலும் இவற்றை இலாபத்துடன் நடத்த முடியாது. மேலும், இவற்ருல் நிலத்தைச் சார்ந்து பிழைப்போரின் தொகையும் குறைந்துவிடாது. ஆயினும், சிற்சில கிராமங்களில் சுண்ணும்பு செய்தல், விளையாட்டுக் கருவி இயற்றல் போன்று சிறப்பாக உள்ள கைத்தொழில்களை விருத்தி செய்தால் அவை அவ்வக்கிராம வாசிகளுக்குச் சிறிதளவில் பயனளிக்கும். இத்தகைய சேவையை ஆற்றப் பல சங்கங்களும் பெருமக்கள் பொருளுதவியும் இருத்தல் நலம்.

புதிய கிராமக் கைத்தொழில்கள்: பண்டைக் கிராமக் கைத்தொழில்களுக்குப் புத்துயிரளித்துப் போற்றுவதுடன், புதிய பொருளாதார மாறுதல்களினுல் எழுந்துள்ள புதிய கைத்தொழில்களையும் நாம் சிறப்பாக ஆதரிக்க வேண்டும். இப்பொழுது நமது தேசத்தின் பல பாகங்களிலும் நிறுவப்பட்டுள்ள அரிசியாலை (Rice mill), பஞ்சியாலை (Cotton ginning factory), சருக்கரையாலை (Sugar mill), எலும்புத்தூள் தொழிற்சாலை (Bone crushing factory), நெருப்புக்குச்சி, சோப்பு முதலியன செய்வதற்கு ஏற்பட்டுள்ள தொழிற்சாலைகள் ஆகிய பலவற்ருற் கிராம வாசிகளிற் சிலர் சில மாதங்களுக்கேனும் வேலை கிடைக்கப்பெற்று வயிறு வளர்த்து வருகின்றனர்.

மேலும், காகிதம், பென்சில், கண்ணுடிப்பொருள்கள், விளையாட்டுக் கருவிகள் முதலியன உற்பத்தியாக்கத் தக்க சிறிய இயந்திரத் தொழிற்சாலைகள் பலவற்றையும் நாம் அமைக்க வேண்டும். ஜெர்மனித் தேசத்தில் இத்தகைய சிறிய கைத்தொழிற்சாலைகளின் மூலமே அத்தேச மக்களின் ஐந்தில் இரண்டு பகுதியினருக்கு வேலை கிடைத்திருக்கிறதென அறிகிறேம். இத்தகைய சிறிய கைத்தொழிற்சாலைகள் இத்தேசத்தில் நிறுவப்படவும் வளர்ச்சியுறவும் வேண்டுமாயின், ஜெர்மனியிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இப்பொழுது இறக்குமதியாக்கப்படும்

இச்சிறு கைத்தொழிற்பொருள்களின்மேல் உயர்ந்த காப்பு வரிகள் (Protective duties) விதிக்கப்பட வேண்டும். மேலும், நமது தானியங்கள், பழங்கள், கிழங்குகள் முதலியவற்றிலிருந்தும், நெடுநாள் வைத்துண்ணக் கூடிய உணவுப் பொருள்களைத் தற்கால முறைப்படி தயாரிக்கத் தக்க சிறிய தொழிற்சாலைகளை அமைக்கலாம்.

பெரிய தொழிற்சாலைகள்: அன்றியும், பெரிய இயந்திரத் தொழிற்சாலைகளும் நமது தேசத்திற் பெருகவேண்டும். இப்பொழுது சென்னை, பம்பாய், கல்கத்தா, கான்பூர், நாகபுரி ஆகிய மிகச் சில தலைநகரங்களில் மட்டுமே நூலாலைகளும், நெசவாலைகளும், சருக்கரையாலைகளும் நிறுவப்பட்டுள்ளன. இவற்றால் சுமார் 20 லக்ஷம் மக்களுக்கு வேலை கிடைக்கிறது. இவர்களனைவரும் கிராமவாசிகளே என்ற உண்மையையும் நாம் நன்குணரவேண்டும். ஆலைகளால் நம் கிராமங்களுக்குக் கேடுகளே விளைகின்றன எனக் கூறுவது இழுக்கு. நமது தேச மக்களின் வருவாயும் வாழ்க்கை நிலையும் உயர்ந்து, காகிதம் துணி போன்ற இப்பொருள்கள் மிகுதியான அளவில் வாங்கப்படுமேல், இத்தகைய தொழிற்சாலைகள் இப்பொழுதுள்ளதைவிடப் பன்மடங்காகப் பெருக வழி ஏற்படும்.

---

7. நட்பு

[வித்துவான் R. நரசிம்மலு நாயுடு அவர்கள்]

நட்பின் இன்றியமையாமை: உலகில் ஒருவரோடொருவர் நட்புக்கொள்ள நாடுவது மனித இயற்கை. சிங்கம், புலி முதலிய ஒரு சார் வன விலங்குகளே தனித்துறைதலை விரும்பும். ஏனைய விலங்கினம் பலவும் தம்முட் கலந்துறைவதிலேயே நாட்டங்கொண்டு நிற்கின்றன. தவத்தின் முயல்பவரே தனித்துறைவர். ஏனையோர்

பலரும், தம்மிடைப் பலகாற் கண்டும், சொல்லாடியும், மருவியும் கூட்டுறவுடன் வாழ்வதிலேயே பெரிதும் விருப்புடையராயிருக்கக் காண்கின்றோம்.

உலகில் இன்பமும் துன்பமும் கலந்தே நிகழ்கின்றன. இவ்வின்ப துன்ப நுகர்விற்கு உட்பட்ட மனிதன், இவற்றால் நிகழும் விருப்பு வெறுப்புகளைப் பிறரிடம் கூறிக் கொள்வதற்கு முற்படல் இயல்பு. ஒருவர்க்குளதாகும் துன்பமானது மனத்தில் நெடுநாள் அடைபட்டுக் கிடப்பதும் ஒரு பிணியாம். 'மனக் கவலை பலக் குறைவு,' என்பது முதுமொழி. உலகத்து நோய்கள் பலவற்றிற்கும் மருந்துண்டு; மன நோய்க்கு மருந்தில்லை. மூடியிட்டு வேவாநின்றதோர் மட்கலத்தின் மூடியைத் திறந்தவுடன் அதனுள் அடர்ந்துசெறிந்துநின்ற வெப்பம் நீங்குவதை ஒப்ப, ஒருவன் மனத்தகத்து அடைபட்டுக் கிடக்கும் துன்பத்தை வெளிப்படுப்பதே மன நோய்க்கு மருந்தாகும். ஆயினும், அதனை வெளியிடுதற்கு ஒரு போக்குவீடு வேண்டும்.

இங்ஙனம் போக்கு வீடாதற்குரியவன், நண்பனது இன்ப துன்பங்களைத் தனவாகக் கொள்ளும் உணர்ச்சி ஒத்த நண்பனேயாவன். உள்ளத்திலுள்ளதை உண்மை நண்பனிடம் உரைத்துக்கொள்வதால் தனது துன்பத்தின் சுமை சற்றுக் குறையும். அன்றியும், நண்பனானவன் இனிய மொழிகள் பலவும் கூறி ஆற்றுவித்தலானும், அத் துன்பம் வந்தவாற்றையுணர்ந்து அதனை நீக்கச் செய்யும் உபாயங்களானும், அஃது அறவே ஒழிதலுங் கூடும். இங்ஙனம் துன்பத்தைக் கூறிக்கொள்ளுமிடத்து அது பப்பாதியாகப் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. இன்பம் வந்த காலத்தும் அதனைக் கூறுங்கால், அவ்வின்பம் ஒன்றே இரு மடங்காகிப் பேருவகை பயந்து நிற்கின்றது. இன்னும் இதனைச் சுருக்கி உரைக்குமிடத்து, உண்மை நண்பனே தாயப் பொருட்கு வழக்கிடாமல், இன்பம் உளதாகவும் அதனை விடுத்துத் தானுகவே துன்பத்தைப் பங்கிட்டுக்கொள்ளும் பங்காளி; உள்ளக் கவலையை ஏற்றுக்

கொள்ளும் சுமை தாங்கி. உண்மை நண்பனே உயிர்க்கு அமிழ்தம். இங்ஙனம் ஒருவரோடொருவர் நட்புக்கொள்வ தால் விளையும் நன்மைகள் பலவாயிருத்தலின், இந்நட்பு இன்றியமையாததொன்ருகும்.

நட்பின் வகை: இருவர் மனம் ஒன்றுபட்டுக் கலந்து நடப்பதே நட்பெனப்படும். அது புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சியொத்தல் என மூவகைப்படும். இவற்றுள், முன்னைய இரண்டும் இயற்கை நட்பெனவும், இறுதியது செயற்கை நட்பெனவும் கூறுவர் பெரியோர். இயற்கை நட்பாவது, தாம் வேண்டுமென ஆராய்ந்து தேடிக் கொள்ளாமல், இயல்பாகவே நிகழ்வது. செயற்கை நட்பா வது, இன்னவருடன் நட்புக் கொள்ள வேண்டுமெனக் கருதிப் பல்லாற்ருனும் ஆராய்ந்து தெளிந்த பின்னர் நிகழ்வது.

இவற்றுள், புணர்ச்சியாவது, பிறப்பின் முறைமை யாற் சுற்றத்தாராயினர் மாட்டு இயல்பாகவே நிகழ் வதோர் மனப்பற்று. இவ்வகை நட்பு, அறிவுடையார் அறிவிலார் என்னும் தகுதிப்பாடு வேண்டாது, மாந்தர் யாவரிடத்திலும், விலங்கு பறவை முதலிய அஃறிணையுயிர் களிடத்திலும் பொதுவாக நிகழும் இயல்புடையது.

பழகுதலாவது, ஒரு தேயத்தினராயிருத்தல், ஓர் ஊரினராயிருத்தல் என்னும் இவை காரணமாக, தாம் அடுத்தடுத்துப் பல்காற் பழகுவதால் ஒருவர்மீதொரு வர்க்குளதாகும் மனப்பற்று. இது, வேற்றுச் சாதி யாரிடத்தும் வேற்று நாட்டவரிடத்தும் இயல்பாக நிகழும் பழக்க மிகுதியால் வருவதொன்ருதலின், முன் கூறிய புணர்ச்சியின் வேருக வைத்தெண்ணப்படும். புணர்ச்சி, பழகுதல் ஆகிய இவ்விரு வகை நட்பும் நுணுகிய அறி வுடையாரிடத்தேயன்றி, ஏனையவரிடத்தும்பொதுவாக நிக ழக் காண்டலின், இவை இயற்கை நட்பெனப்படும்.

உணர்ச்சியொத்தலாவது, தாம் அவர் என்னும் வேற்றுமை உணர்ச்சியின்றி, இருவர் மனமும் ஒன்று

பட்டுக் கலப்பெய்துவதால் நிகழ்வது. இஃது ஒருவன் தனது அறிவின் துணைகொண்டு பல்வகை உபாயங்களா னும் நன்கு ஆராய்ந்து தெளிந்த பின்னர், இருவரும் உள்ளும் புறமும் ஒத்த இயல்பினராய் நிலைபெற்று விளங்கச் செய்யும் பேராற்றலுடையது. ஒருவன், தானே ஆராய்ந்து தேடிக்கொள்வதால், இது செயற்கை நட் பெனப்படும். இங்ஙனம் மூவகைப்பட்ட நட்பினுள்ளும், ஒருவர்க்கொருவர் உணர்ச்சியொத்து நிகழும் நட்பே சிறப்புடையது.

நட்பாராய்தல்: நம்முடன் அடுத்துப் பழகுவார் அனைவருமே நண்பராகிவிடார். பற்பல பேர்களுடன் பழகி ஆராயப் புகுவோமாயினும், உண்மை நண்பர் ஒரு வர் கிடைப்பதும் அரிதாகிவிடும். 'ஊரில் ஒருவனே தோழன்,' என்பது நம் நாட்டு முதுமொழி. 'நாடாது நட்டலிற் கேடில்லை,' ஆதலின், ஒருவரை நண்பராகக் கொள்ளுமுன், அவரது குடிப்பிறப்பு, குணம், கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றைச் செவ்விதின் ஆராய்ந்து தெளிந்த பின்னரே நட்புக்கொள்ள வேண்டும். அன்றி யும், அவருக்கு நட்பினராய் உள்ளவரையும் யாவ ரெனத் தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாததொன் றாம். 'நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு இனத்து இயல்பதாகும் அறிவு,' என்பவாகலின், ஒருவ னிடத்துள்ள நன்மை தீமைகளை அறிதற்கு அவன் நண் பனே உரையாணியாவன். அவரவர் தேடிக்கொள்ளும் நட்பு, அவரவர் இயற்கைக்கேற்றதாகவே இருக்கும். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்; மூர்க்கரை மூர்க்கரே முகப்பர்.' 'நீ உனது நண்பனைத் தெரிவித்தால், நின்னை இத்தகையனெனக் கூறுவேன்,' என்பது ஆங்கிலத்தில் ஒரு பழமொழி. எனவே, இத்தகைய ஆராய்ச்சிகளில் நன்மை காணப்பட்டால் மட்டும், ஒருவர் நட்புக்கோடற் குரியர் என்பது தெளியப்படும்.

இனி, இவ்வாறு நட்புக்கொள்ளத் தொடங்கிய பின்னரும், 'இவர் நம்மிடம் பழக முற்படுதற்கு ஏதுக்களாக நிற்பன யாவை? தன்னலமே கருதி நட்புக்கொள்ளவருகின்றாரா? அல்லது நமது மறைகளை அறிய அவாவுகின்றாரா? அல்லது உண்மையான நட்புரிமை ஒன்றினையே கருதி அன்புடன் வருகின்றாரா?' என்பன நன்கு சிந்தித்து ஆராய்தற்குரியவையாகும்.

இங்ஙனம் ஆராயுங்கால், தன்னலம் ஒன்றுமே கருதியவராகத் தெரியவரின், அன்றே விட்டொழிக்கற்பாலர். அல்லது நம்முடன் ஒற்றித்து நின்று சில அறிதற்பொருட்டு வந்தவராகக் காணப்படின், பிறகு வெளியிட்ட இடத்தும் தீங்கு விளைதலில்லாத சில மறைவான நிகழ்ச்சிகளை அவரிடம் உணர்த்தி, அவற்றை வெளியிடுவதையும், இடாமையையும் அயலவரால் அறிந்து, வெளியாயின் அந்நட்பும் உடனே நீக்கற்பாலது. அன்றியும், நாம் யாதானுமோர் தீச்செயலில் அடியிடுவதாகப் போக்குக் காட்டி, அங்ஙனம் செய்ய முயலுங்கால் அதினின்றும் நம்மை விலக்க முயல்கின்றனரா இலரா என்பதை ஆராய்ந்து, அவர்தம் நட்பின் திறத்தை அளந்தறியலாம். நமக்குப் பெருந்துன்பம் வந்து பொருந்தியதாகக் காட்டி, அக்காலத்து நம்மை விட்டு விலகுகின்றாரா, அல்லது உடனிருந்து நமது துன்பத்தைப் பங்கிட்டுக்கொள்கின்றாரா என்பதை ஆராய்வதுடன், அவருக்குச் சில நன்மைகள் செய்து வருங்கால் ஒரு சிறு கேடும் செய்து, அதனல் வெறுப்புக்கொண்டு விலகுகின்றாரா, அல்லது முன் செய்த நன்மைகளையே பெரிதாக மதித்துப்பழைய நிலையினின்றும் மாறுபடாது நிற்கின்றாரா என்பவற்றையும் ஆராய்ந்தறியவேண்டும். இன்னோரன்ன ஆராய்ச்சிகளே நட்பியல்புடையாரை அளந்தறிதற்கேற்ற வழிகளாம்.

நட்டற்குரியார்: கல்வியறிவு, இன்சொல், வாய்மை, உற்றுழியுதவல், ஒழுக்கம், பெருந்தகைமை, நல்லோரிணக்கம் முதலியன வாய்க்கப்பெற்றவரே நட்டற்குரி

யார். நட்பினர், தந்தம் இயல்பு வகையால் தலை, இடை, கடையென மூத்திறப்படுவர். தனக்கென வைத்து யாதொரு பயனையும் விரும்பாமல் நட்புக்கொள்பவனே தலையாய நண்பன். முதலிற் சில நன்மைகளைப் பெற்றுக் கொண்டமை கருதிப் பின்னர்ப் பல நாள் காறும் அன்பு மாறாதவன் இடையாய நண்பன். வேண்டும்போதெல்லாம் உதவி செய்து வரும் வரை அன்பு பாராட்டி, பின் உதவி செய்ய இயலாத காலத்து முன் செய்த உதவிகளை எல்லாம் மறந்து, அன்பிற் பிறழ்ந்து நெகிழ்ந்து போமவன் கடையாய நண்பன்.

ஒருவருடன் நட்புக்கொள்ளு முன், ஆராய்ந்து கொள்ள வேண்டுமேயன்றிப் 'பின்னர் ஆராய்ந்துகொள்வேம்,' என்பது இழுக்குக்கு இடந் தந்து நிற்பதொன்றாம். நன்னட்பால் இன்பமும், தீ நட்பால் துன்பமும் விளையும். அன்றியும், 'நிறை நீர நீரவர் கேண்மை; பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு,' என்னும் அருமைத் திருக்குறளும், 'அறிவுடையார் கேண்மை முன் கொண்ட அளவிலே நில்லாது, பிறை நாள் தோறும் கலை வளர்தல் போல வளரும் இயற்கைத்து; அறிவிலார் கேண்மை அவர் அதைக் கொள்ளுங்காலத்துப் பெரிதாய்ப் பின்னாட்களில் கலை முற்றிய மதியம் தேய்ந்து அறுதல் போலத் தேய்ந்தொழியும் தன்மைத்தாம்,' என்ற அதனுரையும் இங்கு நோக்கத்தக்கன.

நட்பினர் கடமை: தம்முடைய தவறுகளைத் தாமே குறித்தறிந்து, அவற்றைத் திருத்திக்கொள்வதென்பது பலருக்கும் இயல்வதில்லை. 'கணக்கன் கணக்கறிவான்; தன் கணக்கைத் தானறியான்.' உலகத்துப் பொருள்கள் அனைத்தையும் கண்டறிகின்ற கண், தன்னைத்தான் காண்பதில்லை. கண்ணின் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா? தன் செய்கையின் குற்ற நற்றங்கள் தனக்குத் தோன்றா. ஏனையோரிடம் கண்ட தவறுகளின் உதவியால் ஒருவன் தனது தவறுகளைத் திருத்திக்கொள்வதும், தனது சுற்றுச் சார்பு

களோடு பொருந்துவதில்லை. கழறி உரைக்கும் நண்பன் இன்மையால், இறப்ப உயர்நிலையிலுள்ளார் சிலர் பெருந் தவறுகளிழைத்துத் தமது பெருமையையும் நன்மதிப் பினையும் இழந்து இடர்ப்படுதல் கண்கூடு. இங்ஙனம் தவறுகள் நேருந்தோறும், நண்பனே ஏற்ற பெற்றி சூழ்ச்சி சொல்லுதற்குரியன். 'நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண் மேற்சென்றிடித்தற் பொருட்டு,' என்றவாறு, ஒருவன் தனது ஒழுக்கந் தவறிய இடத்து, இடித்துக் கூறி அத்தவற்றினை நீக்கி, அவனை மீட்டும் நன்னெறியிலுய்த்தல், உண்மை நண்பன் கடமையாம்.

அன்றியும், மக்களின் இன்ப துன்பங்கள் என்றும் ஒரு தன்மையவாய் இருப்பதில்லை; மாறிமாறி வரும் இயல் புடையன. நேற்றுச் செல்வராய்த் திகழ்ந்தவர், இன்று வறுமையால் துன்பமடையக் காண்கின்றோம். இங்ஙனம் ஊழ்வலியானும், அறிவின் திறத்தானும் ஒருவற்கு இடுக்கண் நேர்ந்தவிடத்து, தானாகவே விரைந்து அதனைக் களைவதும் உண்மை நண்பனது முதன்மையான கடமை யாம். 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு,' என்னும் ஆன்றோர் மொழி ஈண் டறியத் தக்கது. ஊழ் வகையால் ஒருவர்க்குத் துன்ப மெய்தின், அதனை அருமருந்தேபோல நீக்க முயல்வதும் உடலால் இருவரேயாயினும் உயிரால் ஒருவரே போல உணர்ச்சியொத்து நடத்தலும், கரும்பினை நுனியிலிருந்து தின்றாற்போன்று நாளுக்கு நாள் இன்பமும் நட்பும் மிகுதியாமாறு நடந்துகொள்ளலும், இவை போல்வன பிறவும் நட்பினர் கடமைகளாம்.

நட்பின் பெருமை: 'இவர் எமக்கு இவ்வளவு அன்பினர்; யாம் இவர்க்கு இவ்வளவு அன்பினேம்,' எனச் சிறப் பித்துச் சொல்லினும், நட்புச் சிறிதாகத் தோன்றுமாத லால், யாம் அவர் என்னும் வேற்றுமை உணர்ச்சியின்றி நட்டலே சால்புடைத்து.

கூடா நட்பு : நட்பின் பயனைக் கருதாது, தாம் அடை யும் பயன் ஒன்றனையே கருதுவார் நட்பானது, விலக்கத் தக்கது. முகத்தெதிரே இனிமை பொருந்தப் பேசிப் புறத்தே இழித்துரைப்பாரது நட்பினும், பகைமை நல் லது. நல்லொழுக்கம் இல்லாதவரிடம் தீவினை குடிகொள் ளும். 'நிலத்தியல்பால் நீர் திரி'தல் போல, நல்லியல்பில் லாதாரோடு நட்டவர், அதன் பயனைப் பெறுதொழியார். தொத்து நோய்க்கும் உய்ந்து போகலாம் ; தீ நட்பிற்கு உய்தலருமை. தீயவர் கேண்மை கொள்ளாதிருத்தலே பெரியதோர் ஊதியமாகும்.

நட்பிற் பிழை பொறுத்தல் : உலகில் குற்றமற்றவர் யாரு மில்லை. கல்வி கேள்விகளால் அறிவு விளக்கம் பெற் றவரிடத்தும், அவரறியாமலே யாதானுமோர் குறை யிருக்கக் காண்கின்றோம். மனிதராதலின், இஃது இயல் பேயாம். 'யானைக்கும் அடி சறுக்கும்,' என்பது பழ மொழி. முற்றுணர்வுடைய இறைவன் ஒருவனே பிழை அற்றவனன்றிப் பிறரெல்லாம் ஒருவாறு பிழையுடை யரே ஆவர். ஆதலால், ஒருவனோடு நட்புக்கொண்டபின் அவனிடம் பிழைபாடு காணப்படினும், அதனையே குறிக்கொண்டு நீக்க முயலாமல், 'நெல்லுக்கு உமியுண்டு ; நீர்க்கு நுரையுண்டு; புல்லிதழ் பூவிற்குமுண்டு,' என்பது கருதி, அப்பிழையைப் பொறுத்தலே சால்புடையது.

அன்றியும், நண்பனிடம் குறை கண்டபோது கழற் றுரை கூறிப் பலகாலும் அவனைத் திருத்த முயல்வதும் முதன்மையான கடமையாம். இங்ஙனம் பலகால் இடித் துரைத்தும் திருந்தாமல், மேலும் குற்றமே புரிவானாயின், அவன் திருந்தி வருந்துணையும். விலகி இருத்தலே நலம். தம்முள் மனமொத்துக் கலந்தபின், நண்பனிடம் காணும் குறைகளைப் பிறரிடம் கூறுதல் இழிவாகுமாதலால், 'ஒரு வர் பொறை இருவர் நட்பு,' என்றவாறு, அதனைப் பொறுத்துக்கொள்ளல் வேண்டும். கண்ணைக் குத்திற் றென்று தமது கையைக் களைவாரில்லை.

இதுகாறும் கூறியவற்றால், நட்பினால் விளையும் நன்மைகள் பலவாயிருத்தலின், இஃது இன்றியமையாத தொன்று என்பதும், புணர்ச்சி, பழகுதல், உணர்ச்சி யொத்தல் என்று நட்பு மூவகைப்படும் என்பதும், ஒருவரோடு நட்புக்கொள்ளுமுன் அவரியல்பினைப் பல்லாற்றானும் ஆராய்தல் ஒருதலையாக வேண்டுமென்பதும், அங்ஙனம் ஆராய்ந்து பார்க்குங்கால் நல்லியல்புடையராகக் காணப்படின் அவரே நட்டற்குரியாரென்பதும், இங்ஙனம் பிணித்த நட்பினையுடைய ஒருவற்கு இடுக்கண் நேர்ந்ததாயின் அதனை விரைந்து களையவேண்டுவது நட்பினர் கடமையாமென்பதும், ஒருவரோடொருவர் உணர்வில் கேண்மை தீங்குக்கிடமாதலின் அதனைக் கடிந்தொதுக்கவேண்டுமென்பதும், தம்மால் ஆராய்ந்து நட்கப்பட்டாரிடம் பிழை காணப்படினும் நட்புத்தன்மையிற் பிறழாது அப்பிழையைப் பொறுத்தல் வேண்டுமென்பதும், பிறவும் ஒரு சிறிது விளங்கக் காணலாம்.

---

8. முகம்மது நபி

[திரு. பா. தாவூத்ஷா அவர்கள், B. A.]

முகம்மது நபி என்னும் மஹான் அரபு நாட்டின் தலை நகரமாகிய மக்காவின்கண் கி. பி. 571ல் ஒரு திங்கட்கிழமை வைகறைப் பொழுதில் அத்தேயத்தின்கண் விளங்கி வந்த மஹா சிரேஷ்டம் வாய்ந்த கோத்திரமாம் குறைஷிக் குலத்திலே அப்துல்லாவுக்கு, அவரது பாரியார் அமீனா என்பவரின் உதரத்தினின்று உதயமாயினர். இவர் ஜனனமாதற்குச் சிலமாதம் முன்னரே இவரது தந்தையார் காலகதியால் தேக வியோகமாய்விட்டார். பிறந்து ஆறுவயதாகுமுன்னரே அன்னையார் அமீனாவும் ஆண்டவனடி சேர்ந்துவிட்டார்.

பாலிய முதலே இந்த யுவர் வாய்மையுடைமை, தீமை இன்மை, யோக்கியப் பொறுப்பு, ஒழுக்கப் பெருமை, நம்பிக்கைக்குரிய தன்மை முதலிய நற்குணங் களில் தலை சிறந்து விளங்கியமையான், 'அல் அமீன்' (சரி யான நம்பிக்கைக்குரியவர்) என்னும் அழகிய பட்டத்தை அத்தேய மக்களால் வழங்கப்பெற்று, மக்கா நகரின் கண்ணே அதற்குமுன் 40 பிராயத்தை அடைந்து வித வையாய்ப்போயிருந்த கதீஜா என்னும் பெரிய பணக் காரச் சீமாட்டியின் வருத்தகத் தலைவராய்த் தேர்ந் தெடுக்கப்பட்டார். அம்மாது சிரோமணியின் ஷாம் தேய வியாபரரத்தில் நம்பிக்கையுடன் நடந்து நல்ல இலாபத்தையும் காண்பித்துத் தந்ததனல், இன்னவரது யோக்கியப் பொறுப்பிலும் வர்த்தக வாய்மையிலும் களங்கமற்ற ஒழுக்கத்திலும் பெருமதிப்புக் கொண்டு விட்ட கதீஜாப் பிராட்டியார் இவரையே திருமணம் செய்துகொள்ளத் துணிவு கொண்டுவிட்டார். அந்த விவாகத்திற்குப்பின் முகம்மதென்பார் வர்த்தகத்திலே ஈடுபடாது, தனித்திருந்து தியானம் புரிவதிலும், தான தருமம் செய்வதிலும், சமூக சேவை புரிவதிலும், இமிசிக் கப்பட்ட ஏழை எளியோர்களுக்கு உதவி செய்வதிலுமே காலங் கடத்திவந்தார். இவ்வாருகப் பதினைந்து ஆண்டு கள் வரையில் கழிந்தன.

இப்பெரியார் முதல் மூன்ருண்டுகள் மட்டும் இரகசி யத்திலேயே இஸ்லாமியப் பிரசாரம் செய்துவந்தார். எனி னும், மக்காவிலுள்ள குறைஷிகள் இவ்விஷயத்தைத் தெரிந்துகொண்டு, இஸ்லாத்தில் சேர்ந்து வந்தவர்களை எல்லாம் ஏளனம் செய்து இமிசிக்கத் தொடங்கினர்கள். மறைமுகமாக முகம்மது நபி பிரசாரம் செய்து வந்ததனு லும், எதிரிகளின் இன்னல்களும் இடையூறுகளும் நாளுக்குநாள் பெருகிக்கொண்டே வந்ததனுலும் முதல் மூன்ருண்டுகளில் சுமார் 40 மனிதர்களே இஸ்லாத்தில் சேர்ந்தார்கள்.

நபிப் பட்டம் வந்த 10-ஆம் ஆண்டில் கதீஜாப் பிராட்டியார் காலகதி அடைந்துவிட்டார். இதனால் நபி பெருமானுக்குப் பக்க பலமென்பது ஒரு சிறிது மக்காவின்கண் தளர்வுறத் தலைப்பட்டது கண்டு, எதிரிகளும் அதிசம் துள்ளத் தொடங்கிவிட்டார்கள். எனவே, முகம்மது நபி தாயிபென்னும் மற்றொரு நகருக்குச் சென்றேனும் பிரசாரம் செய்யலாமென்று எண்ணிச் சென்றார். ஆங்கிருந்தும் காலாலிகளால் கல்லாலெறியப்பட்டுக் காலில் உதிரம் சொரியத் துரத்தப்பட்டார். பிறகும் மக்காவுக்கே திரும்பி வந்து, யாத்திரா காலங்களில் வெளியூர்களிலிருந்து அங்கு விஜயம் செய்யும் மனிதர்களை நோக்கி இஸ்லாத்தின் உபதேசம் புரிந்து வந்தார். அவர்களுள் ஒரு சிலர் செவி தாழ்த்துவதும் மற்றும் பலர் உதாசினம் செய்வதுமாகவே சில காலம் கடந்து வந்தன. ஒரு முறை மதீனாவிலிருந்து மக்காவிற்கு விஜயஞ் செய்திருந்த அறுவர் முகம்மது நபியின் உபதேசத்தைக் கேட்டு இஸ்லாத்தில் சேர்ந்துவிட்டனர். எனவே, அடுத்த ஆண்டில் அவ்வறுவரும் மற்றுமோர் அறுவருடனே வந்து இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டனர். இது நபிப் பட்டம் வந்த 11-ஆம் ஆண்டில் நிகழ்ந்தாகும்.

பிறகு நபிப் பட்டம் வந்த 13-ஆம் வருட ஆரம்பத்திலே நபி பெருமானும் மதீனாவிற்குப் புறப்படச் சித்தமாகிவிட்டார். இதற்கிடையில் எல்லா முஸ்லிம்களும் மதீனாவிற்குத் தப்பி ஓடிவிட்டார்களென்னும் ஆத்திரங்கொண்டு, முகம்மது நபியையும் அவ்வாறு ஓடவிடக் கூடாதென்று தீர்மானித்துக்கொண்டு, குறைஷியர் ஒரு நாள் இரவிலே முகம்மது நபியைக் குத்திக் கொன்றுவிடுவதென்றே ஏற்பாடு செய்து முடித்துவிட்டனர். இது தெரிந்து முகம்மது நபி நள்ளிரவிலே அவ்வீட்டைவிட்டுப் புறப்பட்டு அபூபக்கர் என்னும் தம்முடைய பிரதம சிஷ்யரை மட்டும் அழைத்துக்கொண்டு தோளர் என்னும் குகைக்குள்ளே மறைவாகத் தங்கிவிட்டனர். நபிகள்

நாயகம் மூன்று நாள் வரை அக்குகையினுள்ளே தங்கி இருந்து, நான்காவது நாள் புறப்பட்டு மதீனாவிற்குச் சென்றார்கள். இதுதான் நபி நாயகத்தின் சரித்திரத்தில் ஹிஜ்ரத்தென்று பிரபலமாகச் சொல்லப்படுகிறது; இதிலிருந்துதான் முஸ்லிம்களின் ஹிஜ்ரி வருடம் கணிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மக்காவை விட்டு வடக்கே 300 மைல்களுக்கப்பாலுள்ள மதீனாவுக்குச் சென்று ஆங்கிருந்த யூதர்களையும் ஏனையோரையும் சீர்திருத்தி வந்த பொழுதும் குறைஷிகள் மட்டும் முஸ்லிம்கள்மீது வைத்த வர்மத்தைச் சிறிதும் மறந்துவிடவில்லை. எனவே, இஸ்லாத்தை ஒழித்துவிடுவான் வேண்டி 1000க்கு மேற்பட்ட குறைஷிகள் மதீனாவின்மீது ஹிஜ்ரி 2ல் படையெடுத்துச் சென்றார்கள்; ஸிரியாவுக்குச் சென்று திரும்பி வரும் மக்கத்தவரின் வர்த்தகக் கூட்டத்தை மதீனாவிலுள்ள முஸ்லிம்கள் தாக்கப் போகிறார்கள் என்னும் ஒரு பொய் வதந்தியைச் சாக்காக வைத்துக்கொண்டே அம்முஸ்லிம்களைத் தாக்கச் சென்றார்கள். நபி பெருமான் இவ்விஷயம் தெரிந்து, தம் வயமிருந்த சிறுவர்களும் வயோதிகர்களும் பலாட்டியர்களும் சேர்ந்த ஆயுத பாணிகளல்லாத 313 முஸ்லிம்களை அழைத்துக்கொண்டு, மக்காவிலிருந்து வரும் குறைஷிப் படைகளை நடு வழியிலேயே தடுக்கச் சென்றார். ஆகவே, பத்தரென்னுமிடத்தில் அந்தக் கடும் போர் நிகழலாயிற்று.

முழுத் தோல்வியுற்றுப் புறங்காட்டி மக்காவிற்கு ஓடிய குறைஷிகள், தங்கள் இனத்தவர்களையும் சுற்றுப் புறங்களிலுள்ள மற்றெல்லா வர்க்கத்தினரையும் திரட்டிக்கொண்டு, 3000 வீரர்கள் வரை மதீனாவிற்கருகே வந்து பாடிவீடு செய்துகொண்டார்கள். அதுபோது முகம்மது நபி தம்முடைய 700 சிஷ்யர்களுடனே சென்று, மிக்க தீரத்துடனே உஹதென்னும் மலையடிவாரத்தில் யுத்தம் புரிந்தார்.

இந்த யுத்தத்தில் முஸ்லிம்கள் ஜயித்தார்களென்று கூறுவதற்கில்லை. எனினும், குறைஷிகளும் வெற்றிமாலை சூடி முஸ்லிம்களைத் தொலைத்துவிட முடியவில்லை. ஆதலின், ஆங்குச் சம்பூரண வெற்றிபெற முடியாது திரும்பிய குறைஷிகள், மக்காவிற்குச் சென்ற பின்னரும் தங்கள் குரோத புத்தியை விட்டார்களில்லை. ஆகவே, அவர்கள் அரபு நாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து எல்லா அராபிக் கூட்டத்தினரையும் முஸ்லிம்களுக்கு விரோதமாய்க் கிளப்பிவிட்டார்கள்.

நபி பெருமான் தமக்குக் கிடைத்த 3000 வீரர்களுடனேசென்று மதீனுவைச்சூழ ஓர் அகழ் வெட்டிக்கொண்டு யுத்தத்திற்குச் சன்னத்தராய் நின்ருர். இறைவன் சோதனையாலேற்பட்ட கடும்புயலாலும், மழையாலும், குளிராலும் எதிரிகள் தங்கள் ஆயுதங்களையும் பிற தட்டுமுட்டுச் சாமான்களையும் எறிந்துவிட்டு, மக்காவை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள்.

ஹிஜ்ரி 8ல் நபி பெருமான் 10,000 முஸ்லிம் வீரர்களுடனே புறப்பட்டுச் சென்று, மக்கா நகரைக் கைப் பற்றிக்கொண்டார். குறைஷிகள் எதிர்த்து நிற்கவில்லை; எல்லோரும் சிரங் குனிந்து வாளா இருந்துவிட்டனர். ஆதலின், முகம்மது நபி ஓர் ஆள் இரத்தமும் சிந்தாது அந்நகரைக் கைப்பற்றிக்கொண்டதோடு அந்த ஜன்மப் பகைவர் அனைவரையும் அடியோடு மன்னித்தும்விட்டார். இதற்கிடையில் அரபு தேயத்தின் பற்பல பகுதிகளும் சுயமே இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டே வந்தன. ஒருசில முரடர்கள்மட்டும் சிறிது எதிர்ப்பிற்குப் பின்னே இஸ்லாத்தைத் தழுவிக்கொண்டார்கள். ஹிஜ்ரி 9ல் ஹஜ்ஜுக்குச் சென்ற முஸ்லிம்களால் நபி பெருமானின் அரச விளம்பரம் ஒன்று அந்நகரின்கண் வாசிக்கப்பட்டது. பின்னர் ஹிஜ்ரி 9-10ல் அரபு தேயத்தின் பற்பல பகுதிகளிலிருந்தெல்லாம் தூதுக் கூட்டங்கள் அடுக்கடுக்காக வந்து தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்டே வந்

தன. பிறகு ஹிஜ்ரி 10ல் நபி பெருமான் 1,50,000 சிஷ்யர்களுடனே புறப்பட்டு, மக்காவிற்குச் சென்று, தம்முடைய இறுதி ஹஜ்ஜை நிறைவேற்றிக்கொண்டார். அதுசமயம் அருகிலுள்ள அரபாத்து மைதானத்தில் நின்று ஓர் இனிய இறுதிப் பிரசங்கமும் செய்து முடித்தார். அதில் ஏக தெய்வக் கொள்கையும், ஸ்திரீகளின் உயர்வும், அடிமைகளின் மேன்மையும், அண்டை அயலாருடனும் பந்து மித்திரர்களுடனும் நடந்துகொள்ள வேண்டிய முறையும் அதிகம் வற்புறுத்திக் கூறப்பட்டன. கொலை, களவு, காமம், கள், சூது, அநாதைக் குழந்தைகளின் பொருளை அபகரித்தல் ஆகியவற்றின் கேடுபற்றியும் அழகாக வற்புறுத்தப்பட்டது. இறுதியாக இவர் ஹிஜ்ரி 11ல் (கி. பி. 632) ஆண்டவன் திருவடி நிழலை அடைந்துவிட்டார்.

---

9. உடற்பயிற்சியும் வலிமையும்

[திரு. சாண்டோ லெ. சோமசுந்தரம் அவர்கள்]

மக்களனைவரும் உடல் வலிமையை முக்கியமாக விரும்புவார்கள். அதையடைய அநேக உபாயங்கள் இருக்கின்றனவெனக் கூறப்படினும், அவைகளுக்குள் உடற்பயிற்சி உயர்ந்தது. இந்த உலகத்தில் அதிகமாகவும் பயமில்லாமலும் வாழ்வதற்கு உடம்பில் வலிமை இருக்க வேண்டுவது அவசியமாகும். வெறும் வேதாந்தம் பேசித் திண்ணைச் சோம்பேறிகளாய், பலமற்றவர்களாய்ப் போய்விட்ட நாம், இனியாவது பலமுடையவர்களாக முயற்சி செய்ய வேண்டும். ஒரு தேசத்தின் பெருமை அநேகமாய் அத்தேச மக்களின் உடல் வலிமையையே காரணமாகக் கொண்டுளது. வலிமை குன்றிய மக்களால் நாடு வறுமை உறுகின்றது. ஒரு செடி நன்கு வளர்க்கப்பட்டாலன்றி வாடிப்போகின்றது. அவ்வாறாக, குழவிப்பருவம் தொட்டுச்

சரியாகப் பராமரிக்கப்படாத மக்களின் எதிர்கால வாழ்வு என்னும்? உடல்வலியுற்றவர்கள் வாழ்க்கையின் போராட்டத்தைத் தாங்கி நிற்க ஏற்றவர்களாயிருக்கின்றனர்கள்.

முற்காலத்தில் நம் நாட்டவர்கள் உடற்பயிற்சியில் சிறந்தவர்களாய் விளங்கியிருந்தார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் உடற்பயிற்சியிற் சிறந்தவர்கள் வைத்து ஆதரிக்கப்பட்டு வந்தார்கள். உடற்பயிற்சி என்பது, அக்காலத்தில் எளியதாக எண்ணப்படவில்லை. இக்காலத்தில் அவ்வெண்ணம் மாறுபட்டிருக்கின்றது. உடற்பயிற்சியாளனுக்கு மன வலிமையும் வளர்ச்சி அடைந்திருக்குமாதலால், அவன் இன்னொருவனுடைய துணையையே விரும்பாமல், வீரனாய் விளங்குவான். ஒவ்வொரு வாலிபரும் உடல் வலிமை கருதி உடற்பயிற்சியைக் கைக்கொள்ளல் இன்றியமையாததாகும். போருக்காக அன்றாயினும், பிற எத்தொழிலிலும் மனம் தளராமல் நிலைத்து நின்று சாதிப்பதற்கு உடல் வலிமையும் மன வலிமையும் அவசியமாதலின், அவ்விரண்டையும் பழக்கத்திற்கொண்டு வருதற்கு உரித்தான முறை உடற்பயிற்சியேயாகும்.

முறையாகச் செய்யப்படும் உடற்பயிற்சியானது யோக சாதனங்களில் ஒரு பிரிவாகவே கவனிக்கப்படுகின்றது. உடற்பயிற்சி, மனவடக்கம், கொண்டு செலுத்தும் வைராக்கியம் இவற்றைப்பற்றி நினைக்கும்போது நம் பழங்கால முனிவர்களின் நினைவும் அவர்களது தவத்தின் பெருமையும் நினைவுக்கு வருகின்றன. ஆகவே, ஒரு பலவானுக்கு அவசியம் வேண்டுவது, அவனுடைய உட்கருவிகளின் தளராத் தன்மையேயாம். ஒவ்வொரு வாலிபரும் தம் தேகத்தைத் தளராமல் மன ஊக்கத்துடன் பழக்கி வருவதால், எக்காரியங்களையும் முடிவு வரையில் கொண்டு செலுத்தும் ஆற்றல் அவருக்குக் கைகூடும். உடற்பயிற்சி முறையில் பழகிவரும் வாலிபர்க்கு வாலிபப் பருவத்திலேனும் முதுமைப் பருவத்திலேனும் நோய்கள் வந்தணுகவேமாட்டா என்பது நிச்சயம். இத்தகைய

நோயற்ற மன ஊக்கத்துடன் உடல் வலியுடைய வாலிபர்களே தற்போது வேண்டப்படுகின்றனர்கள். தளர்ந்த இருதயமும், கோழை நெஞ்சமும், வளர்ந்து முதிராத சுவாசாசயமும், நோயடைந்ததும் சீரணஞ் செய்துகொள்ளச் சக்தியறறதுமான ஆமாசயமும் உடைய ஒரு வாலிபன் இவ்வுலகிற்கே பயன்படாதவனுகின்றான். உடற்பயிற்சியால், மேற்கூறப்பட்ட குறைகளெல்லாம் நீங்கி அவ்வாலிபனே, உலகிற்கு—தன் தேசத்திற்கு—தன் ஊருக்கு—தன் குடும்பத்திற்குப் பெரும்புகழையும் உயர் சுதந்திரத்தையும் தேடிக் கொடுக்கும் ஆற்றலும் வைராக்கியமுமுள்ளவனுக வளர்வான்.

உடலின் தசை நரம்புகளைக் கட்டுவதற்கும் பலப்படுத்துவதற்கும் உடற்பயிற்சி கட்டாயம் வேண்டுவதாகிறது. ஒருவன் குறித்த காரியத்தைத் தளராது செய்து முடித்தற்கு, அவனுடைய தசை நார்கள் அல்லது தசை நரம்புகள் நன்ருயிருத்தல்வேண்டும். உடற்பயிற்சியானது, தசை நார்களைக் கட்டுவதுடன் நில்லாது, உடலில் வளரும் அதிகமான கொழுப்புக்களையும் அதிகமான தசைகளையும் கழித்து, உடலை ஒழுங்குபட நிறுத்துகின்றது. உடலுக்குக் கொழுப்பும் தசையும் அவசியம் வேண்டுவனவாயினும், அவை அளவுக்கு மிஞ்சினுல், தேகத்தில் கனத்தையும் பலக் குறைவையும் சோம்பலையும் எழுப்பிவிடுமாதலின், உடற்பயிற்சியாகிய காரியத்தால், அவை ஒழுங்குபட வேண்டுவது கட்டாயமேயாகும். உடற்பயிற்சியானது, உட்கருவிகளுக்கு ஊக்கத்தை அளித்து, பலமான காரியங்களைச் செய்வதில் மலைப்பற்ற தன்மையையும் அவைகட்குக் கொடுக்கிறது.

நமக்கு மிகவும் அவசியமாக வேண்டுவது வலிமை. 'வலிமையுடன் இருக்க வேண்டும்,' என்பதே நாம் தற்காலம் செபிக்க வேண்டிய மந்திரம். ஆகவே, நமக்குத் தேவையாவது சக்தி-பலம்-வல்லமையேயாகும். அமெரிக்கர்கள் பின்பற்றும் கொள்கை, திறமையாகும். இந்தியர்

களது கொள்கை, சக்தியாக இருக்கட்டும். வீரமுள்ள நாகரிகத்தைக் காண்பிக்கும் இரு குறிகள் யாவையெனில், ஆண்மையோடு கூடிய விளையாட்டுக்களில் விருப்பமும், நல்ல சுத்த வீரர்களைப் புகழுவதுமேயாம். தம் பலத்தை வளர்த்துக்கொள்ளுவதே ஒவ்வொருவருக்குமுரிய கொள்கையாயிருந்து வரவேண்டும்.

செல்வர்கள் உடற்பயிற்சியும் அறிவுப் பயிற்சியும் இன்றிச் சோம்பேறி வாழ்வை மேற்கொண்டு, துன்புறுகின்றார்கள். அவர்கள் தங்கள் தொழில்களைக் கவனிப்பதோடு, உடற்பயிற்சியின்பொருட்டுச் சில வேலைகளும் செய்தல் வேண்டும். இன்ப வாழ்வை விரும்புவோர் அனைவரும் வேலை செய்தல் வேண்டும். சோம்பேறி வாழ்வில் இன்பம் உண்டா?

ஸர் சுரேந்திரநாத் பானர்ஜி தமது பண்டை நினைவுகளைப்பற்றி எழுதி வெளியிட்ட புத்தகத்தில் பின் வரும் செய்திகள் காணப்படுகின்றன: 'என் உடல் நலத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் காரணம் இன்னதென்று நான் குறிப்பிடவேண்டுமெனப் பல நண்பர் என்னைக் கேட்டுக் கொள்ளுகின்றனர். இப்போது எனக்கு வயது எழுபத்தைந்துக்கு மேலாகிவிட்டது. அப்படியிருந்தும், நான் நோயற்ற வாழ்வும் தெளிந்த அறிவும் உடையவனாய் இருக்கின்றேன். அதனால், எனது அனுபவம் உபயோகமுள்ளதாயிருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள். நான் உடல் நலத்தைக் காப்பாற்றுவதே முதற்கடமை என்னும் விரதத்தை ஏற்றுக்கொண்டவனாய் இருந்தேன். இயந்திரம் வேலை செய்வதற்கு முன் அது ஒழுங்கான நிலையில் அமைய வேண்டும். பல பெரியோர்கள் நம் தேசத்தில் சிறு வயதிலேயே இறந்து போயிருக்கின்றார்கள். சுகத்தைக் காப்பாற்றுவதற்கு முதன்முதலாக வேண்டுவது சரியான காலங்களில் தவறாமல் செய்யப்படும் உடற்பயிற்சியே என்று நான் கருதுகிறேன். என் வாழ்நாட்கள் முழுவதும், இப்போதுங்கூட, நான் காலையில் அரைமணி

யும், மாலையில் முக்கால் மணியும் உடற்பயிற்சி செய்வதுண்டு. பல வேலைகள் ஏற்படுவதால் மாலைப் பயிற்சி நிற்பதுண்மையாயினும், காலைப் பயிற்சி ஒரு போதும் நிற்பதில்லை. நான் இளமையில் ‘டம்பல்ஸ், கரலா’ முதலியனவும் செய்வதுண்டு.’’

மகாத்துமா காந்தி, சுவாமி சிரத்தானந்தர் முதலிய பல பெரியாரும் உடற்பயிற்சியின் அவசியத்தை வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர்.

நமது விளையாட்டு: முற்காலங்களில் எங்கும் சிறுவர்கள் பற்பலவிதமான விளையாட்டுக்கள் விளையாடினார்கள். மற்போர் செய்தல், தாவிக் குதித்தல், சிலம்பம் பழகுதல், ஓடுதல், நீந்துதல், படகு ஓட்டுதல், இந்தியக் காற்பந்து, எறிபந்து, குழிப்பந்து, கரலா சுற்றுதல், கஸரத்து, தண்டால், பஸ்கி எடுத்தல் முதலிய விளையாட்டுக்களினால், சிறுவர்கள் சரீர சுகமும் பலமும் பெற்று வந்தார்கள். இத்தகைய விளையாட்டுக்களை இந்நாளில் பார்ப்பது அரிதாயிருக்கின்றது. இவ்விளையாட்டுக்களுக்குப் பொருட்செலவில்லை. இவைகளெல்லாம் எளிய விளையாட்டுக்கள். ஆனால், தற்காலம் மேல் நாட்டு விளையாட்டுக்களைச் சிறுவர்கள் விரும்புகின்றார்கள். அந்நாட்டு விளையாட்டிலும், செலவற்ற—உடம்பாலேயே செய்யத் தகுந்த—உடம்பினை விரைவில் உருவாக்குகின்ற விளையாட்டுக்கள் பல உண்டு. அவைகள் ஒரு கொள்கையும் முறையும் பற்றியவைகளாயிருக்கின்றன. எனினும், கிராம விளையாட்டுக்கள் மீண்டும் கையாளப்பட வேண்டும். தற்காலத் தேவைக்குத் தகுந்தாற்போல அவைகளை மாற்றி எல்லோரும் அவைகளைக் கைக்கொள்ளுமாறு விரைவாகப் பரவச் செய்யவேண்டும். அவ்விளையாட்டுக்களை ஒழுங்காக முறையோடு செய்துவருபவர்களது உடல் நன்கு வலுவடையும். அவர்கள் வனப்புள்ளவர்களாகவும் உடல் நலமுள்ளவர்களாகவும் விளங்குவார்கள். மற்போர், சிலம்பம், குத்துச்சண்டை இவைகளிலொன்றைத் தெரிந்திருக்கும் ஒருவர் உடல், மிகவும் சுறுசுறுப்

புள்ளதாயும், ஆபத்துக்காலத்தில் இலகுவாய்த் தப்பித்துக்கொள்ளக் கூடியதாயுமிருக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால், இக்காலத்தில் பழகும் உடற்பயிற்சி, உடற்பயிற்சியென்று கூறப்படுவதற்கே உரியதன்று. பெண் பிள்ளைகள் விளையாடும் பந்தடிக்கும் விளையாட்டால் என்ன தேக பலன் கிடைக்கும்? ஒரு நாளும் பெற முடியாது. அன்றியும், இது ஆண்மையுள்ள விளையாட்டுமாகாது.

இளைஞர்கள் வாழ்வு: பெற்றோர்கள் தனிகர்களாயிருந்தாலும், வறிஞர்களாயிருந்தாலும், தங்கள் பிள்ளைகள் சர்வகலாசாலைகளில் படித்து, உயர்தர உத்தியோகஸ்தர்களாக வர வேண்டுமென விரும்புகின்றார்கள். உடல் நல சம்பந்தமான உடற்பயிற்சிக் கல்வி முற்றும் புறக்கணிக்கப்படுகின்றது. இக்காலத்து மாணக்கர்கள், நாடக சாலைகளுக்கும் பிற களியாட்டச் சாலைகளுக்கும் செல்லுகின்றார்கள். வருங்கால வக்கீல்கள், வைத்தியர்கள், உயர்தர அரசாங்க அதிகாரிகள், பெரிய வியாபாரிகள் முதலிய பலரது இளமைப் பருவம் இவ்வாறு கழிகின்றது. பெற்றோர்களுக்குத் தங்கள் பிள்ளைகள் உயர்தர சர்வகலா சாலைப் பட்டங்கள் பெறவேண்டுமென்பதையும், உயர்ந்த குடும்பங்களில் அவர்கட்குக் கலியாணம் செய்ய வேண்டுமென்பதையும், அவர்கள் உயர்தர அரசாங்க உத்தியோகங்களிலாவது வியாபார நிலையங்களிலாவது அமர வேண்டுமென்பதையுந் தவிர வேறு எண்ணமெதுவும் இல்லை. சரியான உடற்பயிற்சிகள் செய்யும்படியும், ஒழுங்கான வாழ்க்கையை நடத்தும்படியும், கடினமான வாழ்க்கையை மேற்கொள்ளும்படியும், ஆண்மைத்தனமான விளையாட்டுக்களில் கலந்துகொள்ளும்படியும், விவசாயம் போன்ற பல்வேறு தொழில்களைச் செய்யும்படியும் சிறுவர்கள் தூண்டப்படுவதில்லை. இவ்வாறாகக் கடினமான வேலை எதற்கும் தகுதியற்றவர்களாகவும், தேசாபிமானமுள்ள ஆண் மக்களின் வேலைகளை மேற்கொள்ள முடியாதவர்களாகவும், ஆபத்துக் காலங்களிலுங்கூடத் தங்களையும்,

தங்கள் பெண்டு பிள்ளைகளையும், சொத்துச் சுகங்களையும், திருடர்கள் போக்கிலிகள் முதலியவர்களிடமிருந்து காப்பாற்றிக்கொள்ளமுடியாதவர்களாகவும், நம் நாட்டு வாலிபர்கள் வளர்ந்து வருகின்றார்கள். இவர்களது திறமையெல்லாம் பேனா முனையிலும், நாக்கு நுனியிலுந்தான் காணப்படுகிறது. இவர்கள் தங்களையும் தங்கள் பெண்டு பிள்ளைகளையும் சொத்துச் சுகங்களையும் காப்பாற்றுவதற்கு நாட்டுப்புறத்தவர்களை வேலைக்கமர்த்திக்கொள்ள வேண்டி இருக்கிறது. ஆண் மக்களைப்போல வாழ்க்கையை நடத்த முடியாத இவர்களது இழிந்த வாழ்க்கையைப்பற்றி என்ன சொல்வது! இத்தகையோர்களைப் பெரும்பாலோராகக் கொண்டுள்ள ஒரு சமூகம் எவ்வாறு பலமடையும்? எவ்வாறு ஊக்கமாயிருக்கும்?

தற்காப்பு: கடினமான வாழ்க்கையை நடாத்தச் சிறுவர்கள் பயிலவேண்டும்; ஆடம்பர வாழ்க்கையை வெறுத்துத் தள்ள வேண்டும். எவ்வினமாவது சுதந்தரத்தோடும் தன்மதிப்போடும் இருக்க வேண்டுமாயின், கடினமான வாழ்க்கை நடத்தும் தன்மை அவ்வினத்தவரிடை இருந்து வர வேண்டும். தங்களதைக் காத்துக்கொள்ளப் பிறரது உதவியை எதிர் பார்த்திருப்பவர்கள், என்றும் பிறர்க்கு ஆட்பட்டிருக்க வேண்டுபவர்களே. நித்திய வாழ்க்கையிலுங்கூட ஒவ்வொருவரும் தம் உரிமைகளையும் சொத்துச் சுகங்களையும் பாதுகாத்துக்கொள்ளத் தம்மையே நம்பி இருக்கவேண்டும்; பிறர் உதவியை நம்பியிருக்கலாகாது. அஹிம்ஸா தர்மம், தற்காப்புச் செய்துகொள்ளலாகாதெனத் தடை செய்யவில்லை. உடல் வலிமையோடிருப்பது ஒவ்வொருவருக்கும் பிறப்புரிமையாகும். முறைமாறான வழியில் பிறருடன் வலிந்து சண்டைக்குச் செல்லாது, தங்கள் உரிமைகட்கும் சொத்துச் சுகங்கட்கும் ஆபத்து வருங்காலத்தில், தங்கள் ஆண்மை தங்களைவிட்டு அகலவில்லை என்பதையும், தங்கள் உரிமைகளைக் காப்

பாற்றிக்கொள்ளத் தங்களுக்குப் போதிய பலமிருக்கிற தென்பதையும் காட்டிக்கொள்ள வேண்டும்.

முடிவுரை: சுகாதாரத்தாலும், முக்கியமான உடற் பயிற்சியாலும் நமது வலிமையெல்லாம் பெருக்கிக் கொண்டு பெரு வாழ்வு வாழ்தல் கூடும். ஒருவன் தன் ஆற்றலுக்கேற்ற வண்ணம் வஞ்சகமின்றி உழைத்தல் வேண்டும். இவ்வுழைப்பு உடம்பிற்கும் உளத்திற் கும் வேண்டும். ஒருவன் உடம்பை மட்டும் தடிப்பேற வளர்க்கும் முழுமகன் ஆதல் கூடாது. உள்ளத்தையும் உடம்பையும் ஒருங்கே போற்றி வளர்த்தல் வேண்டும். அமைதியோடு உள்ளமும் உடம்பும் உழைப்பில் இசைதல் வேண்டும். உழைப்பு மனிதனை ஆக்குவது; கவலையோ, மனிதனை அழிப்பது. ஆகவே, நாம் இயற்கை வாழ்வு வாழ்ந்து, உடம்மை அரண் செய்து, வாடாத இளமை யோடும் குன்றாத வீரத்தோடும் இன்புறுவோமாக.

---

10. விசயராகவ நாயக்கர்

[வித்துவான் கி. சாமிக்கண்ணு முதலியார் அவர்கள்]

தோற்றுவாய்: தமிழ் மொழி தழைத்து வளர் தண் டமிழ் வரைப்பில், பஃறுளியாறும், பன்மலையடுக்கமும், குமரிக்கோடும் ஒழிய எஞ்சியுள்ள தமிழ்நாடு, வடக்கில் திருவேங்கடத்தையும், தெற்கில் ஆழ்கடற் குமரித் துறை யையும், மேற்கில் தொன்முது பௌவத்தையும், கிழக்கில் குண கடலையும் எல்லையாகக் கொண்டு திகழும் சீர்த்தியது. இத்தமிழ் நாட்டைச் செழிக்கச்செய்யும் யாறு பலவற்றுள் ஒன்றாகியதும், மணியும் பொன்னும் காழகிற்றுணியும் வாரிப் பூந்திரை சுருட்டும் தெண்ணீர்ப் பொன்னியெனப் பெயரியதுமாகிய காவிரித்துக் காவளம் பெருக்கும் காவிரி வளமுறுத்தலால் கதிரொரு முழம் நீண்டு கட்டு முக்கலம் காணும் கழனி நாட்டுக்குச் சோழ நாடு என்பது பெயர்.

இச்சோழ நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடாத்தியவர் சோழர், பல்லவர், பிற்சோழர், ஒசளர், பாண்டியர், முகம்மதியர், விசய நகரத்தார் ஆகிய அரச குடியினர். அவர்களின் பின்னர்க் கி. பி 1565 முதல் 1687 வரை இந்நாட்டை ஆண்டவர் சேவப்ப நாயக்கரை முதல் மன்னராகக் கொண்ட நாயக்க அரச வழியின ராவர். இவ்வரச வழியினர் தமது அரசிருக்கையாக, இஞ்சி சூழ்ந்ததும், திருமுறை கண்ட சோழனுகிய முத லாம் இராசராச சோழனல் கட்டப்பட்டு இன்றும் தமிழரின் நாகரிக மேம்பாட்டை உலகுக்கு உணர்த் தும் செழும்பரிதி எனத் திகழும் இராச ராசேசுவரம் என்னும் பெரிய கோவிலை உடையதுமாகிய தஞ்சாவூரை ஏற்படுத்திக்கொண்டனர்.

இந்த நாயக்க அரச வழியில் நாலாம் மன்னராய் விளங்கிக் குடி தழீஇக் கோலோச்சியவர் விசயராகவ நாயக்கர். இவர் இரகுநாத நாயக்கருக்குக் குமாரர். இவ ருக்கு அச்சுத நாயக்கர், அச்சுத விசயராகவ நாயக்கர் என்ற வேறு பெயர்களும் வழங்கி வந்தன. இவருடைய மகன் பெயர் மன்னரப்ப நாயக்கர். இவருக்கு ஒரு பெண்ணும் உண்டு.

இறை மாட்சி: விசயராகவ நாயக்கர் தம் குடி களிடமிருந்து ஆறிலொரு கடமையே இறையாகப் பெற் ருர்; தீவுக்கோட்டை, பட்டுக்கோட்டை முதலிய ஊர்களில் இருந்த கற்கோட்டைகளைச் சீர்திருத்தினர். கி. பி. 1669ல் டச்சுக்காரருக்கு நாகப்பட்டினத்தை இனம் செய்தார். அந்த இனம் சாசனப் பட்டயம் வெள்ளித் தகடுகளில் வரையப்பட்டு இப்பொழுது பட்டேவியா என்னும் ஊரி லுள்ள பொருட்காட்சிச் சாலையில் இருக்கிறது.

விசயராகவ நாயக்கருடைய அரசாட்சியின் கடைசிக் காலத்தில், மதுரையில் அரசு செலுத்தி வந்த சோக்கநாத நாயக்கர்சிராப்பள்ளியைத்தலைநகராக்கி,அவ்விடத்திலேயே

குடியிருந்தார்; அவ்விடத்திலிருந்து கொண்டு தஞ்சாவூரைக் கைப்பற்றவேண்டுமென்று அதன்மேல் கண்ணுயிருந்தார். அவ்வாறிருக்கையில், சொக்கநாத நாயக்கர் விஜய ராகவநாயக்கருடைய அருமைச் செல்வியைத் தமக்கு மணம் செய்து கொடுக்கும்படி தஞ்சாவூருக்குத் தூது விடுத்தார். அச்சம்பந்தம் ஏலாதென்று நினைத்து, அதற்கு விசய ராகவ நாயக்கர் மனங்கொள்ளவில்லை. அதையே ஒரு காரணமாகப் பாராட்டிச் சொக்கநாத நாயக்கர் தம் தளவாய் வேங்கட கிருஷ்ணப்ப நாயக்கரின்கீழ் ஒரு படையெடுப்புத் தயார் செய்து, தஞ்சாவூரின்மீது அனுப்பினர். தளவாய் வேங்கட கிருஷ்ணப்ப நாயக்கருக்கு உதவியாகச் சொக்கநாத நாயக்கர் தம்முடைய செவிலித்தாயின் மகனை அளகிரியையும் அனுப்பினர். சிராப்பள்ளியிலிருந்து அனுப்பப்பட்ட சேனைத் தலைவர்கள் திடீரென்று படையெடுத்துச் சென்று, கி. பி. 1673 ல் தஞ்சாவூரைத் தாக்கினார்கள். தஞ்சாவூர்ச் சேனைகள் உறுதியுற நின்று சண்டை செய்து, கடைசியாய்த் தோல்வி அடைந்தன. தளவாய் அரங்கப்ப நாயக்கர், தளவாய் சோக்கநாத வீரபாநு, தளவாய் சின்ன ராசா, தளவாய் அக்கி ராசா முதலியவர்களும் போர் புரிந்து உயிரிழந்தார்கள். ஒன்னார் கோட்டைக்குள் நுழைந்துவிட்டனர் என்ற செய்தி காதுக்கெட்டவே, விசயராகவ நாயக்கர் தம் மைந்தர் மன்னாரப்ப நாயக்கருடன் கையும் கத்தியுமாய்ப் போர்க்களத்தில் குதித்துப் பகைவர்களுடன் அமராற்றி, அவர்களில் அநேகரை வெட்டிக் கண்ட துண்டமாக்கிக் கடைசியாய் மாற்றாரின் வாளுக்கு இரையானர். அவருடன் அவருடைய குமாரர் மன்னாரப்ப நாயக்கரும் சண்டையில் மடிந்தார். இச்சண்டை தஞ்சாவூர் வடக்குக் கோட்டை வாசலுக்கடுத்த இராசகோபாலசாமி கோவில் வாசலில் நடந்தது.

தமக்குப் பிறகு தம் பெண்டு பிள்ளைகள் எதிரிகளால் எவ்விதமான அவமானத்திற்கும் உள்ளாகக் கூடாதென்பது விசயராகவ நாயக்கரது கருத்து. மேலும், தமக்குப்

பிற்காலத்திலுங்கூடத் தம் மகள் சொக்கநாத நாயக்க ருக்கு மனைவியாகக் கூடாதென்பது அவருடைய எண்ணம். ஆகையால், அவர் போர்க்களத்திற் புகுவதற்கு முன் தமது அந்தப்புரத்திலுள்ள மாதர்களை எல்லாம் அரண்மனையில் ஓர் அறையில் ஒன்று சேர்த்துவைத்தார். தாமும் தம் மைந்தரும் சண்டையில் உயிரிழப்பதைவிடத் தங்களுக்கு வேறு வகையில்லை என்று கண்டால், உடனே ஓர் அடையாளம் காட்டுவதாகச் சொல்லியிருந்தார்; அப்பொழுது அவ்வறையிலிருப்பவர்களை எல்லாம் நெருப்பு வைத்துக் கொளுத்திவிடும்படியாக ஏற்பாடு செய்திருந்தார். அம்மாதர்கள் கத்திகளை உருவிக் கைகளில் பிடித்துக்கொண்டு, அவ்வறையில் அரசரது கட்டளையை எதிர் பார்த்து நின்றார்கள். சற்று நேரத்திற்குள் போர்க்களத்தி லிருந்து கொற்றவருடைய ஆணையும் வந்துவிட்டது. அவர்கள் ஒருவரையொருவர் வெட்டி வீழ்த்தி, தங்களுயிரை மாய்த்துக்கொண்டார்கள். அவர்களிருந்த கட்டடமானது வெடி மருந்திட்டு நெருப்பு வைத்துக் கொளுத்தப்பட்டது. அங்கிருந்த மாது சிரோமணிகள் ஒருமிக்கத் தீவாய்ப்பட்டு நீறானார்கள்.

இக்குழப்பங்கள் நடந்த காலத்தில் விசயராகவ நாயக்கருடைய குமாரர் மன்னாரப்ப நாயக்கருக்கு இள வயதுள்ள செங்கமலதாசு என்ற ஓர் ஆண் குழந்தை இருந்தது. அக்குழந்தையின் தாய், தன் அருமைக் குழந்தையையும் அருமையான நகைகளையும் தனக்கு அந்தரங்கமாயிருந்த ஒரு தாதியின் கையில் ஒப்பித்துக் குழந்தையைக் கேளாருடைய கண்ணுக்கெட்டாத தூரமான இடத்தில் கொண்டு போய் வளர்க்கும்படி சொன்னாள். அந்தத் தாதி குழந்தையை எடுத்துக்கொண்டு நாகப்பட்டினம் போய்ச் சேர்ந்து, யாரும் அறியாமல் ஒரு செட்டி வீட்டில் அந்தக் குழந்தையை வளர்த்து வந்தாள். அக்குழந்தை பன்னிரண்டு வயது வரையில் அங்கேயே வளர்ந்து வந்தது.

• கல்வி நிலை: விசயராகவ நாயக்கர் பாவலருடனும் நாவலருடனும், இசை வல்லாருடனும் அளவளாவித் தமது காலத்தை இனிது கழித்தார்; காஞ்சிபுரத்தினின்றும் பல அறிஞர்களைத் தம் நாட்டிற் குடியேற்றினர்.

கடவுட் கோட்பாடு: விசயராகவ நாயக்கர், மதுரமா வண்டு பாட மாமயில் ஆடும் தென்னரங்கம் மேய கொண்டல் வண்ணன் குரைகழல் நாடொறும் வணங்கும் கொள்கையினர்; ஒவ்வொரு நாளும் பன்னீராயிரவர் உணவு கொள்ளுமாறு ஊட்டுப்புரைகளில் ஏற்பாடு செய்திருந்தார். குலோத்துங்க விண்ணகரத்திலுள்ள தெப்பக்குளம், திருவிடைமருதூரிலும் திருமயிலாடு துறையிலும் உள்ள படித்துறைகள் ஆகியவற்றை இவர் கட்டினர்; திருவரங்க நாச்சியாரின் பொற்படிமம் ஒன்று செய்து, அழகிய மணவாளன் அமர்ந்துறை கோயிலில் எழுந்தருளுவித்தார்.

காலம்: விசயராகவ நாயக்கர் அரசு கட்டில் ஏறிய காலம் கி. பி. 1644-ஆம் ஆண்டு. கி. பி. 1673ல் போர்க்களத்தில் உயிர் நீத்தார். இவர் 29 ஆண்டுகள் இடையீடின்றி அரசு செலுத்தியவர்.

நாட்டினளவு: இராம சேது முதல் பழமலை வரையிலும் குணகடல் முதல் சிராப்பள்ளி வரையிலும் பரந்துள்ள இடங்கள் இவரது ஆட்சியில் அடங்கியிருந்தன.

முடிவுரை: இவர் தெய்வ நம்பிக்கை நிறைந்தவர்; அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்டகை; 'மானமிழந்த பின் வாழாமை முன்னினிது,' என்ற சீரிய கொள்கையினர்; நாட்டை அமைதியுடன் ஆண்டவர்; வெளி நாட்டினின்றும் தம் நாடு போந்த வணிகர்களுக்கு உதவிசெய்தவர்; தாராள மனப்பாங்குடையவர்; தம் நாட்டுக் குடிகளால் பெரிதும் நேசிக்கப்பட்டவர்.

குறிப்புரை

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

1. வான் - ஆகாயம், வளி-காற்று, ஒளி-தீ, ஊன்-உடம்பு (ஆகுபெயர்), கோன் - முதல்வன், யான் - அகப்பற்று, எனது - புறப்பற்று, கூத்தாட்டுவான் - கூத்தாடச் செய்பவன், நின்ருயை-நின்ற உன்னை (முன்னிலையொருமை வினையாலணையும் பெயர்).

2. பருதி-சூரியன், மேவிய-பொருந்திய, கருதியான்-எண்ணித் துதிக்கப்படுகிறவன், பிரிதியான் - கருணை உடையவன், சுருதி - வேதம்.

3. திருவாய்மொழி - மேன்மையான வாய்மொழிகளாலாகிய நூல் (கருவியாகு பெயர்); இது நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தில் ஒரு பகுதியாகும்.

மயர்வு - மயக்கம், அயர்வு - சோர்வு, அமரர் - தேவர், சுடர் அடி - ஒளி பொருந்திய அடி, எழல் - எழுக.

4. கணம் - பொழுது, விண் அமுதே - தேவாமிர்தம் போன்றவனே, அறுத்தல் - நீக்குதல்.

2. கலை மகள் வாழ்த்து

5. ஆய-பொருந்திய, ஏய-தகுதியாக, தூய-பரிசுத்தமான, உரு - திருமேனி, பளிங்கு - படிகம், இடர் - துன்பம்.

6. ஆடகன்-பிரமன், நா - நாக்கு, உறையும்-வாழும், அன்னமே - அன்னம் போன்றவளே, பாடகம் - பெண்கள் காலில் அணியும் ஒருவகை அணி, சிறுமை + அடி = சீறடி, பற்றினேன் - பிடித்தேன், அணங்கே - தெய்வப்பெண்ணே, கற்பகமே - வேண்டுவோர் வேண்டியபடி அளித்தருளும் கற்பகமரத்தைப் போன்றவளே, கா - காப்பாற்றுவாயாக.

3. தமிழ்த்தாய் வாழ்த்து

7. புலர்ந்தது - விடிந்தது, புன்மை இருள் கணம் - சிறிதாகிய் இருள் கூட்டம், தொண்டர் - தமிழன்பர், புகல்வது - சொல்வது, துயில்கின்றதோ - தூங்குகின்றதோ?

I—16

8. வான் ஆர்ந்த - வானமளாவிய, பொதியின் மிசை - பொதியமலையில் (இது பாண்டி நாட்டிலுள்ள மலை), மதி - சந்திரன், மன்னிய - பொருந்திய, மூவேந்தர் - சேர சோழ பாண்டியர், திருமாலின் குன்றம் - திருவேங்கடமலை, தென் குமரி - கன்னியா குமரி, ஆனாத - குறையாத, நூற்கடல் - உருவகம், அறைதல் - சொல்லுதல்.

II. அறவுரை

1. திருக்குறள்

1. கசடு - குற்றம் (ஐயம் திரிபுகள்), அதற்கு - அங்ஙனம் கற்ற கல்விக்கு, தக - பொருந்த.

2. கண் - அறிவாகிய கண், முகத்து - முகத்தில், புண் - ஊனக்கண்.

3. எல்லாம் - எல்லாப் பொருள்களையும், என் உடையர் எனும் - எல்லாப் பொருள்களையும் உடையவராயினும்.

4. இயல்பு - தன்மை, நீர் திரிந்து - நீரின் தன்மை வேறுபட்டு, அற்று ஆகும் - அந்த நிலத்தின் தன்மையதாகும், இனம் - (தாம் சேர்ந்துள்ள) கூட்டம்.

5. கருமம் - காரியத்தை, எண்ணி - (முடிக்கும் உபாயத்தை) யோசித்து, துணிக - தொடங்குக (வியங்கோள் வினைமுற்று), இழுக்கு - குற்றம்.

6. திருவினை - செல்வத்தை, முயற்று + இன்மை = முயற்றின்மை, முயற்று - முயற்சி, இன்மை - வறுமை.

7. எல்லா உயிர்க்கும் - எல்லா மக்கள் உயிர்க்கும், செய்தொழில் - பெருமை சிறுமைகளுக்குக் காரணமாகிய தொழிற்பகுதிகள் (வினைத்தொகை), வேற்றுமை - வேறுபாடு.

8. வாழ்வார் - வாழ்கின்றவர் (வினையாலணையும் பெயர்).

9. அற்றால் - (உண்ட உணவு) செரித்தால், அளவு அறிந்து - (பிறகு உண்கிறதைச் செரிக்கும்) அளவு அறிந்து, நெடிது - நெடுங்காலம், உய்க்கும் - கொண்டு செலுத்தும், ஆறு - வழி.

2. நீதி நெறி விளக்கம்

1. கற்றன - படித்த பொருள்களை (வினையாலணையும்பெயர்), ஓம்பாது - பாதுகாவாமல் (நினைவில் வைத்திராமல்), பரிந்து -

விரும்பி, கற்பான் - படிக்கும்பொருட்டு (பான் ஈற்று எதிர்கால வினையெச்சம்), கருந்தனம் - மிக்க செல்வம், உய்த்து - தாங்கிச் சென்று, எய்த்து - வருந்தி.

2. ஆக்கம் - செல்வம் (கல்வி, பொருள்), மீச் செலவு - வரம்பு கடந்த நடத்தை, நனி-மிகவும் (உரிச்சொல்), துலை-தராசு.

3. வியப்பிப்பான் - (பிறர்) நன்கு மதிக்கும்படி செய்ய முயல்பவன், தன் புகழ்தல் - தன்னைத்தானே புகழ்ந்துகொள்ளுதல், வளர்த்து அற்று - வளரச் செய்வதுபோலாகும், ஆல் - ஆதலால், வியவாமை - தற்புகழ்ச்சி செய்துகொள்ளாமையே, நயவாமை - விரும்பாதிருத்தல், வியவாமை, நயவாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்கள்.

4. சுட்டு - நன்கு மதிக்கப்படுதல் (முதல் நிலைத் தொழிற் பெயர்), யாண்டும் - எப்பொழுதும், மறவாமே - எதிர்மறை வினை எச்சம், நோற்பது - கடைப்பிடியாகக் கொள்ளத்தக்கது, சீர் - புகழ், தூற்றி - பிறரறியச் சொல்லி, சிறுமை - குற்றங்கள், புறங் காத்து - வெளிப்படுத்தாது மறைத்து.

5. நட்டு - நட்புக்கொண்டு, அகம் வேர்ப்பார் - மனம் புழுங்குவோர், நச்சு - விஷம் (நஞ்சு என்பதன் வலித்தல் விகாரம்), கழி - மிகுதி (உரிச்சொல்), கண்ணோட்டம் - தாட்சணியம், பொதிந்து - மறைத்து.

3. சோமேசர் முதுமொழி வெண்பா

1. கரந்தும் - (வாகுகன் வடிவாய் உண்மையுருவம் விளங்காமல்) மறைந்திருந்தும், தோன்றல் - மகன், உள் நெகிழ்ந்து - மனம் உருகி, அடைக்கும் - (பிறரறியாமல்) மறைத்து வைக்கின்ற, ஆர்வலர் - அன்புடையவர், புன்கண் நீர் - துன்பத்தால் விடும் கண்ணீர், பூசல் தரும் - பிறரறியத் தூற்றும்.

தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரமென்று கேட்டுவந்த இருதுபன்னனுக்குத் தேர்ப்பாகனாக வந்த நளன், குண்டின புரத்தில் தன் மக்களைக்கண்டு கண்ணீர் சொரிய இவன் நளனென்று அங்குள்ளவர் அனுமானித்தனர்.

2. தீயனவே - தீய சொற்களையே, தூயது அலா - பரிசுத்தமானது அல்லாத, ஆயின் - ஆராய்ந்தால், ஒல்லா - முடியா, தீய - தீய சொற்கள், வழுக்கியும் - தவறியும் (மறந்தும்).

பாண்டவர்கள் செய்த இராசசூய யாகத்தில் கண்ணன் அக்கிர(முதற்)பூசை பெற்றதைப் பொருத சிசுபாலன், கண்ணனை இகழ்ந்து பேசினன். கண்ணன் அதைப் பொறுத்ததுமன்றி, பழிமொழி யாதும் பகராதிருந்தனன்.

3. போசன் - போஜராஜன், கவிஞர் - பாவலர், பரிந்து - விரும்பி, போத அளித்து - மிகக்கொடுத்து, தூசு இலா - குற்றமில்லாத, கீர்த்தி - புகழ், இசைபட வாழ்தல் - புகழுண்டாக வாழ்க, ஊதியம் - பயன்.

மாளவ தேசத்திலுள்ள தாரா நகரத்திலிருந்து அரசாண்ட போசன், தன்னையடுத்த காளிதாசர் முதலிய ஒன்பது வடமொழிப் புலவர்களுக்கும் பிறருக்கும் மிக்க பொருள் வழங்கி, அவர்களாற் புகழப்பட்டு வாழ்ந்தான். சிலர் கூறிய அரிய கவிகளைக் கேட்டு வியந்து, எழுத்துக்கு இலட்சம் பொன் வீதம் பரிசளித்தான் என்பர்.

4. பல்லவர் கோன் - பல்லவ அரசன் (மகேந்திர வர்மன்), தொல்லை நெறி வாகீசர் - பழமையான வழியில் சென்ற திருநாவுக்கரசு நாயனர், இணர் எரி - பெரிய நெருப்பு, தோய்வு அன்ன- தோய்ந்தாற்போன்ற, இன்னு - துன்பங்கள், வெகுளாமை புணரின் - கோபியாதிருத்தல் கூடுமானல்.

சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்குச் சென்ற திருநாவுக்கரசருக்குச் சமண அரசனுகிய மகேந்திரவர்மன் பொறுக்கலாற்ருத பல துன்பங்களை இயற்ற, அவற்ருல் திருநாவுக்கரசர் ஒரு சிறிதும் துன்பமடையாதவராயிருக்க, அதனுல் உண்மை அறிந்த பல்லவன் அவரை அடைந்து வணங்கிச் சைவ சமயத்தை மேற்கொண்டான்.

5. வேந்துமகன் - மனுச்சோழன் மகனுகிய வீதி விடங்கன், ஆய்ந்து - ஆராய்ந்து, நீப்பினும் - நீங்கிப்போனுலும், பிறிது இன்னுயிர் - வேருென்றனது இனிய உயிரை.

திருவாரூரிலிருந்து அரசாண்ட மனுநீதிச்சோழன் மகனுகிய **வீதிவிடங்கன்** ஒரு நாள் தேரூர்ந்து செல்லுங்கால் ஒரு பசுவின் கன்று துள்ளி வந்து தேர்க்காலிடைப் புகுந்து இறந்தது. அச்செய்தி அறிந்த அரசன் தன் மகனைத் தேர்க்காலிலிட்டுக் கொல்லுமாறு மந்திரிக்குக் கட்டளையிட, அவன் அங்ஙனம் செய்வதற்கு மனந்துணியாமல் தானே உயிர் விட்டான்.

4. சிறுபஞ்ச மூலம்

1. சிலம்பி - சிலந்திப் பூச்சி, சினை - முட்டை, கூற்றம் - இயமன் (காரணப் பெயர்), கோடு - கொம்பு, வலம்படாமா-(பிற விலங்குகளை வெல்லும்) வலிமை உண்டாகாத கவரிமான், ஞெண்டு - நண்டு, பார்ப்பு - குஞ்சு, நன்று + அல் + வசை = பழி மொழிகள்.

2. பிழைத்தல் - தவறுதல், இழைத்த - செய்த, பல்பொருளார் - செல்வர், பகை, நகை - முதல்நிலைத் தொழிற்பெயர்கள், பெருமை, சிறுமை—பண்பாகு பெயர்கள்.

3. தேருங்கால் - ஆராய்ந்து பார்க்கும்பொழுது, பூதரே - பசாசரேயாவர், ஆதர் - அறிவில்லாதவர், வனப்பு - அழகு.

4. வெளவன்மின் - கவராதீர்கள் (முன்னிலைப் பன்மை வினைமுற்று), கருங்குணத்தார் — தீக்குணத்தார், கேண்மை - நட்பு, கழிமின் - நீக்கிவிடுங்கள், ஒருங்கு உணர்ந்து - எல்லாமறிந்து, காமின் - காத்துக்கொள்ளுங்கள், காலன் - இயமன், திண்ணிதே - உறுதியானதே, வழக்கு - உலக வழக்கு.

5. குணன் - குணம் (கடைப்போலி), அடங்க - முழுவதும், கணன் - நூல் தொகுதி (கடைப்போலி).

5. அறநெறிச் சாரம்

1. காய்தல் - வெறுத்தல், உவத்தல் - மகிழ்தல், ஆய்தல் - ஆராய்தல், உற்ற - பொருந்திய.

2. தன் + புகழ = தற்புகழ், அலர் கதிர் ஞாயிற்றை - பரந்த கிரணத்தையுடைய சூரியனை, அச்சு ஆணி - (தேர் முதலியவற்றின்) கடையாணி.

3. கல் நின்று உருக - நின்ற கல்லும் உருகும்படி, கலந்து-மனங்கலந்து, இழித்து உரைக்கும் - இகழ்ந்து பேசும், சான்றோரை - குறிப்பு மொழி (புறங் கூறுவோராகிய கயவரைக் குறித்தது), இமையார் - கண்களை மூடித் திறவாதவராய் (தேவர்கள் கண்கள் இமைப்பதில்லை என்பது ஈண்டறியத்தக்கது), இது தற்குறிப்பேற்றம்.

4. கட்டு - பறித்து, அட்டி - சொரிந்து, கதிர் - நெற்கதிர், பைங்கூழ் - பசுமையான உணவு, சிறுகாலை - இளவயதிலே.

5. எந்தை - எம் தந்தை (மரூஉ), எம்மை - எமது தாய், எம்பி - எம் தம்பி.

6. பழமொழி

1. ஆற்றவும் - மிகவும், நால் + திசை - நாற்றிசை, செல்லாத - (சொல்) செல்லாத, தமவே - தம்முடைய நாடுகளே, ஆறு + உணு = ஆற்றுணு - வழிப்பிரயாணத்திற்கு உதவும் உணவு.

2. பிறிதுழி - வேருேரிடத்தில், கிணறு அகத்து - கிணற்றினுள், தேரை - தவளை, ஆகார் - ஒழுகாதவராய் (முற்றெச்சம்), கணக்கு - நூல், முனியாது - வெறுக்காமல்.

3. உரைமுடிவு-உரைத்துக்கொண்ட வழக்கினது வார்த்தையின் முடிவை, காணுன் இளமையோன் - கண்டறியக் கூடாதவனுன இள வயதுடையவன், என்ற - என்று இகழ்ந்து கூறிய, நரை முதுமக்கள் - நரை மயிருள்ள கிழவர்கள், நரை முடித்து - (நரை மயிரில்லாதிருந்தும்) நரைமயிராலாகிய முடியை(ச் செய்து) தலையில் தரித்து, சொல்லால் - வழக்குரைத்தவர்களுடைய சொற்களைக்கொண்டே, முறைசெய்தான் - நீதி வழங்கினுன், சோழன்-கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழவரசன், குலவிச்சை - குலத்துக்குரிய வித்தைகள், பாகம் படும் - செம்பாகமாக அமையும்.

4. இறப்ப - மிகவும், இன்ன - துன்பம் தருவன, மாண்டார் - (குடிப்பிறப்பினுல்) மாட்சிமைப்பட்டவர் (வினையாலணையும் பெயர்; மாண் - பகுதி), வெகுளார் - கோபியார் (எதிர்மறை வினை முற்று), திறத்து உள்ளி - பலவகையாக விசாரித்து, விறகின் - விறகினுல், அடினும் - காய்ச்சினுலும், நனி-உரிச்சொல்.

5. தகவு - தகுதி, கரி - சாட்சி, கைகுறைத்தான் - கையை வெட்டினுன், தென்னவன் - பாண்டியன், மாணு வினை - தீவினை.

பொற்கைப் பாண்டியன் என்பவன் தான் செய்த தவற்றுக்காகத் தன் கையை வெட்டிக்கொண்டான் என்பது கதை.

7. நாலடியார்

1. அடக்கம் - ஐம்பொறிகளை அடக்குதல், கிளை - வளரும், ஒறுக்கும் - வெல்ல வல்ல, மதுகை - வலிமை, உரன் - அறிவு வலிமை, கொடை, பொறை - தொழிற்பெயர்கள்.

2. இசையா - (கொடுத்தற்கு) இயலாத, வசை அன்று - பழிப்பு அன்று, நசை - ஆசை, அழுங்க - வருந்த, பொய்த்தல் - பொய் சொல்லல், நிரை தொடீஇ - வரிசையாக அணிந்த வளை

யல்களையுடைய பெண்ணே (வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), கொன்றாரில் - அழித்தவரைப் போல.

3. தக்கார் - தகுதியுள்ளவர் (பெரியோர்), தக்கவரல்லார்- தகுதி இல்லாதவர் (சிறியோர்), நீர்மை - தன்மை, குன்றல் - குறைதல், அக்காரம் - சர்க்கரை, கையாது - கசக்காது.

4. கேண்மை - நட்பு, நந்தும் - வளரும், ஊர் - ஊர்ந்து செல்லுகின்ற, மதியம் - சந்திரன், வைகலும் - நாள்தோறும், தொடர்பு - நட்பு.

5. இம்மை - இவ்வுலக இன்பம், பயக்கும் - கொடுக்கும், ஈய - கொடுக்க, விளக்கும் - (அறிவினால்) விளங்கச் செய்யும், தாம் உளர்ஆ - தாம் உயிருள்ளவராக வாழுமளவும், எம்மை உலகத்தும் - எவ்வுலகத்திலும், மம்மர் - மயக்கம், அறுக்கும் - போக்கும்.

6. களர் நிலம் - உவர் நிலம், சான்றோர் - பெரியோர், விழுமிது ஆ(க) - சிறப்புடையதாக, கடை நிலத்தோர் - தாழ்ந்த குலத்திற் பிறந்தோர், தலை நிலம் - முதலிடம்.

7. ஒழுகின் - நடப்பாராயின், தலைப்படுவர் - உண்டாகப் பெறுவர், தொல் - பழைமை, ஒள் நிறம் - விளக்கமாகிய நிறம், புது + ஓடு = புத்தோடு - புதுமையாகிய ஓடு (பானை), பயந்த ஆங்கு - கொடுத்தாற் போலும்.

புதுப்பானையில் பாதிரியின் பேரரும்புகளைப் பெய்து அவை நன்கு மலர்ந்த பிறகு மலர்களை நீக்கி, அப்பானையில் நீர் வார்த்து மணம்பெற்ற அந்நீரைக் குளிக்கவும் குடிக்கவும் உபயோகப்படுத்துவதுண்டு.

8. அளாய - கலந்த, தேரின் - ஆராய்ந்தால்.

9. மறு - குற்றம், இனத்தால்-தீய இனத்தாரால், புனத்து- வனத்தில், வெறி கமழ் - நறு மணம் வீசுகின்ற, வேங்கை - வேங்கை மரம், வேம் - வேகும், எறி புனம் - வெட்டிய காடு (வினைத்தொகை), தீப்பட்டக்கால் - தீப்பட்டால்.

10. சொல் அளவு அல்லால் - சொல்லும் அளவு அல்லாமல், ஆள் வினை - முயற்சி, குலம் ஆகும் - குடிப்பிறப்பின் மேன்மை உண்டாகும்.

III. தொடர் நிலைச் செய்யுள்

1. நளவெண்பா

1. காமர் - அழகிய, கயல் - சேல்மீன், காவி - நீல மலர், முகை - மொட்டு, தளை - கட்டு, பூ மடந்தை - செந்தாமரை மலரில் எழுந்தருளியுள்ள பெண் (இலக்குமி), நாட்டம் - கண் (காரணப் பெயர்), சாகரம் - கடல்.

2. தாமரையாள் - இலக்குமி, வைகும் - தங்குகின்ற, தடந்தோள் - பெரிய தோள் (உரிச்சொற்றொடர்), காமர் + உ - உகரம் சாரியை, தார் - மாலை. இச்செய்யுளில் மாவிந்தநகரத்திற்குச் சந்திரன் சுவர்க்கியினுடைய முரணை நகரை ஒப்பிட்டிருத்தலால், புகழேந்திப் புலவரின் நன்றியறிவு புலனாகும்.

3. வாங்கு - வளைந்த, வளை - வளையல், வதனமதி - முகமாகிய சந்திரன் (உருவகம்), தேன் ஆடி - தேனில் மூழ்கி.

4. நீள் நிறம் - நெடுந்தூரத்திலும் விளங்குகின்ற தனது இறகின் வெண்ணிறம், நீடிய - நீண்ட, தாள் நிறம் - கால்களின் சிவந்த நிறம், நிறம் - மார்பு, அப்பு உள் - நீரில், முளரி - தாமரை (காரண இடுகுறிப் பெயர்), தலை - ஏழனுருபு, புள் - பறவை.

5. மடம் - இளமை, மேதிக்குலம் - எருமைக் கூட்டம், கோதி - தின்று, கங்கை நீர் நாடன் - நளன்.

6. ஆயிழையார் - ஆராய்ந்து எடுத்த ஆபரணங்களை யணிந்த பெண்டிர், மலங்கிற்று - வருந்தியது, வான் கிளை - பெரிய சுற்றம், கிளை - உவமையாகு பெயர்.

7. அஞ்சல் - பயப்படாதே, வஞ்சி அனையார் - வஞ்சிக் கொடி போன்ற பெண்டிர், விஞ்சியது - மேலானது.

8. நாற்குணம் - நான்கு குணங்கள் (அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு), நாற்படை - நால்வகைச் சேனை (யானை, குதிரை, தேர், காலாள்), ஐம்புலன் - ஐந்து புலன்கள் (மெய், வாய், கண், மூக்கு, செவி), புலன் என்பது ஈண்டு பொறிமேல் நின்றது, ஆர்க்கும் - ஒலிக்கும், சிலம்பு - பெண்கள் கால் அணி.

9. கன்னி - தமயந்தி, நன்னுதல் - நல்ல நெற்றியை உடைய தமயந்தி (பண்புத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை), தன் + ஆடல் - தன் விளையாட்டு, என் + நாடல் - என்னுடல், நாடல் - தேடிவந்த பொருள் (தொழிலாகு பெயர்).

10. செம்மனம் - நடு நிலையான மனம், தண் அளி - குளிர்ந்த அருள், மேல் + நிலம் - மேனிலம், நால் + நிலம் = நானிலம் - நான்காகிய நிலங்களையுடைய பூமி (முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்).

11. வாவி உறையும் - குளத்தில்வாழும், அளித்தாய் ஆதி - கொடுத்தாய் ஆகிறாய், கா - சோலை, தேர்வேந்தற்கு - நளனுக்கு, பார்வேந்தன் - வீமராசன், பாவை - பதுமை போன்ற தமயந்தி (உவமையாகு பெயர்).

12. சுயம் வரம் - ஒரு பெண் தானே ஒருவனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்தல், அறைக - அடித்துத் தெரிவிக்க, இயம்பினான் - சொன்னான், பைங்கமுகு - பசுமையான பாக்கு மரம், கூந்தல் - மடல், கங்கைக் கொழுந்து - கங்கை நீர்த்துளி.

13. காவல் குடை வேந்து - நளன், கண் உற்று - பார்த்து, விண்ணவர்கோன் - இந்திரன், இசை - உடன்படு, நேர்ந்தான் - உடன்பட்டான், மற்று - அசை, அதனை - இந்திரன் சொல்லியதை, ஓராது - ஆராயாமல்.

14. தேமாலை - நறு மணமுள்ள மாலை, தூது ஆக - தூதுவனாய்ச் செல்வாயாக, கோ - அரசன், தோகை - மயில்போலும் சாயலையுடைய தமயந்தி, ஆகம் - மனம், கோது ஆக - கோது போல தனக்குப் பயனில்லாத பொருளாக.

15. வார் - நீண்ட, வச்சிரத்தால் - வச்சிராயுதத்தால், மால் வரை - பெரியமலை, பொற்றோளான் - இந்திரன், பாண் நாறும் - இசை தோன்றுகின்ற.

16. கன்னிமாடம் - கன்னிப் பெண்கள் வசிக்குமிடம், விஞ்சைக்கு இறைவனே - மந்திரங்களுக்குத் தலைவனாகிய வித்தியாதரனே, உள்ளவாறு - உள்ளபடி, குழை - குண்டலம், வாள் நீர் - வாள்போன்ற கண்ணினது தன்மை, சோரவிட்டு - விழும்படி விட்டு.

17. பொன்னுலகம் - தேவருலகம், புரவலன் - இந்திரன், தொடை - மாலை, தும்பி - வண்டு, ஊட்டுவான் - நளன்.

18. போது - தாமரை மலர் போன்ற, அரி - (சிவந்த) கோடுகள் படர்ந்த, ஆதரித்தார் - விரும்பினவர்கள் (அரசர்கள்: வினையாலணையும் பெயர்), அவையகத்து - சபையினிடத்து (சுயம்வர மண்டபத்தில்), தரளம் - முத்து.

19. விண்ணவர் - தேவர், நண்ணு புகழ் - வினைத்தொகை, மீண்டு - திரும்பி வந்து.

20. அங்கி - நெருப்பு, அமுதம் - சோறு, வேண்டினை - விரும்பினையோ, சங்கை அற - சந்தேகமில்லாமல், ஆகண்டலன் - இந்திரன், தருமன் - எமதருமன், மற்றோன் - தீக்கடவுள்.

21. வான் - உயர்ந்த, கருப்புவில்லி - கரும்பு வில்லையுடைய மன்மதன் (கருப்பு - வலித்தல் விகாரம்), கணை - அம்பு.

அந்திப் பொழுது வந்ததை சங்க முழக்கம் முதலிய சிறப்புடன் அரசன் பவனி வருவதுபோல ஆசிரியர் உருவகப்படுத்தினர்.

22. கொற்றம் - வெற்றி, வரை செறந்த - மலையையொத்த, விரை - நறுமணம், துவள - அசைய, தயங்க - விளங்க, வால் வளை - வெண்மையான சங்குகளின் ஒலி.

23. விழித்தாமரை-உருவகம், பொன்னின் - இலக்குமியைப் போன்ற, மடப்பாவை - இளமைப்பருவமுடைய தமயந்தி, மின்-மின்னல், பொய்கை - குளம்.

24. இன்ன பரிசு - இப்படிப்பட்ட தன்மையுடையன, இயல் அணங்கு - நற்குணம் பொருந்திய ஒரு தோழி, தார் வேந்தன்- வீமன், தனிக்கொடி - ஒப்பில்லாத கொடிபோல்பவள் (தமயந்தி).

25. தெரியில் - (நீ) அறிய வேண்டின், மொட்டை - அரும்பை, அரவின் - பாம்பினது, பிள்ளைக்குருகு - குஞ்சாகிய அன்னம், பேதைப்புள் - பெண் பறவை.

26. துயில் – தூக்கம், அம் - அழகிய, கூன் இரும்பு - அரிவாள், தேன் இருந்த - இனிமை பொருந்திய.

27. நெடு - பெரிய, ஏகும் - போகின்ற, கழை - மூங்கில், கோதயார் - பெண்டிர், ஏய்க்கும் - ஒக்கும், கோதை - கூந்தல்.

28. சேடி - தோழி, ஈரிருவர் தேவர் - நால்வர் தேவர் (இந்திரன், வருணன், எமன், அக்கினி), பூவரைந்த - மலர்களை அணிந்த, குழல் - கூந்தல், காணு நின்று - பார்த்து, ஊசலாடு உற்றாள் - ஊசல் ஆடுதலைப் பொருந்தினாள்.

29. கண் இமைத்தலால் - கண்கள் இமை கொட்டலாலும், காசினி - பூமி, தோய்தலால் - படிதலாலும், வண்ணம் - அழகிய, நறுந்தாமரை விரும்பும் நன்னுதல் - இலக்குமி, நன்னுதல் - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை, அன்னாள்- தமயந்தி.

தேவர்களுக்குக் கண் இமைக்காது ; கால் பூமியில் படியாது; அவர்கள் மாலையிலுள்ள பூக்கள் வாடமாட்டா என்பர்.

30. விண் அரசர் - தேவர், வெள்கி - வெட்கமடைந்து, சுளிக்க - சினங் கொள்ளவும், கண் அகல் - இடம் அகன்ற, ஞாலம் - இடவாகு பெயர், வன்மாலை - வலிய மயக்கம், வயம் - வெற்றி, பொன் - திருமகளைப் போன்றவளாகிய தமயந்தி (உவமை யாகு பெயர்).

2. கம்ப ராமாயணம்

1. அந்நகர் - அவ்வயோத்தி நகரம், அமலை - ஆரவாரம், பொன்நகர் - தேவருலகம், பொலியும் - விளங்கும், எல்வையில் - காலத்தில், இழைத்த - (முற்பிறப்பிற்) செய்த, துன்ன அரும் - அடைதற்கரிய, கூனி - மந்தரை.

2. ஊன்றிய - நிலை நின்ற, உளைக்கும் - வருந்துகின்ற, கான்ற - கக்குகின்ற, நயனம் - கண், கதிக்கும் சொல் - தடுமாறு கின்ற பேச்சு, ஓர் இடுக்கண் - ஒப்பில்லாத துன்பம்.

3. தொண்டை வாய் - கொவ்வைக் கனி போன்ற வாய் (உவமைத் தொகை), கேகயன் தோகை - கைகேயி, தோகை - உவமையாகு பெயர், மண்டினுள் நெருங்கினுள், இராகவன் - இராமன், பாணி - கை, உள்ளுவாள் - நினைத்து (முற்றெச்சம்).

4. படு - உண்டாகிற, நளினம் - தாமரை, திரை - அலை, பவளவல்லி - பவளக்கொடி, அளி - கருணை, அணைமேற் கிடந் தாள் - கைகேயி.

5. ஏடு அவிழ் நொய்து அலர் தாமரை - இதழ்கள் அவிழ் கின்ற மென்மையான தாமரை, சீறடி - சிறிய பாதங்கள், காலக் கோள் அன்னுள் - உற்பாத காலத்தைக் குறிக்கத் தோன்றும் தீய கிரகத்தைப் போன்றவளாகிய கூனி.

6. அனந்தர் - தூக்கம், நீங்குகிற்றிலள் - நீங்கப் பெற்று ளில்லை, கட்டுரை - கட்டிப் பேசும் சொல், சொல்லல் மேயினுள் - சொல்லத் தொடங்கினுள்.

7. அணங்கு - துன்பஞ் செய்கின்ற, வாள் விட அரா - கொடிய விஷமுடைய பாம்பு (இராகு), அணுகும் எல்லையும் - சமீ பிக்கும் வரையினும், பிணங்குவான் - வருந்தும்படி, பிணிக்க நண் ணவும் - கட்டச் சமீபிக்கவும், உணங்குவாய் அல்லை - வருந்து வாய் அல்லை.

8. தெவ் அடு சிலை - பகைவரை அழிக்கின்ற வில், செவ்வியர் - சுகமாயிருக்கின்றனர், திறம்பலர் - தவறுமலிருக்கின்றனர், அடுப்பது - நேர்வது, ஈண்டு - இப்பொழுது.

9. பராவ அரும் - புகழ்வதற்கரிய, பயக்க - பெறுவதனுல், உராவ அரும் - வருவதற்கரிய, உறுதி - நன்மை, விராவரும் புவி - (ஐம்பூதங்களின்) சேர்க்கையினுல் உண்டாகிற பூமி, அன்ன - ஒத்த, பயந்த - பெற்ற, எற்கு - எனக்கு.

10. அனைய - அப்படிப்பட்ட சொற்களை, நிகர் - சமானமான, திரு - செல்வம், வீய்ந்தது - அழிந்தது, மதி - புத்தி.

11. அன்னவள் - கூனி, ஆயிழை - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையுடைய கைகேயி (வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), பன்ன அரும் - புகழ்வதற்கரிய (அகரம் தொகுத்தல் விகாரம்), பார் - பூமி.

12. ஆடவர் - வீரர், மாசுஉற - குற்றமடைய, தையல்-பெண், பட - இறக்கும்படி, கோடிய - வளைந்த, வரி சிலை - கட்டமைந்த வில், கோ முடி - அரசர்க்குரிய கிரீடம்.

13. மாற்றம் அஃது - அச்சொல், மங்கை - கைகேயி, ஆற்றல் சால் - பெருமை மிகுந்த, ஆல் - ஆதலால், வீரன் தாதை - இராமன் தந்தை (தசரதன்), புக்கு - புகுந்து.

14. ஆய - உண்டாகிய, அளக்கர் - கடல், ஆர்த்து - ஒலித்து, முகமதி - முகமாகிய சந்திரன் (உருவகம்), தேசுஉற - ஒளி விளங்க, தூயவள் - கைகேயி, உவகை - மகிழ்ச்சி, சுடர்க்கு எல்லாம் - (சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று) சுடர்களுக்கெல்லாம், நாயகம் - தலைமை, நல்கினுள் - கொடுத்தாள்.

15. தெழித்தனள் - இரைந்தாள், உரப்பினள் - அதட்டினுள், உக - சிந்த, வெய்து உயிர்த்தனள் - வெப்பமாகப் பெருமூச்சு விட்டாள்.

16. வெகுண்டு - கோபித்து, பித்தி - பைத்தியக்காரி, சேய்-பிள்ளை (பரதன்), மாற்றவள் - கோசலை, ஆள்செய்ய - அடிமை செய்ய, தரிக்கிலேன் - பொறுக்கமாட்டேன்.

17. கரிய செம்மல் - இராமன், நிவந்த - உயர்ந்த, அவந்தனுய் - வீணுய், உவந்த ஆறு - மகிழ்ந்த காரணம், என் - யாது?

18. பாக்கியம் - நல்வினை, பொலன் கழல் - பொன்னுற்

செய்த வீரக்கழல், தேக்கு - தேக்க மரங்கள், கல் அதர் - மலையைச் சேர்ந்த பெருவழி, சேண் - தூரம், போந்தது - வந்தது.

19. துயர்க்கடல் - உருவகம், உணர்தியோ - உணர்வாயோ?

20. கயப்பு உற - கசக்கும்படி, காய் கனல் தலை - எரிகின்ற நெருப்பில், கதம் - கோபம், நோக்கினள் - பார்த்து, சொல்லும் - சொல்லுவாள் (செய்யுமென் வாய்பாட்டு வினை முற்று).

21. நல்லை - நன்மை செய்பவள், மனக்கு - மனத்திற்கு.

22. திறம்பினும் - மாறுபடினும், செய்தவம் - வினைத்தொகை, செயிர் - குற்றம், வரன்முறை - (குலத்தினது) ஒழுங்கு.

23. போதி - போவாய் (முன்னிலை ஒருமை ஏவல் வினை முற்று), புன்பொறிநா - அற்பப்பேச்சுப் பேசும்பொறியாகிய புல்லிய நாக்கை, சேதியாது - அறுத்து எறியாமல், இது - இந்தக் குற்றத்தை, நினைந்தாய் ஆதி - நினைத்துச் சொன்ன குற்றத்திற்கு உள்ளாவாய்.

24. தீர்கிலாது - நீங்காமல், நலிந்தது என்ன - வருத்தியது போல, தஞ்சமே - பற்றுக்கோடாய் இருப்பவளே, உறு பொருள் - வரும் காரியங்கள், உணத்துகை - அறிவித்தல், தவிரேன் - நீங்கேன், வஞ்சிபோலி - வஞ்சிக் கொடி போல்பவளே.

25. உலகம் காத்த மன்னன் - தசரதன், கடல் வண்ணன் - கடல்போன்ற கரிய நிறத்தையுடைய இராமன், நீள்முடி - பெரிய கிரீடம், புனைவதற்கு - சூடுவதற்கு, இசைந்தனன் - சம்மதித்தான், மீதரும் - மேன்மை தருகின்ற, எவனோ - எங்ஙனமோ?

26. பிறிது ஆம் - வேறாகும், மறம் - கொடுமை, வலிகிலர் - துன்பப்படுத்தாதவர், இறல் உறும்படி - துன்பப்படும்படி.

27. தூண்டும் - (இரக்குமாறு) ஏவுகின்ற, இருநிதி - மிக்க செல்வம், ஈதியோ - கொடுப்பாயோ, விம்மல் - வருத்தம்.

28. கிளர் நீர் உடுத்த பாரகம் - விளங்குகின்ற கடலை ஆடையாக உடுத்த பூமி.

29. செப்பலும் - சொன்னவுடனே, தேவி - கைகேயி, இமையோர் - தேவர், ஆய - அறவோர் ஆகிய, திரிந்தது - மாறிற்று.

30. கைகயன் அன்னம் - கைகேயி, அன்னம் - உவமை ஆகு பெயர், விரும்பினள் - விரும்பி (முற்றெச்சம்), புகலுதி - சொல்லுவாய்.

31. நளிர்மணி - குளிர்ந்த முத்து, தோடு இவர்ந்த தார் - பூவிதழ்கள் நெருங்கிய மாலை, சம்பரன் - சம்பராசுரன், ஆடல்

வென்றியான் - போரில் வெற்றியையுடைய தசரதன், கோடி - கொள்வாயாக, கோடிய - கோணிய.

32. ஏழிரு பருவங்கள் - பதினான்கு ஆண்டுகள், திரிதர - அலையும்படி, செய்தி - செய்வாயாக, மகன் + கு = மகற்கு.

33. நிரைத்த - வரிசையாக இழைக்கப்பட்ட, நிதி - செல்வம், வேலை - கடல், தணியா - மகிழ்ந்து.

34. நம்பியை - பரதனுக்கு (உருபு மயக்கம்), நளிர் முடி - பெருமையுடைய கிரீடம், துன்றுகானம் - நெருங்கியகாடு (வினைத் தொகை), துரத்தல் - ஓட்டுதல், பொன்றி - இறந்து, நீங்குதல் புரிவேன் - ஒழிவேன்.

3. குசேலோபாக்கியானம்

1. திறல் இயை தவம் - ஆற்றல் அமைந்த தவ ஒழுக்கம், உறல் இயை - பொருத்தம் அமைந்த, செய்பாக்கு - செய்ய (பாக்கு - வினையெச்ச விகுதி), அறல் இயை கதுப்பினாள் - கருமணலை ஒத்த கூந்தலையுடையவள் (சுசீலை), வதுவை - திருமணம், சென்னி - தலை, தாளோய் - பாதங்களை உடையவனே.

சுகர் என்னும் முனிவர் பரீட்சித்து என்னும் அரசனுக்குப் பாகவதக் கதைகளைக் கூறிக்கொண்டு வருகிறவர், குசேலர் வரலாற்றைக் கூறத் தொடங்கி, அவ்வரசனை விளித்துக் கூறுகிறார்.

2. கொண்கன் - கணவன், நீராள் - தன்மை உடையவள், தேசு உறு - புகழ் மிகுந்த.

3. மலையிட்ட - மலை போன்ற (இடு - உவமவுருபு), அலை இட்ட - நீரில் தோன்றிய, அலை - சிலையாகுபெயர், முள் + தாள் = முட்டாள் - முட்களையுடைய தண்டு, செய்ய அம்புயம் - செந்தாமரை, அம்புயத்து உறைவோன் - பிரமன், ஓர் ஏழ் தலையிட்ட இருபான் மைந்தர் - இருபத்தேழு புதல்வர், தடந்தோள் - பெரிய தோள் (உரிச்சொற்றொடர்).

4. இரு நிலத்து-பெரிய பூமியில், ஒருவிய-நீங்கிய, அருகிய-சிறிதாகிய, நீவாரம்-காட்டுநெல் (முனிவர் உணவாகக்கொள்வது)

5. மெல்லியல் - மென்மையான தன்மையுடையவள் (சுசீலை: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை), அதிதி - விருந்தாளி, அயின்று - உண்டு, தவல் அரும் - கெடுதல் இல்லாத, மலரடி - உவமைத் தொகை.

6. மகவு - பிள்ளை, பொருமி - விம்மி.

7. சேய் - பிள்ளை, மிசைய - உண்ண, முடுகி ஈர்ப்ப - விரைந்து இழுக்க, நந்தா - பின்னிடாத, நயக்கும் - விரும்பும்.

8. கலாம் - கலகம், நனி - மிகவும் (உரிச்சொல்), மை வண்ணம் - கருநிறம், வெரிந் - முதுகு, தைவந்து - தடவி, ஆம்பல் - செவ்வல்லி மலர், அவ்வண்ணம் - அழகிய நிறம்.

9. சிறுன் - சிறுவன், அட்டார் - சமைத்தார், தொடுத்து - தொடர்ந்து.

10. பக்கணம் - தின்பண்டம், வார - வடிய.

11. சுட்டி - நெற்றிச் சுட்டி என்னும் ஆபரணம், புண்டரிகம் - தாமரை மலர், கரை மதலை - அழுகின்ற குழந்தை, எண்தப - அளவு கெட.

12. சித மணி - பாசி மணி, பூண் - ஆபரணம், வெறிய - நறுமணமுள்ள, பொழில் - சோலை, கலம் - பாத்திரம்.

13. மிடியென்னும் பெருங்கடல் - வறுமையாகிய பெருங்கடல் (உருவகம்), அலர் - பழி தூற்றல், துவ்வாமை - பட்டினி.

14. யாதவர் - யதுகுலத்தவர், அதிபன் - அரசன், இணை இல் - ஒப்பில்லாத, மாதவன் - கண்ணன், கலைக்கடல் - உருவகம், வாய்மடுத்தனை - குடித்தாய் (கற்றுப்), வகுப்பார் - (உலகத்தார்) சொல்லுவர், பீதாம்பரன் - பொன்னுடையுடையவன் (கண்ணன்), மருங்கு - பக்கம், செல்லல் நோய் - துன்பப்பிணி.

15. மலை துணை தே - மலை அளவான பெருமையையுடைய தெய்வம் (கண்ணன்), மதி - சந்திரன், முழுமுதல் - கண்ணன், கையுறை - காணிக்கை.

நல்ல கணவன் வாய்க்கவேண்டுமென்று தமது மூன்றானையில் சிறிது நூலிழையைப் பறித்து இட்டுப் பிறைச்சந்திரனை வணங்குதல் கன்னிப் பெண்களது மரபாகும்.

16. கொழுநர் - கணவர், உபவாசம் - விரதம், மாமுனிவன் - குசேலன், நலக்க - நன்மையுண்டாக, தூன்றிய - மிகுந்த, அறலின் நனைத்து - நீரில் நனைத்து.

17. கறை - உரல், கரிசு - உமி, நேடி - ஆராய்ந்து, பவம் - பிறவி, கண்டோன் - குசேலன் (வினையாலணையும் பெயர்).

4. பாரதம்

1. புரோகிதன் - உலூகமாமுனிவன், புயங்க கேது - பாம்புக்கொடியையுடைய துரியோதனன், விரோசனன் சுதன் - சூரி

யன் மகன் (கன்னன்), கங்கா சுதன் - கங்கையின் மகன் (வீடுமன்), சரோருக சதனம் - பிரம சபை.

2. திகிரி - ஆஞ்ஞா சக்கரம், அடைவினில் - முறையே, காயம் - உடம்பு, துவரை - துவாரகாபுரி (மரூஉ).

3. எழில் - அழகு, எழிலி - மேகம், மீண்டு போகு - திரும்பிப் போய்விடு, வியன் - பெரிய, குடுமி - உச்சி, காண் + தகு = காண்டகு - காணுதற்குத் தக்க (மிக அழகிய), பதாகை - கொடி. இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அணி.

4. அருள் குடியிருக்கும் கண்ணுன் - கண்ணன், தரணி - பூமி, பரமம் மா ஞானம் - மேலான சிறந்த தத்துவ ஞானம், பதி - (பதவியாகிய வைகுண்ட) நகரம், சித்து - ஆன்மா, அசித்து - உடல், உணர்விலாதான் - துரியோதனன் (குறிப்பு வினையாலணையும் பெயர்).

5. வந்தமை - காலங்காட்டுந் தொழிற்பெயர், அந்தன் - குருடன் (திருதராட்டிரன்), மதலே - பிள்ளே, அந்தன் மாமதலே - துரியோதனன், அழைமின் - முன்னிலேப்பன்மை ஏவல் வினை முற்று, சந்திரன் - சந்திர கலே, தபனன் - சூரிய கலே, பந்தனே - பாசத் தொடர்ச்சி, யோகத் துயில் - அறிதுயில்.

6. பொற்பு - அழகு, அனிகம் - சேனே, சர்ப்ப வெம்ப தாகை வேந்தன் - துரியோதனன், உற்பலம் - கருங்குவளே, சிற்பம் - விசித்திர வேலேப்பாடு, தவிசு - ஆசனம்.

7. விசயன் - அருச்சுனன், வேலே - சமயம், சிந்தையில் - மனுே வேகத்திலும், கடிய - விரைவுள்ள, பாத பங்கயம் - அடித் தாமரை, முந்துற - முன்னுக.

8. நின்றவன் - அருச்சுனன் (வினேயாலணேயும் பெயர்), இருந்த வேந்தன் - துரியோதனன், நேமி - சக்கரம், பாயல் - படுக்கை, மன்றல் - நறு மணம், தொடையல் - மாலே (தொழிலாகு பெயர்), உரம் - மார்பு, புல்லி - தழுவி.

9. இயம்புதிர் - சொல்லுவீர், மரு - தேன், துளபம் - துளசி, மரகதம் - பச்சைக்கல், செரு - போர், பொரு இல்லோய் - ஒப்பில்லாதவனே.

10. அமர் - சண்டையில், செய்வான் - செய்ய (வான் ஈற்று வினையெச்சம்), உதிட்டிரன் - தரும புத்திரன், சொற்றனம் -

சொன்னோம், ஆங்கண் - அவ்விடத்தில் (உபப்பிலாவிய நகரில்), வில் + திறல் = விற்றிறல், இலக்கு ஆனான் - எதிர்ப்பட்டான்.

11. முடைகமழ் - மணம் வீசுகின்ற, ஒழிதி-ஒழிவாயாக, பன்னகம் - பாம்பு, துவசம் - கொடி, பன்னகத்துவசன் - துரியோதனன், முகில் -கரியமேகம் போலும் நிறத்தை உடையவன் (கண்ணன்), நேர்ந்து - உடன்பட்டு, அடுபடை - கொல்லும் ஆயுதம் (வினைத்தொகை), அறைதி - சொல்லுவாய்.

12. ஆழி - சக்கரம், பொருபரி - சண்டை செய்யும் குதிரை (வினைத்தொகை), வெருவரும் - அஞ்சத் தக்க, விஞ்சையர்-வித்தியாதார், வரிசிலை - கட்டமைந்த வில், குழைய - வளைய, துமிப்பன் - வெட்டிவிடுவேன்.

13. அடர் - போர் செய்கின்ற, இசைத்தலும் - சொன்னவுடனே, அமலன் - குற்றமில்லாதவன் (கண்ணன்), பார்த்திபன்-அரசன் (துரியோதனன்), புரவி - குதிரை, திண் + தேர் = வலிய தேர், மிடை படை - நெருங்கிய ஆயுதங்கள்.

14. எம் முன் - எம் தமையன், தால கேது - பனைக் கொடியையுடையவன் (பலராமன்), செல்க - வியங்கோள் வினைமுற்று, மும்மை - மூன்றுகாலச் செய்கை.

15. அக்ரோணி - பெரிய எண் (யானை 21870, தேர் 21870, குதிரை 65610, காலாள் 109350 ஆக 218700 கொண்டது), மருது போழ்ந்திட்ட - (இரட்டை) மருத மரங்களை (இடுப்பில் உரலோடு புகுந்து) முறித்துத் தள்ளின, கண்ணன் முன்னோன் - பலராமன்.

16. சங்க வண்ணன் - சங்கு போன்ற வெண்மைநிறமுடையவன் (பலராமன்), இளவல் - தம்பி (கண்ணன்), மாற்றம்-சொல், வருக + என்று = வருகென்று-அகரம் தொகுத்தல் விகாரம்

17. ஆறிரு நாமத்தோன் - பன்னிரண்டு பெயர்களையுடைய கண்ணன் (கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விட்டுணு, மதுசூதனன், திருவிக்கிரமன், வாமனன், சீதரன், இருடிகேசன், பதுமநாபன், தாமோதரன்), ஐயிருநாமத்தோன் - பத்துப் பெயர்களையுடைய அருச்சுனன் (பார்த்தன், அருச்சுனன், கரியோன், விசயன், பாகசாதனி, சவ்வியசாசி, பற்குனன், தனஞ்சயன், கிரீடி, சுவேத வாகனன்), இருக்கை - இருப்பிடம் (தொழிலாகு பெயர்).

5. பெரிய புராணம்

1. சேதி நாடு - சேதி அரசர்களால் ஆளப்பட்ட நாடு (நடு நாடு); இது பண்ணுருட்டி, விழுப்புரம், திருக்கோவலூர், திருவண்ணுமலை முதலிய நகரங்களை உடையது. மலாடர் - மலை நாடர், கோமான் - அரசன், காதல் - அன்பு, ஈசர்க்கு அன்பர் கருத்து - சிவனடியார் உள்ளக் குறிப்பு.

2. அரசியல் நெறியின் வந்த - அரசாட்சிக்குரிய வழியி லிருந்தும் முறைமையாக வந்த, வழாமல் - தவருமல், வரை - மலை, மாற்றலர் - பகைவர், மாற்றி - அழித்து, முறை திறம்பாத- சொன்ன சொல் தவருத, நீர்மை - தன்மை, திரை - அலை, நீர்ச்சடையான் - கங்கையைத் தரித்த சடையையுடைய சிவன், சிந்தை செய்வார் - (மெய்ப்பொருள் என்று) எண்ணுவார்.

3. மங்கை - உமாதேவி, பாகம் - இடப்பாகம், நீடி - குறைவில்லாமல் நடித்து, ஏழ் இசை - ஏழு சுரங்கள் (குரல், துத் தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்), சிறப்பு - திருவிழா, மல்க - பெருக, நாயகர் - சிவபெருமான், அன்பர் தாள் - சிவ னடியார் திருவடிகள், சார்பு - துணை.

4. மாடு - பொன், நீடு செல்வம் - (நிலம் முதலிய) மிகுந்த செல்வங்கள். தில்லை - சிதம்பரம், மன்று - கனக (சபை), ஆவன - உரியன (வினையாலணையும் பெயர்), நாடிய - விரும்பிய.

5. இகல்திறம் புரிந்து - பகைத்து நின்று, அமர் - போர், ஓடை - நெற்றிப்பட்டம், பொரு பரி - போர் செய்கின்ற குதிரை (வினைத்தொகை), பரிபவம் - துன்பம் (அவமானம்).

6. இகலினல் - போரினல், அற்றம் - சமயம்.

7. வேணி - சடை, படை - உடைவாள், கரந்த-மறைத்து வைத்த, பொதி விளக்கே என்ன - கருமை நிறத்தைத் தன் னுள்ளே வைத்திருக்கும் விளக்கே போல, கறுப்பு - களங்கம், கவளிகை - புத்தகமும் எழுத்தாணியும் வைக்கும் பை.

8. மா - சிறந்த, வன்கணூன் - அஞ்சாமை உடையவன் (முத்தநாதன்), கோதை - மாலை, மாடம் - மேல் வீடு, அளகம் - கூந்தல், கொடி-கொடி போலும் பெண்டிர் (உவமையாகு பெயர்), ஆட - நாட்டியஞ் செய்ய, மறுகு - வீதி.

9. கடையுடைக்காவலாளர் - வாசலில் காவல் செய்தலை உடைய காவலாளிகள், உடையர் - நம்மை அடிமையாக உடைய

சிவனடியார், தனித்தடை - (நாயனுர்க்கு உயிர்க் காவலாகத்) தனியாக நின்ற காவலாளன் (தத்தன்), இடை - சமயம்.

10. உறுதி - உறுதிப் பொருள், புரவலன் - காத்தலில் வல்லஅரசன், மாடு - பக்கம், மன்றல் - நறு மணம், மாதேவி - அரசன் மனைவி.

11. கதுமென - விரைவாக, உணர்ந்து - தூக்கந்தெளிந்து, அண்டர் நாயகனுர் - சிவன், கொள்கையின் - (சிவனடியாரை வணங்க வேண்டிய) ஆகம விதிப்படி.

12. வாழ்வு - செல்வம், என் கொலோ - என்ன காரணமோ? 'ஆகமம்' என்பது, கோயில் அமைக்கும் முறை, குடமுழுக்கு, கோயில் வழிபாடு, திருவிழா முதலியவற்றைப்பற்றிக் கூறும் சாஸ்திரம்.

13. பேறு - செல்வம் (முதல் நிலை திரிந்த தொழிற்பெயர்), மாறு - குற்றம், அருள் செய்ய - (அந்த ஆகமத்தின் பொருளை) விளக்க, நாறு - மணம் கமழ்கின்ற, விளம்ப - சொல்ல

14. புரிவு - ஆசை, தவிசு - ஆசனம், இரு நிலம் - தரை.

15. புரிந்து - விரும்பி, பத்திரம் வாங்கி - உடைவாளைக்கையில் எடுத்து, நினைத்த அப்பரிசே - (தான்) எண்ணிய விதமே.

16. மறைத்தவன் - (பகைவன் என்பதை) மறைத்து வஞ்சனையாகச்சிவனடியார் வேடம்பூண்டவன் (முத்தநாதன்), மனம் அங்கு வைத்த - 'நம் அரசருக்கு என்ன ஆபத்து நேரிடுமோ!' என்று மனத்தை அவ்விடத்திலேயே செலுத்தியிருந்த, இறைப்பொழுது - சிறிது நேரம், நிறைத்த - நிறைந்த, குருதி - இரத்தம், சோர - வடிய, நமர் - நம்மவர்.

17. எய்தி - அடைந்து, தாதன் - பணிவிடை செய்பவன், தாங்கி - (நாயனுர் தலையைக் கையினுல்) தாங்கிக்கொண்டு, யாது நான் செய்கேன் - நான் செய்ய வேண்டிய பணி யாது?

18. பொய்த்தவன் - முத்தநாதன், புடை - பக்கம், ஆணை - கட்டளை.

19. செவ்விய நெறி - நல்ல வழி, கடந்து - தாண்டி, கை - கையில், வடி - கூர்மை, ஆள் உறு - மனிதர் சஞ்சரியாத.

20. செற்றவர் தம்மை - முத்தநாதனைக் கோபித்தவரை, தம் - சாரியை, சொல் திறம் கேட்க வேண்டி - உண்மை வார்த்தையைக் கேட்பதற்கு, குறிப்பில் நின்றுன் - தத்தன்.

21. ஐயன் - இறைவன், செய்தது - செய்த உபகாரம்.

22. அரசியல் ஆயத்தார்க்கும் - அரசாட்சி நடத்துகின்ற மந்திரி படைத் தலைவர் முதலானோர்க்கும் (ஆயம் - கூட்டம்), அழிவு உறும் - மனம் வருந்துகின்ற, காதலார் - மக்கள் உடன் பிறந்தார் முதலாயினோர், விரவிய - (தம் உள்ளத்தில்) பொருந்திய, செய்கை - கொள்கை, உய்ப்பீர் - காத்துவரக் கடவீர், பூங் கழல் - அழகிய திருவடி.

23. இமயப் பாவை - பார்வதி, துணைவனார் - சிவபெருமான், கண்டவாறு-(நாயனார் முன்பு) தியானித்த உருவமாகவே, கும்பிடுங் கொள்கை -(சிவபெருமானைக்) கும்பிட்டுக்கொண்டிருக்கும் பேறு, ஈந்தார் - கொடுத்தார்.

IV. சிறு நூல்கள்

கலைசைச் சிலேடை வெண்பா

1. பாவலர் -கவி பாடும் புலவர், இனம் - கூட்டம், காவலரைச் சூழும் - அரசரைச் சுற்றியிருக்கும், கா அலரைச் சூழும் - சோலையிலுள்ள பூவை ஆராயும், அரி வை அம்பு ஆக - திருமாலைக் கூரிய பாணமாக, அரண் ஒரு மூன்று - திரிபுரம், அரிவை - உமா தேவியாகிய பெண்ணை, அம் யாகம் - அழகிய இடப்பகுதி.

திருவேங்கட மாலை

2. காந்தள் - காந்தள் மலர், இரவலர் - யாசகர், கைஏற்ப- கை ஏந்திக்கொண்டு இருக்க, கொடைவேந்தன் என - கொடுக்கும் அரசனைப்போல, கான் - நறுமணம், மடங்கா - குறையாத, மார்வத்தார் - மார்பை உடையவர், நால் மடங்கு ஆம் ஆர்வத்தார் - நான்கு மடங்காகும் அருளுடையவர் (திருமால்).

திருவருணைக் கலம்பகம்

3. வார் - நீண்ட, சிலை - வில், மா தங்கம் - பெருமையுள்ள பொன் மயமான மேருமலை, கலை - ஆடை, மாதங்கம் - யானைத் தோல், மெய் - உடம்பு, மாது அங்கம் - உமா தேவியை இடப் பாகத்திற் கொண்டுள்ள உடல், ஐயம் - பிச்சை, அன்னம் - அன்னத்தின் வடிவங்கொண்ட பிரமன், அன்னம் - சோறு, ஐயமோ - சந்தேகமோ ?

4. கண்ணர் - திருமால், போதர் - பிரமர், திண்ணர் - திண்ணனர் என்னும் கண்ணப்ப நாயனர், அண்ணர் - பொருந்தாதவர் (பகைவர்).

அண்ணுமலையினுருவம் அன்பர்க்கே தெரியும்; அன்பிலார்க்குத் தெரியாது என்பது கருத்து.

மீனட்சியம்மை குறம்

5. குறம் - பிரபந்த வகைகளில் ஒன்று, திங்கள் - சந்திரன், தங்கு முயல் - வாழ்கின்ற முயல்கள், தமிழ் முனிவன் - அகத்தியன், அம் கயல் கண் அம்மை - மீனட்சி, தூங்கும் - பாயும்.

திருவேங்கடத்தந்தாதி

6. மாலைமதி-மாலை வேளையில் தோன்றும் பிறைச் சந்திரன், குஞ்சி - சடை, போதன் - பிரமன், வாசவன் - இந்திரன், அந்தி - மாலை, மதிக்குள் - அறிவில், ஏத்தும் - துதிக்கும், வேலை - கடல் (பாற்கடல்), மதிக்கும் - கடையும், உறை - வசிக்கிற.

அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்

7. கஞ்சம் - தாமரை, கிழத்தி - உரியவள் (மனைவி), காந்தன் - கணவன் (சூரியன்), தாமரைக்குக் கணவன் சூரியன் என்றபடி. சிறை செய்தவாறு - சக்கரத்தால் மறைத்தவழி, மனைவி - இலக்குமி, மகன் - பிரமன், மருகி - கலைமகள், சிறை செய்யும் - வெளியே வராவண்ணம் இதழ் குவித்துக்கொள்ளும், கேண்மை - உறவு, இறுதி நாள் - ஆயுள் முடிவு, பரிதி - சூரியன் (சக்கரம்), சோபானம் - படி, ஏக்குற்று - கவலை அடைந்து, பின்னல் கரும் பாம்பு - சடையாகிய கரிய பாம்பு (உருவகம்), கவலாது - வருந்தாமல். 'திருமால் அம்பிகையைக் காக்க,' என்பது கருத்து.

பாரதப் போரில் பதினன்காம் நாளில் அபிமன்னனைக் கொன்ற சயத்திரதனை 'அந்திபடு மவ்வளவில் ஆவி கவரேனேல் வெந்தழலில் வீழ்வன்,' என அருச்சுனன் சூளுரை கூறியதறிந்து, அன்றிரவு வரும் வரை மறைந்திருந்த அச்சயத்திரதன் வெளி வரும்படி கண்ணன் ஆழியாற் சூரியனை மறைத்தனன் என்பது பாரதக்கதை.

V. பல்வகைப் பொருள்

1. வேளாளர் சிறப்பு

1. தொழுங்குலம் - (பிறரால்) தொழப்படும் குலம் (அந்தணர் குலம்), சுடர் - ஒளி, உழுங்குலம் - வேளாளர் குலம்.

2. குழவி - குழந்தை, எழும் - உண்டாகின்ற, வீறி - மேம் படுவதனால், உலகம் - உலகத்தில், முதல்கரு - கருப்பம், கமலத்து அயன் - தாமரை மலரில் இருக்கும் பிரமன்.

3. விறல் - வெற்றி, நிதி - செல்வம், காராளர் - வேளாளர், கோது இல் - குற்றம் இல்லாத, நிகர் - ஒப்பு.

4. விழாக் கொளல் - சிறத்தல், பெருக்காளர் - வேளாளர், எறுழ்க்கரி - வலியயானைகள், மா - குதிரைகள், படை - காலாள்.

5. கலை அனைத்தும் - நூல்களெல்லாம், ஓதுவார் - படிப்ப வர், தலைக்கடை - கடைத்தலை (இலக்கணப் போலி), கோதை - மாலையை அணிந்த, கொழு - (கலப்பைக்) கார், யார் உரைக்க வல் லார் - எவர் எடுத்துச் சொல்ல வல்லவர்!

2. உடற்பயிற்சி

1. தழைக்கும் - மிகுகின்ற, குழவி - குழந்தை, உரம் - வலிமை, நோக்குவமேல் - பார்த்தறிந்தோமானால்.

2. உளம் - மனம், வளம் - வளப்பம்.

3. உரனை - வலிமையை, கொண்ட - சாப்பிட்ட, இரத்த மதாம் - இரத்தமாகும், இடர்ப்பாடு - துன்பம், எழில் - அழகு.

4. செப்ப அரிய - சொல்லுவதற்கருமையான, மெய் - உடம்பு, உளுத்துவிடும் - கெட்டுவிடும், வெப்பு - வெப்பம்.

5. கலை - நூல், ஓத - படிக்க, சொற்று - சொல்லி, எற்று - எத்தன்மைத்து?

3. தமிழ் மொழியின் சிறப்பு

1. ஓங்கல் - உதயகிரி (பொதிய மலை), உயர்ந்தோர் - மேலோர், ஏங்கு ஒலி - மிகுந்த ஒலி, நீர் ஞாலம் - நீரால் சூழப் பட்ட உலகம், இருள் - உலக இருள் (மனவிருளாகிய அறியாமை), தனி ஆழி - ஒற்றைச் சக்கரம், வெங்கதிர் - சூரியன், தன் நேர் இலாத - தனக்கு ஒப்பில்லாத.

2. உதியன் - சேரன், வரை - மலை, பொதியில் - பொதிய மலை, இளங்கால் - தென்றற்காற்று, மதுகரம் - வண்டு.

3. மா - பெருமை, மணி - இரத்தினம், ஏர் - அழகு, மிளிர்ந்திடு மங்கல நாண் - விளங்குகின்ற தாலிக்கயிறு, சுட்டி - ஒரு வகை ஆபரணம்.

4. காவியம் ஐந்து - சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணி மேகலை, வளையாபதி, குண்டலகேசி, கலன் - ஆபரணம் (கலம் என்பதன் கடைப்போலி), கம்பன் மொழியும் நூல் - கம்பராமா யணம், சங்கநூல் வெள்ளம் - பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலியன, ஆரம் - மாலை, விண் - ஆகாயம், மீன் - நட்சத்திரம், கரந்தை - கருந்திட்டைக்குடி (இங்கு ஒரு தமிழ்ச்சங்கம் தமிழ் வளர்ச்சிக்காகத் தொண்டு செய்கிறது).

4. சோலைக் காட்சி

இப்பகுதி மணிமேகலை என்னும் நூலில் உள்ளதாகும். தும்பி - வண்டு, குழல் - புல்லாங்குழல், பொங்கர்-சோலை, யாழ் - வீணை, விரை - வாசனை, துணை - பெண் அன்னம், பொய்கை - குளம், தோகை - ஆண் மயில், சிறை - சிறகு, கொட்பன - சுழலு வன்வற்றை, மணிவண்ணன் - கண்ணன், தம்முன் - பலராமன், பிஞ்ஞை - நப்பின்னைப் பிராட்டியார், குரவை - கைகோத்தாடும் ஒருவகைக் கூத்து, கோங்கு அலர் - கோங்கம்பூ, பொறி - புள்ளி, மஞ்ஞை - மயில், பாவை - பெண், அணிமலர் - அழகிய பூ, அக வயின் - நடுவிடம், பிணவுக் குரங்கு - பெண் குரங்கு, மடவோர் - மகளிர், கடுவன் - ஆண் குரங்கு, ஊக்குவது - ஆட்டுவது.

5. பாரதியார் பாடல்

1. பாமரர் - கல்லாதவர், பான்மை - குணம், நாமம் - பெயர், தேமதுரம் - தேனின் இனிமை.

2 இளங்கோ - சிலப்பதிகாரம் என்னும் நூலின் ஆசிரியர், சேமம் - க்ஷேமம்.

3. இறவாத - அழியாத, மகிமை - சிறப்பு, புலமை - அறிவு.

VI. தனிப்பாடல்கள்

1. வேழம் - யானை, மலை நாடு - சேர நாடு, மேதக்க - மேன்மை பொருந்திய, பூழியர் கோன் - பாண்டிய மன்னன், தென்னாடு - பாண்டி நாடு, தெள் நீர் - தெளிந்த நீர் நிறைந்த.

2. முகம் காட்டும் - தலையை நீட்டிக்காட்டும், (பார்த்தவர் முகச் சாயையைக் காட்டும்); பிண்ணாக்கு - (பிள் + நாக்கு) பிளவு பட்ட நாக்கு.

3. பெரியவிடம் - மிகுந்த நஞ்சு, (அரசர் திருமுகம் முதலிய) பெரிய இடங்கள்; பித்தர் - சிவபெருமான் (பைத்தியங் கொண்டவர்), அரி - காற்று, அரியுண்ணும் - அரியப்படும், மேல் உப்பும் - உடம்பு ஊதும், உப்புமேல் ஆடும் - உப்பிட்டுக் குலுக்கப்படும், எரிகுணம் ஆம் - கோபித்துச் சீறும் குணமுடையது ஆகும், (புண்ணிற் சாறுபட்டால்) எரியும் குணமுடையதாகும்.

4. சவை - சபை, மேதினி - பூமி, எண்ணார் - மதிக்கமாட்டார், நுவல் - சொல்லப்படுகிற, மால் - திருமால், பொன்னாடை - பீதாம்பரம், மகள் - இலக்குமி, ஆலாலம் - கொடிய நஞ்சு, அரன் - சிவன்.

5. செல் - மேகம் (போவாய்), நாமம் - பெயர், அல் - இருள், விண் - ஆகாயம்.

6. பூமாது - திருமகள், புவி மாது - நில மகள், பூதலம் - உலகம், நாமாது - கலைமகள், நல் + நாவலர் - நல்ல கவிவாணர், கோமான் - தலைவன், அழகு அமர் - அழகமைந்த, மால் - பெருமை, சீதக்காதி - ஒரு பிரபு, சீமான் - பெருஞ்செல்வன்.

7. குற்றிதைத்த - தறிஏறிய (முள் ஏறிய), கனகதண்டி - பொன் பல்லக்கு, பஞ்சு + அணை - பஞ்சு மெத்தை.

8. வெங்காயம் - கொடிதாகிய உடம்பு, சுக்கு ஆனால் - சுக்குப்போல் உலர்ந்தால், வெந்தை அத்தால் - கொடிய வினையினால், இச்சரக்கு - இவ்வுடம்பு, மங்காத - குறையாத, சீர் அகம் - சிறப்புள்ள இடம் (மோட்சம்), பெருங்காயம் - வலிமையான உடம்பு, ஏரகம் - திருவேரகம் (சுவாமி மலை), செட்டியார் - முருகர்.

VI. பொன் மொழிகள்

1. நாடு ஆக - நாடாக இருக்கட்டும், அவல் - பள்ளம், மிசை - மேடு, எவ்வழி - எவ்விடத்து, ஆடவர் - ஆண் மக்கள், நல்லை - நலமுடையாய், வாழிய - வியங்கோள் வினைமுற்று, நிலன்-கடைப்போலி, 'ஒன்றோ' என்பதிலுள்ள ஒகாரம், எண்ணிடைச் சொல்.

நிலத்தினிடத்து வாழ்வோர் இயல்பினாலன்றி நிலத்திற் சென்று தனியாக ஓரியல்பில்லை என்று நிலத்தை இழித்துக் கூறுவது போல, உலகத்தியற்கை கூறப்பட்டது.

2. துகிர் - பவளம், மன்னிய - நிலைபெற்ற, மா - பெரிய, பயந்த - தரப்பட்ட, காமரு - விரும்பத்தக்க, இடை பட - (ஒன்றற்கொன்று) இடைநிலமுண்டாக, சேய - நெடுந்தூரத்திலுள்ளவை, தொடை புணர்ந்து - மாலையாகச் சேர்த்து, அருவிலை - மிக்க விலை, நன்கலம் - நல்ல ஆபரணங்கள், அமைக்குங் காலை - செய்யுங்காலத்து, ஒருவழி - ஓரிடத்தில், சான்றோர் - பெரியோர், சான்றோர் பாலர் ஆப - பெரியோர் பக்கத்தர் ஆவர், சாலார் - அமைதி இல்லாதவர்.

3. உற்ற உழி - (துன்பம்) உண்டான இடத்து, உறுபொருள் - மிக்க பொருள் (உரிச்சொற்றொடர்), பிற்றை நிலை - பின்னின்று வணங்கும் நிலைமை, முனியாது - வெறுக்காமல், நன்று - அழகியது, ஒர் அன்ன - ஒரு தன்மையராகிய, உடன் வயிற்றுள்ளும்-ஒரு வயிற்றில் பிறந்தோரிலும், சிறப்பின் பாலால்-கல்விச் சிறப்பால், திரியும் - வேறுபடுவாள், ஆறு - (சென்ற) வழி, வேற்றுமை - வேறுபாடு, நால் பால் - நான்கு குலம், கீழ்ப்பால் - தாழ்ந்த குலம், அவன் - தாழ்ந்த குலத்தான்.

THE LIBERTY PRESS, G. T. MADRAS.